


கல்கி

KALKI 25.9.88 ரூ. 2.

குறைந்த முதலீடு;
வாழ்நாள் முழுதும்
வருமானம்!


nutrine BISCUITS
Assorted Cream
Chocolate Cream
Pineapple Cream
Elaichi Cream
Custard Cream
Orange Cream

இந்த விமானத்தில் அப்படி என்ன விசேஷம்?



சென்ற மாதம் 18 – ஆம் தேதி பிரிட்டனிலிருந்து புறப்பட்டு, இருபத்தி மூன்று நாட்களில் புதுதில்லி வந்து சேர்ந்த தொழிலதிபர் விஜய்பட் சிங்கானியா உபயோகித்த விமானம் —

மைக்ரோலைட் எனப்படும் ஃபைபர் விமானம். சிவப்பும் வெள்ளையுமாக இரு நிறம் கொண்டது. எடை 150 கிலோதான். ஐந்நூறு CC திறன் உள்ளது. (மொபெட்-ஐம்பது).

இந்தச் சிறிய ஒரு நபர் விமானத்தில் 125 லிட்டர் எரிபொருள்தான் ஒரு சமயத்தில் கொள்ளும். இந்த எரிபொருளை வைத்துக் கொண்டு ஏழு மணி நேரம் பறக்கலாம். மணிக்கு 70 கி. மீ. பறக்க முடியும்.

'பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில், ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 285 கி. மீ. தூரத்தைக் கடந்திருக்கிறார் சிங்கானியா. முந்தைய சாதனை 244 கி. மீ. தான்.

வழியில் உற்சாக வரவேற்பும், பாராட்டுக்களும் நிறையவே இருந்தன. ஜோர்டானிய விமானப்படைத் தளபதியே இவரது மைக்ரோலைட்டை எல்லாம் சரியாக இருக்கிறதா அன்று அக்கறையுடன் கவனித்தாராம். பத்தாயிரம் அடி உயரத்தில், இத்தாலிய ஆல்ப்ஸ் மலை மீதாகப் பறந்ததும், சவுதி அராபியப் பாலைவனத்துக்கு மேல் 120 டிகிரி வெயிலில் மணல் புயலில் சிக்கித் தவித்ததும் இவருக்கு மறக்க முடியாதவை. மெடிடரேனியன் கடல் மீது பறக்கும் போது எரிபொருள் கசிவு தெரிந்ததாம். விழுந்தால் எத்தனை சீக்கிரத்தில் வந்து காப்பாற்றுவார்கள் என்று யோசித்துக் கொண்டிருந்தாராம்! இப்போது கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போவது பற்றிப் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார்!

மைக்ரோலைட் விமானத்தில் பறப்பது அப்படி என்ன விசேஷமான சாதனை?

விங் கமாண்டர் பாலசந்தர் சொன்னார்:

"மைக்ரோலைட் விமானம் ஏறக்குறைய ஆரம்ப காலத்து விமானம் மாதிரிதான் இருக்கும். எடை வெகு குறைவு. நவீன நேவிகேட்டர் (வழிகாட்டிக் கருவி) கூட இருக்காது. மிக மிகக் குறைவான கருவிகளே இதில் இருக்கும். பாதுகாப்புக் கருவிகள் கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம். பாராசூட் கூடக் கிடையாது. ஓரளவுக்கு கிளைடர் மாதிரிதான் இருக்கும். கொஞ்சம் வேகமான காற்று அடித்தால் கூட ஆபத்துத்தான். இஞ்சின் ரொம்ப இலேசானது.

"சரி, புரொபெல்லர் ஏன் முன்னால் இல்லாமல் பின்னால் இருக்கிறது?"

"ரெனால்ட் கார்களில் இஞ்சின் பின்புறம் இருப்பதில்லையா? அதுமாதிரி, சௌகரியத்துக்காக வைத்துக் கொண்டதுதான். இவ்வளவு சிறிய விமானத்தில், புரொபெல்லர் முன்புறம் இருந்தால் சரியாகப் பார்க்க முடியாமல் தடுக்கும். அதற்காகப் பின்புறம் வைத்திருப்பார்கள். உந்துதல் சக்தியும் கிடைக்கும்.

"இத்தனை சிறிய விமானத்தில் தன்னந்தனியே பறப்பது என்றால் அதற்கு அசாத்தியத் துணிச்சல் வேண்டும். முப்பத்து நாலு நாட்களில் இதே தூரத்தைக் கடந்த முந்தைய சாதனையை முறியடித்துப் புதிய சாதனை செய்தது சாதாரண விஷயமல்ல!"

— சாருகேசி.



அடையில் தேனீக்கள்

குறைந்த முதலீடு:



வாழ்நாள் முழுதும் வருமானம்!

உருக்கிய பொன் போன்ற நிறம், மதுரமான மணம், தன்னிகரில்லாத தனிச்சுவை, போன்ற நற்குணங்களுக்காகத் தேனைப் பண்டைக் காலம் முதல் போற்றியும் புகழ்ந்தும் வந்துள்ளோம். பூஜைப் பொருளாகவும் மருந்தாகவும் உணவுப் பொருளாகவும் அதனைப் பயன்படுத்தியும் வருகிறோம். ஆனால், தேனீக்கள் வளர்த்து, தேன் சேகரித்து விற்பது ஒரு லாபகரமான தொழில் — குறிப்பாகக் கிராமப்புறங்களிலும் திறந்த வெளிப் பிரதேசங்களிலும் இதைச் செய்தால் மிகச் சிறந்த வருமானத்தைப் பெற முடியும் என்பது மிகச் சிலருக்கே தெரிந்த விஷயம். எனவே இத்தொழிலை ஊக்குவிக்க, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் முயற்சிகளை எடுத்து வரு

கிறது. வாரியத்தைச் சேர்ந்த ரசாளம் ஹென்றி தேனீ வளர்ப்புப் பற்றிக் கூறிய தகவல்களின் தொகுப்பு:

சாதாரணமாக, வீட்டுத் தென்னை மரங்களிலோ அல்லது வேறு உயர்ந்த இடத்திலோ தேனீக்கள் அடை அமைத்துக் கொத்தாகத் தொங்குவதை நாம் பார்க்கிறோம். இவை தேனீக்களுள் ஒரு வகையே. கண்ணுக்கு மறைவாக, இருண்ட மரப் பொந்துகளிலும் இருட்டான இடங்களிலும் அடைகட்டும் தேனீ வகை ஒன்று உண்டு. இவ்விடங்களில் அடுக்கடுக்காக அடை அமைப்பதால் அடுக்குத் தேனீ என்று அழைக்கப்படும் இவ்வகைத் தேனீக்களைத்தான் நாம் வளர்த்து, தேன் சேகரிக்க முடியும். இதர வகை தேனீக்கள் நமது கட்டுப்பாட்டுக்குள் அடங்க மாட்டா.

தேனீ வளர்க்க விரும்புவோர் பொந்துகளைத் தேடிக் கொண்டு போக வேண்டாம்; தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தை அணுகினால், அடுக்குத் தேனீக்கள் இயற்கையில் கட்டும் கூட்டைப் போன்ற அடக்கமான அமைப்பையுடைய மரப்பெட்டிகளை வாங்கலாம். ஒவ்வொரு பெட்டிக்குள்ளும் செவ்வக வடிவில், ஏழு மரச் சட்டங்கள் பொருத்தப்பட்டிருக்கும். அந்தச் சட்டங்களில் தேனீக்கள் அடை அமைத்துத் தேன் சேகரிக்கும்.


பெட்டிகள் வாங்குவோருக்குத் தேனடை மற்றும் தேனீக்களுடன் கூடிய சில சட்டங்களும் தரப்படுகின்றன. வீட்டுத் தோட்டத்தில், அதிக வெயில் இல்லாத இடமாகத் தேர்ந்தெடுத்து, பூமியிலிருந்து நான்கடி உயரத்துக்குக் கல் தூண் அல்லது கம்பு நட்டு அதன் மீது சட்டங்கள் அடங்கிய பெட்டியை வைக்க வேண்டும். நிலத்தில் கம்பைச் சுற்றிலும் சிமெண்டால் சிறிய, குழிவான, அகழி போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் எப்போதுமே தண்ணீர் இருக்குமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். எறும்பு, ஓணான்போன்றவை பெட்டிக்குள் செல்லாத வண்ணம் தடுக்க இந்த அகழி உதவும்.

மரப்பெட்டியில் இரண்டு அடுக்குகள் இருக்கும். முதலில், 'brood chamber' என்று அழைக்கப்படும் கீழ் அடுக்கின் ஏழு சட்டங்களிலும் தேனீக்கள் அடை அமைக்கும். அவற்றில் தேன் நிரம்பி விட்டால் மேலடுக்கான 'Super Chamber'—இல் அடைகட்டித் தேன் சேகரிக்க ஆரம்பிக்கும். கீழ் அடுக்கில் உள்ள தேன், தேனீக்களின் தினப்படி தேவைகளுக்குப் பயன்படும். மேலடுக்கு அதன் எதிர்காலச் சேமிப்புக்கென வைக்கப்படும். இந்தச் சேமிப்பு ஒதுக்கீட்டிலிருந்து தான் நாம் தேன் எடுத்துச் சேகரிக்கலாம். நாம் எடுக்க எடுக்க, தேனீக்கள் மேல் அடுக்கை நிரப்பிக் கொண்டேயிருக்கும்.


கீழடுக்கு நிரம்பும் தருணத்தில் நாமே அதிலிருந்து சில அடைத் துண்டங்களை வெட்டியெடுத்து மேலடுக்கில் உள்ள சட்டங்களில் பொருத்தினால் தேனீக்களுக்கு உதவிகரமாய் இருக்கும். கீழடுக்கின் முதல் மற்றும் ஏழாவது சட்டங்களிலிருந்து மட்டுமே அடையை வெட்டி எடுக்கலாம். இவை தவிர மற்ற ஐந்து சட்டங்களிலும் தேனீக் குஞ்சுகள் வளர்ந்து கொண்டிருக்கும் என்பதால் அவற்றைக் கலைக்கக் கூடாது. மேலடுக்கினுள் தேனீக்கள் பிரவேசித்து விட்டால் எல்லாச் சட்டங்களிலும் அடை அமைத்துத் தேன் நிரப்பப் பத்துப் பதினைந்து நாட்கள் ஆகும்.

தேனீக்கள் மலர்களிலிருந்து உறிஞ்சி வரும் தேனுடன் தங்கள் உமிழ் நீரைச் சேர்த்துக் கலவையாக்கி அடைகளில் சேமிக்கின்றன. அடைகள் நிரம்பியதும் தங்கள் உடலிலிருந்துஉற்பத்தியாகும்மெழுகைக்கொண்டு அவற்றை மூடி, 'சீல்' செய்து விடுகின்றன. பிறகு அவற்றின் மீது தங்கள் இறகுகளை வேகமாக அடித்து, அதன் மூலம் வெளிப்படும் உஷ்ணத்தால் தேனைக் கெட்டிப்படச் செய்கின்றன.

இவ்வாறு கெட்டிப்பட்டுப் பதமான நிலையை அடைந்த பிறகே நாம் அடைகளிலிருந்து தேனை எடுக்க வேண்டும். அவசரப்பட்டு முன்கூட்டியே எடுத்து விட்டால் தேன் நீர்த்து இருக்கும். பெட்டிகளிலிருந்து எடுத்த அடைகளை ஒரு கத்தியைக் கொண்டு லாகவமாகச் சீவினால், தேனீக்கள் அமைத்த 'சீல்' உடைபடும். பிறகு அடைகளைத் தேன் பிரிக்கும் கருவியினுள் செலுத்தி அதன் விசையை இயக்கினால் தேன் தனியே வெளி



* தேன் எடுக்கும் கருவி.



° பாதுகாப்பான பெட்டி.

யேறிவிடும். தேன் நீக்கிய அடைகளைத் திரும்பப் பெட்டிக்குள்ளேயே வைத்துவிட வேண்டும்.

பூக்கள் நிறைய மலரும் காலத்தில் அடைகள் சீக்கிரம் நிரம்பிவிடும். நகரங்களிலும் தாவர வளம் குறைந்த பகுதிகளிலும் தேன் உற்பத்தி குறைவாகவும் தாமதமாகவும் இருக்கும். அனுசரணையான சூழலில் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தேன் எடுக்கலாம். ரப்பர் மரப் பண்ணைகளில் தேனீக்கள் வளர்த்தால், மரங்கள் துளிர்க்கும் காலத்தில் ஐந்து முதல் எட்டு நாட்களுக்குள்ளாகவே அடைகள் நிரம்பிவிடும். ரப்பர் இலைத் துளிர்களிலிருந்து தேனீக்களுக்கு நிறைய glucon சத்து கிடைப்பதே இதற்குக் காரணம்.

நகரங்களில் பெட்டி ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று கிலோ தேனும் கிராமங்களில் ஐந்து முதல் பன்னிரண்டு கிலோ தேனும் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும். பக்குவமான பதத்தில் எடுக்கப்படும் தேன் ஒரு வருடத்துக்குக் கெடாமல் இருக்கும்.

பூக்கள் குறைவாக உள்ள பருவங்களிலும் தேனீக்கள் வெளியே சென்று தேன் சேகரிக்க இயலாத மழைக் காலங்களிலும் சிறிதளவு சர்க்கரையை நீரில் கரைத்து ஒரு பாட்டிலில் ஊற்றி அதன் வாயை ஒரு துணியால் கட்டி, பெட்டிக்குள் கவிழ்த்த நிலையில் வைத்தால் தேனீக்கள் அந்தப் பாகை உண்டு ஜீவிக்கும். மழைக்காலத்தில் பெட்டிகள் நனையாமல் காப்பதும் முக்கியம்.

இவ்வாறு தேனீக்களுக்கு மழைக் காலங்களில் உதவுவதைத் தவிர, வாரம் ஒரு முறை பெட்டிகளைத் திறந்து ஆராய்ந்து, சுத்தப்படுத்துவதும் அவசியம். பெட்டிகளை ஆராய்வதற்கு முன்னர் smoker என்ற கருவியைக் கொண்டு அவற்றுக்குள் புகையைச் செலுத்த வேண்டும். தகரத்தால் ஆன இக்கருவியின் அடியில் மண்ணெண்ணெயில் நனைத்த பழைய துணிகளை வைத்து எரித்தால் அதன் மேல் உள்ள மூக்குப் பகுதி வழியே புகை வெளிப்படும். புகை பட்டதும் தேனீக்கள் சற்று மயங்கி அடங்கியிருக்கும். பிறகு அலுங்காமல் ஒவ்வொரு சட்டமாக வெளியே எடுத்துப் பார்க்க வேண்டும். தேனீப் பெட்டிகளின் அருகே வேலை செய்யும் போது உடல் அசைவுகள் வேகமாகவோ அதிர்ச்சி தரும் வகையிலோ இருக்கக் கூடாது. நிதானமாக வேலை செய்யாவிட்டால் தேனீக்கள் தற்காப்பு உணர்வால் தூண்டப்பட்டுக் கொட்டிவிடும். தேனீக்கள் கொட்டினால் ஓரிரு தினங்களுக்கு வலி, வீக்கம் இருக்கலாம். மற்றபடி பெரிய பிரச்னை இராது. இதற்கு மாற்று மருந்து ஏதும் உபயோகிக்காமல் இருப்பது நல்லது.

சட்டங்களில் அடை கட்டும் தேனீக்கள் சில சமயம் அடைகளைக் கோணலாக அமைக்கும். அவற்றைத் திருத்திச் சீராக்க வேண்டும். அடை கட்டுவதற்குத் தேனீக்கள் உபயோகிக்கும் மெழுகும் பிற கழிவுகளும் பெட்டியின் தரைப் பகுதியில் சிந்தும். இவற்றை அவ்வப்போது அப்புறப்படுத்திப் பெட்டியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் wax moth என்ற பூச்சி, சிந்திய மெழுகில் முட்டையிட்டுப் பல்கிப் பெருகி அடைகளை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு ராணித் தேனீ இருக்கும். இந்தத் தலைவித் தேனீயைத் தவிர உழைப்பாளித் தேனீக்களும், ஆண் தேனீக்களும் ஒவ்வொரு கூட்டிலும் உண்டு. ராணித் தேனீயின் வேலை முட்டை இடுவது மட்டுமே. ஆண் தேனீக்கள் எந்த வேலையும் செய்வதில்லை. உழைப்பாளித் தேனீக்கள் என்று அழைக்கப்படும் பருவமடையாத பெண் தேனீக்கள்தான் அடை கட்டுவதிலும் தேன் சேகரிப்பதிலும் ராணி இடும் முட்டையிலிருந்து வெளிப்படும் குஞ்சுகளைப் பராமரிப்பதிலும் ஈடுபடுகின்றன. இந்த உழைப்பாளித் தேனீக்கள் royal jelly எனப்படும் ராஜ உணவை உற்பத்தி செய்து ஒரு குஞ்சுக்கு அளிக்கின்றன. இந்த உணவைப் பெறும் குஞ்சு மட்டுமே ராணித் தேனீயாக உருவாகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட ராணித் தேனீக்கள் ஒரு பெட்டியில் இருந்தால் தேனீக்கள் பிரிந்து, ஒவ்வொரு ராணியுடனும் கூட்டமாக வெளியேறிச் சிதறி

1984 ஒலிம்பிக் ஒளி விளக்கு
ஏற்றிய போது —
அன்று சக்தி செயலில் இறங்கியது.



1988 ஒலிம்பிக் ஒளிவிளக்கு
சியோலில் ஏற்றப்படும் இன்று
சக்தி நிதித்துறையில் சாதனைகள்
அனைத்தையும் முறியடித்து விட்டது.

பந்தயப் பாதையில் 46 மாதச் சாதனை:*

சக்தி பைனான்ஸ் நிறுவனம்
தனது டெபாசிட்டுகளின் மதிப்பு

ரூ. 50 கோடிகள்

என்ற அளவைத் தாண்டியுள்ளன
என்பதைப் பெருமையுடனும், இதற்குக் காரணமான

1,00,000 க்கும்


மேற்பட்ட டெபாசிட்தாரர்களுக்கு தங்களது
நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.
இச்சாதனையில் இதற்குத்தொழிற்துறையில்

இரண்டாவது இடம்

கிட்டியுள்ளது.


இது இந்நாட்டின் பொருளாதாரத்தின்
முதுகெலும்பென பெருமளவு நடுத்தர வர்க்கத்தினருக்கு
இந்நிறுவனம் உதவ வகை செய்துள்ளது.

புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன



3,500 வாகனங்களுக்கு
கடன் தொகை ரூ.42 கோடிகள்
வரை அளிக்கப்பட்டுள்ளது.
இதனால் சுமார் 70,000 பேருக்கு
வேலை வாய்ப்புகள் கிட்டியுள்ளன.

35,000 நுகர்வோர் கடன் ரூ.25 கோடிகள்
வரை வழங்கப்பட்டுள்ளன. இதனால்
குடும்பத்தினர் பலர் அல்லது சுமார்
1,75,000 மக்கள் தங்கள் வாழ்க்கை
தரத்தை சீர்தூக்கிக் கொள்ள முடிந்தது.



இவையெல்லாம் தொழில்துறை வளர்ச்சிக்கும் உற்பத்தி உயர்வுக்கும்
வேலை வாய்ப்புகள் பெருகுவதற்கும் தூண்டு கோலாக உள்ளன.

SAKTHI FINANCE LIMITED

சக்தி பைனான்ஸ் லிமிடெட்

நிர்வாகத் தலைவர்: எஸ்.என். பை
475, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர் — 641 018.

* 15.9.88 அன்று உள்ளபடி

In just 4 years, a near- Olympian feat

UIPC SF 10 88



daCunha/TT/4/88 TAM

பூ இல்லாத பருவங்களில் தேன் உற்பத்தி குறையாமல் இருக்கத் தேனீக்களுக்கு நிறைய சர்க்கரை பாகு அளித்து வருகிறார்கள் மெர்க்காராவில் (கர்நாடகா). இதனால் தேனின் சுவையும் குணமும் மாறுபடுவது உறுதி. இவ்வாறு பெறப்படும் தேன் இயல்பான குணங்களை இழந்து விடுவதால் இம்முறை ஊக்குவிக்கப்படலாமா என்பது கேள்விக்குரியது. மேலும் சர்க்கரைச் சத்து தவிர்க்க வேண்டிய சில நோயாளிகளுக்கு இத்தகைய தேன் உதவாது.

விடும். அவை இவ்வாறு சிதறிப் போகாமல் தடுக்க நாமே அடைகளைப் பிரித்து ராணியுடன் சேர்த்துப் பெட்டிகளில் வைக்கலாம். அளவுக்கதிகமாக ராணித் தேனீக்கள் உருவாவதைத் தடுக்க அவை வளரும் கூடுகளை அடையாளம் கண்டு நீக்கிவிடலாம். ராணித் தேனீக்கள் வளரும் 'செல்கள்' விரல் போன்ற தொங்கும் அமைப்புக்களாக இருக்கும். இவற்றைக் கிள்ளி எறிந்துவிட வேண்டும்.


கிராமங்களில் வசிப்பவர்களுக்குக் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் தேனீ வளர்ப்பதற்கான பெட்டிகளைக் குறைந்த விலையில் (subsidised) தருகிறது. பத்து பெட்டிகள், தேன் எடுக்கும் கருவி, புகைக் கருவி, கத்தி, பெட்டிகளை நிறுத்தக் கட்டைகள் ஆகிய எல்லாம் சேர்ந்து சுமார் ரூ. 1500—க்குக் கிடைக்கும்.

சரியான கண்காணிப்பும் தகுந்த சுற்றுப்புறச் சூழலும் இருந்தால், ஒவ்வொரு வருடமும் பெட்டி ஒன்றிலிருந்து சராசரியாகப் பத்து கிலோ தேன் கிடைக்கும். ஒரு கிலோ தேனை வாரியம் இருபது ரூபாய்க்கு வாங்கிக் கொள்கிறது. ஆக, பத்து பெட்டிகள் வைத்துத் தேன் எடுப்போர் முதல் ஆண்டு நிகர லாபமாக ஐந்நூறு ரூபாயும் பின்வரும் ஆண்டுகளில், மறுமுதலீடு எதுவுமே இல்லாமல் சுளையாக இரண்டாயிரம் ரூபாயும் பெற முடியும். முனைப்புடன் இத்தொழிலில் இறங்கும் ஒரு நபர் நூறு பெட்டிகள் வரை வைத்துத் தேன் சேகரிக்கலாம். குறைந்த எண்ணிக்கையில் பெட்டிகளை வைத்துக் கொண்டு உப தொழிலாகவும் இதைச் செய்யலாம். இதற்கு அதிக உழைப்போ நேரமோ செலவிடத் தேவையில்லை. ஆரம்பத்தில் கூர்ந்த கவனமும் மனப்பூர்வமான ஈடுபாடும் அவசியம். போகப் போகக் கிடைக்கும் அனுபவ பூர்வமான அறிவு இத்தொழிலில் வெற்றியைத் தேடித் தரும். மேலும், ஒரு முறை செய்யும் முதலீட்டுத் தொகை தவிர, கணிசமான செலவு எதுவும் தேனீ வளர்ப்பதில் ஏற்படாது. ஆனால் வருமானமோ ஆயுள் முழுவதும் கிடைத்துக் கொண்டே இருக்கும். தேன் விற்றுக் கிடைக்கும் காசு திகட்டவா போகிறது?!

— சீதா ரவி.

அட்டை வண்ணப்படம் மற்றும் புகைப் படங்கள்: **கே. வி. ஆனந்த்.**

நன்றி: **சில்ட்ரன்ஸ் கார்டன் ஸ்கூல் பண்ணை**



"உள்கட்சி ஜனநாயகம்னா என்னங்க?"

"கட்சியில் ஒருத்தர் செய்கிற ஊழலை இன்னொருத்தர் ஆதாரத்தோட தெரிந்து வைத்திருப்பது தான்..."

— மணியன் தர்மலிங்கம்.

"எதுக்குங்க இந்தப் படத்துல சாலை வளைவை அடிக்கடி காட்டறாங்க...?"

"சமூகத்தில ஒரு திருப்பத்தை இந்தப் படம் ஏற்படுத்தும்னு டைரக்டர் நினைக்கிறாராம்... அதை 'சிம்பாலிக்கா' காட்டுறாங்க...!"

— ஏ. ஆர். வீரராகவன்.




அபாயம்!
புதைசேறு
இதிலிருந்து மீண்டு வெளியேறினால் போதும்!
• வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைப்பு
• தேர்தல் அறிவிப்பு
• 5 நாட்கள் போர் நிறுத்தம்
இந்திய இலங்கை ஒப்பந்தம்
அனைத்திந்திய பத்திரிகையாளர்
அவதூறு சட்டம் வாபஸ் பெறுக! பேச்சு வார்த்தை இல்லை!
பேச்சு வார்த்தைக்கு வருகிறேன்!
அகில இந்திய செய்தி பத்திரிகை ஆசிரியர் மாநாடு
தேசிய முன்னணி தலைவர்கள்
தமிழன்
அடேங்கப்பா! இதுக்குத்தானா பேரணி!



ஓம் **கல்கி**

1988 செப்டம்பர் 25
மலர் 47 இதழ் 8
விபவ புரட்டாசி 9



திவாலா நிலையை நோக்கி...

ஒரு நிறுவனம் அல்லது தனி நபர் தன்னிடம் உள்ள சொத்துக்களை விடவும் அதிகமாகக் கடன் வாங்க நினைத்தால் முடியுமா? நடக்காதுதான். ஆனால் அரசாங்கமே இப்படி கடன் வாங்க ஆரம்பித்தால்...? அப்படியெல்லாம் முட்டாள்தனமாக ஓர் அரசாங்கம் நடந்து கொள்ளாது என்று நீங்கள் எண்ணினால் நமது பாரத அரசின் அபார அசட்டுத்தனத்தைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அர்த்தம்! நமது அரசின் மிக அதிகமான கடன் வாங்கும் ஆசை காரணமாக, 80—81—இல் சொத்துக்கு மேல் கடன் 79 கோடி ரூபாயாக இருந்தது. அதுவே 86—87—இல் 22,477 கோடியாக உயர்ந்து விட்டது! 88—89—இல் இது 40,079 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது! இவ்வாறு அபரிமிதமான கடன் வாங்குவதால் பாரத அரசு அசலையோ வட்டியையோ திருப்பித்தரத் திணறும் நிலை ஏற்படும் என்று எச்சரிப்பது நாமல்ல; பாரதக் குடியரசின் ஆடிட்டர் ஜெனரல்!

ஒவ்வொரு நிறுவனத்துக்கும் கணக்கு வழக்குகளைச் சரிபார்க்க ஆடிட்டர் இருப்பது போல இந்திய அரசுக்கும் உண்டு. இவரைத்தான் ஆடிட்டர் ஜெனரல் என அழைக்கிறோம். இவரது பணி விருப்பு வெறுப்பு இன்றியும் அச்சமின்றியும் நடக்க வேண்டும் என்பதால், இவர் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே கட்டுப்பட்டவராகிறார். பிரதமரோ, இதர அமைச்சர்களோ இவரைப் பிடிக்கவில்லை என்று பதவி நீக்கம் செய்ய முடியாது. நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பங்கு வோட்டுத்தான் இவரை வீட்டுக்கு அனுப்ப முடியும்! இத்தகைய உன்னத நிலையில் இருக்கும் ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையொன்று ஜூலை இறுதியில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் பல திடுக்கிட வைக்கும் தகவல்களும் எச்சரிக்கைகளும் உள்ளன.

பாரத அரசின் மொத்த கடன் சுமை 80—81—இல் 59,749 கோடி ரூபாயாக இருந்தது. அதுவே 86—87—இல் 1,66,546 கோடியாக உயர்ந்திருக்கிறது! அயல்நாட்டுக் கடன்கள் 80—81—இல் 11,298 கோடியாக இருந்தது; 86—87—இல் 20,299 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது! இதிலே வெட்கக்கேடு என்னவென்றால் நமக்குத் தரப்பட்ட அந்நியக் கடன்கள் பலவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ளவே இல்லை! ஆனால் பயன்படுத்திக் கொள்ளாத போதிலும் ஒப்பந்தப்படி அவற்றுக்கு "சர்வீஸ் சார்ஜ்" என்று ஏராளமான தொகைகளைத் தந்து வருகிறோம்!

ஒரு நாடு தன் அபிவிருத்திப் பணிகளுக்காகக் கடன் வாங்குவது சகஜம்தான். ஆனால் வாங்குகிற கடனை உடனுக்குடன் லாபகரமான தொழில்களில் முதலீடு செய்து, வேலை வாய்ப்புக்களைப் பெருக்குவதோடு, தொழில்—பொருளாதார மேம்பாட்டுக்கும் உதவ வேண்டும். உள்நாட்டுக் கடனானாலும் அயல்நாட்டுக் கடனானாலும் இவ்வாறு பொருளாதாரத்தைத் திறம்பட நிர்வகிக்காது போனால் திவாலா நிலைமையை நோக்கித்தான் நாடு வேகமாக முன்னேறும்.

88—89—இல் அரசு உள்நாட்டில் மக்களிடம் 7000 கோடி கடன் வாங்கப் போகிறது. ஆனால் அது ஏற்கெனவே வாங்கியுள்ள கடனுக்கு இந்த ஆண்டில் உள்நாட்டில் தரவேண்டிய வட்டியே 7027 கோடியாகும் என்று ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை அவல நிலைமையைச் சுட்டிக்காட்டுகிறது!

கிடைக்கிற வருவாயையும், வாங்குகிற கடனையும் அரசு திறம்பட நிர்வகிக்கவில்லை என்பதற்கு அறிக்கையில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று: ஆறாவது திட்டத்தின் தொடக்கம் முதல் உற்பத்திக்கு உதவாத இனங்களில் செலவு 19.2 சதவிதம் என்ற அளவில் ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து வந்துள்ளது. உற்பத்திக்கு உதவும் இனங்களில் செலவு 17.4 சதவிதம் என்ற அளவில்தான் உயர்ந்திருக்கிறது!

நிலைமையைச் சீர்திருத்தப் பல யோசனைகளையும் அறிக்கை கூறுகிறது. ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொள்வதுடன் இறக்குமதியைக் குறைத்து அப்பொருள்களை இங்கேயே தயாரிக்க ஊக்கமளிப்பது; அரசுச் செலவினங்களில் சிக்கனத்தைக் கையாண்டு உபரி பட்ஜெட்டுக்கு முயற்சி மேற்கொள்வது; உற்பத்திக்கு உதவாத இனங்களில் செலவுகளைக் கணிசமாக வெட்டுவது; பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் செயல்திறனைக் கண்காணித்து அவற்றை லாபகரமாக இயங்கச் செய்வது என்பது போன்ற பல யோசனைகள். ஆனால் நாடாளுமன்றத்தில் உள்ள மிருகபல மெஜாரிட்டி காரணமாக ஆணவம் கொண்டுள்ள அரசு இந்தப் பரிந்துரைகளைக் கவனிக்கவா போகிறது? குளுகுளு அறையில் சுகிக்கும் அமைச்சர்களுக்குக் கவலை ஏது? வட்டி, வட்டிக்கு வட்டி என்று அரசு தரும்போது வரிச்சுமை, பணவீக்கம், ரூபாயின் மதிப்பு இழப்பு, விலைவாசி உயர்வு இவற்றால் சராசரி குடிமகன்தான் தத்தளிக்கப் போகிறான்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



தொடுவான மனிதர்கள் 1

சடாரென்று யாரோ உலுக்கி எழுப்பிய மாதிரி விழிப்பு வந்தது ராதிகாவிற்கு. எழுந்து பாயில் உட்கார்ந்த போதே சமையற்கட்டிலிருந்து தீனமான அழுகைக் குரல் கேட்டது. அன்று அதிகாலையிலேயே அம்மா தன் புலம்பலை ஆரம்பித்து விட்டது புரிந்தது. சட்டென்று இவளுக்குள் ஒரு கோபம் படர்ந்தது. இன்னும் எத்தனை வருஷத்திற்கு அம்மா இப்படி அழுது கொண்டிருக்கப் போகிறாள் என்று தோன்றியது. அப்பா போய்க் கிட்டத்தட்ட மூன்று வருஷங்களாகப் போகின்றன. நாள் தவறாமல் அம்மா சமையலறை மூலையில் முடங்கி அழுது புலம்புகிறாள்; வயிற்றெரிச்சல் தாங்காமல் புலம்புகிறாள்; ஹிஸ்டீரியா நோயாளியாகவே மாறி விட்டாள்!

அம்மா தலையில் அடித்துக் கொண்டு கத்த ஆரம்பித்தால் தம்பிகள் இரண்டு பேரும் பயந்து போகிறார்கள். 'இன்னிக்கும் ஆரம்பிச்சுட்டாக்கா... பயமா இருக்குக்கா... நீ இன்னிக்கு வேலைக்குப் போகாதக்கா... நீ போயிட்டியானா அம்மாகிட்டப் போய்ச் சாதம் போடுன்னு கேட்கக் கூட முடியாதுக்கா. கேட்டால், 'நீங்க கெட்ட கேட்டுக்குச் சாதம்தான் பாக்கி'ன்னு முதுகில விழும் அக்கா...'

— பத்து வயதும், பதின்மூன்று வயதுமான அவர்கள் தன்னிடம் அவ்வாறு ஒடுங்குவதைப் பார்க்கிற போது இவளுக்குப் பரிதாபமாக இருக்கும். அந்த வயதில் தானும் அதே மாதிரி அப்பா அம்மா போடும் சண்டைக்குப் பயந்து சுவரோடு சுவராக ஒட்டிக்



கொண்டது நினைவிற்கு வரும். இப்போது இவர்களுக்குத் தான் இதமாக இருக்கிற மாதிரி அப்போது அவளுக்கு யாரும் இருக்கவில்லை...

இப்போது மட்டுமென்ன, மூத்தவள் என்பதால் குடும்பத்தைத் தாங்குகிறாள். அவள் முகத்தின் சிரிப்பை நிரந்தரமாகப் பறித்துக் கொண்டு போய் விட்டிருந்தது அந்தச் சுமை. பத்தொன்பது வயதிற்கு மீறின அலுப்பை வெளிப்படுத்தின கண்கள். முகம் அழகாய், குழந்தைத்தனம் மாறாததாய் இருந்தாலும் கூட அசோகவனத்துச் சீதை மாதிரி கூடவே ஒரு சோகமும் வந்து கப்பிக் கொண்டிருந்தது.

'என்ன ராதி நீ... எதுக்குமேவா சிரிக்க மாட்டே...?'

என்று அவள் வேலை செய்த இடங்களில் அலுத்துக் கொள்கிற அளவிற்குச் சிரிப்பு மறந்து போயிருந்தது.

அதையெல்லாம் நினைத்துத் தன்னைப் போலவே தம்பிகளும் மாறிவிடப் போகிறார்களே என்ற பயத்தில் அம்மாவை விட அவர்களின் மீது ஏற்பட்ட அனுதாபம் அதிகமாக, எத்தனையோ தரம் அம்மாவிடம் சண்டை போட்டிருக்கிறாள்.

"ஏம்மா... நீ செய்யறது உனக்கே நன்னாயிருக்கா...? அப்பா என்ன செத்தா போயிட்டார், நீ இப்படி எப்பப் பார்த்தாலும் ஒப்பாரி வைக்க...?"

— கடுமையான வார்த்தைகள்; வேறு வழியில்லாமல்தான் சொல்வாள். அவளாலேயே தாங்க முடியாமல்தான் பொருமுவாள்.

அது போதுமானதாக இருக்கும் அம்மாவுக்கு. சுரீரென்று நெருப்பு பட்ட மாதிரி நிமிர்வாள்.

"அந்தப் பாவி... அப்படிப் போயிருந்தாக் கூட நான் 'அழமாட்டேண்டி..." என்று புலம்புவாள்.

என்ன காரணத்தினாலோ ஆரம்பத்திலிருந்து அப்பாவுக்கும், அம்மாவுக்கும் சரிப்பட்டு வரவில்லை. விவரம் தெரிந்த நாள் முதலாக இவள் அப்பாவிடம் அம்மா அடி வாங்குவதைப் பார்த்திருக்கிறாள். கமலி, கமலி என்று யாரோ ஒருத்தியின் பெயர் இடையிடையே அடிபடுவதைக் கேட்டிருக்கிறாள். ஒட்டி உலர்ந்து, நிறம் கூட அதிகமற்ற ஒரு பெண்ணை அப்பா தன்னுடன் வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறார். அவளுக்கும் சேர்த்துச் சாதம் போடச் சொல்லி, டிபன் காப்பி தரச் சொல்லி அம்மாவை வற்புறுத்தியிருக்கிறார். அம்மா முடியவே முடியாது என்று அத்தனை அடி உதைகளையும் வாங்கிக் கொண்டு அழிச்சாட்டியமாய் உட்கார்ந்திருக்கிறாள்.

அந்தக் கமலியுடன்தான் அப்பா ஓடிப் போனார். இவள் கல்லூரியில் காலடி எடுத்து வைத்த ஒரு வாரத்திற்கெல்லாம் அப்பாவின் ஓடிப் போன வைபவம் நடந்தது. போனவர் சும்மாப் போகவில்லை. அம்மாவைச் சேர்ந்த அத்தனை உறவுக்காரர்களுக்கும், ஒருத்தர் தவறாமல் கடிதம் எழுதிப் போட்டுவிட்டுப் போயிருந்தார்.

'உங்கள் ஜனகலக்ஷ்மியின் நடத்தை சரியில்லை. பிறந்த அந்த மூன்று குழந்தைகள் கூட என்னுடையதாகத் தெரியவில்லை. சொல்லிச் சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. இதற்கு மேல் பொறுத்துக் கொள்கிற சக்தியில்லாததால் நான் போகிறேன். இனி ஒரு போதும் அவளிடம் திரும்ப மாட்டேன்.

இப்படிக்கு,
கிருஷ்ணமூர்த்தி

இந்துமதி

கடிதம் கிடைத்ததும் அம்மாவின் அண்ணாவும், மன்னியும், பாட்டியை அழைத்துக் கொண்டு மன்னார்குடியிலிருந்து ஓடி வந்தார்கள். கடிதத்தில் இருப்பது நிஜமா என்று துறுவித் துறுவிக் கேட்டார்கள். இல்லை, இல்லை என்று கதறிக் கதறி அழுத அம்மா, மூன்றாம் நாள் காலையில் மன்னியின் குத்தல் வார்த்தைகளைப் பொறுக்க முடியாதவளாக —

"ஆமாம். நிஜம்தான். அந்த மனுஷன் எழுதின கடுதாசியில் இருக்கிறதெல்லாம் வரிக்கு வரி நிஜம். போறுமா...? திருப்தியாயிடுத்தா? இதுதானே வேணும் உங்களுக்கு...? இனிமேல நீங்க ஊருக்குக் கிளம்பிப்போகலாம்'' என்று வெறி பிடித்தமாதிரி கத்த —

அதற்காகவே காத்திருந்த மாதிரி அவர்கள் ஊருக்குக் கிளம்பினார்கள். 'அதுதானே பார்த்தேன். நெருப்பில்லாமல் புகையாது. என்னதான் இருந்தாலும் வயசுக்கு வந்த பொண்ணையும், மணி, மணியா ரெண்டு பையன்களையும் விட்டு ஒரு மனுஷன் இப்படி ஓடிப் போவானா என்ன...? அதுக்கு ஏதோ காரணமிருக்கணும்னு நான் நினைச்சது சரியாப் போயிடுத்து...!' — இது அம்மாவின் மன்னி!

இதப் பாரு இன்னிலேருந்து நீ எனக்குத் தங்கையில்லேன்னு தலைமுழுகியாச்சு... அம்மா... நீ என்ன எங்க கூட வரப் போறியா, இல்லையா...?'' — என்று அண்ணா கேட்ட போது, பாட்டி தான் பெற்ற பிள்ளையை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரி பார்த்தாள். எங்கே மூன்று குழந்தைகளோடு இந்தக் குடும்பத்தைத் தன் தலையில் கட்டி விடுவார்களோ என்ற பயத்தில் மனம் ஏற்காத வார்த்தைகளை அவன் சொல்லி விட்டுப் போவது தெரிந்தது. கால் வினாடிப் பார்வைதான். பின்னர் அந்தப் பார்வைக்குக் கூட நீ தகுதியில்லை என்கிறாற்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு பட்டு கத்தரிக்கிற குரலில் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்:

"நான் வரலை. நீ போகலாம். அப்படியே எனக்கும் சேர்த்துத் தலைமுழுகிட்டியானா இன்னும் நல்லது...


அன்றிலிருந்து பாட்டி கூடவே இருக்கிறாள். அம்மாவைப் போல் மூலையில் முடங்கி முனகிக் கொண்டிருக்காமல் திடமாய், தீர்க்கமாய் இயங்குகிறாள். அடிக்கடி இவள் மனம் உடைகிற போது, 'என்ன பாட்டி வாழ்க்கை இது. சட்டுன்னு முடிஞ்சு போயிடக் கூடாதான்னு இருக்கு பாட்டி...' என்று சலித்துக் கொள்கிற போதெல்லாம் ஒரு சினேகிதி மாதிரி ஆறுதல் சொல்கிறாள்.

'அடி அசடே... இதுக்கா இப்படி மனசு உடைஞ்சு போறது...? தாங்கக் கூடியவளா பொறுக்கிப் பொறுக்கிப் பார்த்துத்தான் ஸ்வாமி கஷ்டங்களைத் தர்றார். உன்னால் முடியும். சமாளிப்பேங்கிறது அவருக்குத் தெரியாதா என்ன...? செத்துப் போறதுல என்ன இருக்கு? சுலபமான விஷயம். எதிர் நீச்சல் போட்டு வாழுறதுலதான் விஷயமிருக்கு. நீயும் உங்கம்மா மாதிரி உடைஞ்சு போயிட்டா உன் காலையே கட்டிண்டு வளைய வருதே... அந்த ரெண்டையும் யார் காப்பாத்துவா...? யார் படிக்க வைப்பா சொல்லு...? உங்க மாமா, மாமி முன்னால 'எங்களாலேயும் தலை எடுக்க முடியும்' பார்னு நீ இந்தக் குடும்பத்தை நிமிர்த்திக் காட்ட வேணாம்? அதை விட்டுட்டுப் போயிடறதா பெரிசு...?'

பாட்டி மகா விவேகி! மழித்த தலையும், நார் மடிப் புடைவையும், கையில் ஜெபமணி மாலையுமாக இருந்தாலும் முற்போக்குவாதி. மனித உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் அவளுக்குக் கைவந்த கலை. எல்லாரையும் அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் அவளுக்கே உரிய லாகவம். இவளைப் பொறுத்தவரை இவளது ஆத்ம சினேகிதி பாட்டிதான்.

இவள் அம்மாவின் எதிரில் நின்று அடக்க மாட்டாமல் கேள்விகள் கேட்கிற போதெல்லாம் பாட்டி வெறும் சாட்சியாய், மௌனமாய் நின்று கொண்டிருப்பாளே தவிர நடுவில் குறுக்கிட்டு ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள்.

''ஏம்மா... நான் கேட்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே... அப்பா நம்ம பேரில் அன்பு இல்லாததாலே தானே ஓடிப் போனார்? இருந்திருந்தா



போயிருக்க மாட்டார்ன்றது தெரியறதில்ல...? இல்லாத ஒண்ணைப் பிடிச்சுண்டு இருந்திருக்கக் கூடாதான்னு ஏக்கப்பட்டு அழுதுண்டிருக்கிறதுல என்ன லாபம் சொல்லு...? அதைவிட இப்ப என்ன ஆகணுமோ அதைப் பார்க்கலாமில்ல...? நீ அழறதையும், புலம்பறதையும் பார்த்து, சிவாவும், சாமினாதனும், பயந்து நடுங்கிச் செத்துப் போறா... அவாளுக்காகவாவது நீ கொஞ்சம் சும்மாயிருக்கக் கூடாதாம்மா...?''

அவ்வளவுதான். அம்மா இன்னமும் பிடித்துக் கொண்டு விடுவாள். சுயபரிதாபத்தில் புலம்பல் இன்னும் அதிகமாகும்...

''ஆமாண்டி... உங்களுக்காக நான் வாயடைச்சுண்டு இருந்து இருந்துதான் இப்போ இப்படி மூலைல நிக்கறேன்...... என் வாயை அடைக்கிறது தவிர வேறே என்ன செய்திருக்கே நீ...? தப்பு செய்த அப்பாவைத் தட்டிக் கேட்டிருக்கியா...?'' — அம்மாவின் புலம்பல் நீளும்.

சட்டென்று காதோடு மனசையும் சேர்த்துப் பொத்திக் கொண்டு கூடத்திற்கு ஓடி வந்துவிடுவாள். அதற்குமேல் கேட்கிற தைரியம் இருக்காது. அடி வயிற்றைப் புரட்டிக் கொண்டு வரும். யாராலும் தாங்க முடியாததை அம்மா தாங்கிக் கொண்டிருப்பது புரியும். நெருப்பை விழுங்கிய அவஸ்தையாய்ப்

படுவது தெரியும். 'பாவம் அம்மா...' என்று தோன்றும்.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்தான் பாட்டி, "இனிமேல் அவகிட்ட இதைப் பத்தி ஒண்ணுமே கேட்காதே, ராதி... அவளா அழுது ஓயட்டும்னு விட்டுடு" என்று சொல்ல, அன்றிலிருந்து அம்மாவிடம் அதைப் பற்றிப் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டாள்.

அதனால், அம்மாவின் அழுகைச் சத்தம் கேட்ட அந்த அதிகாலை நேரத்திலும் அவளிடமிருந்து ஓர் ஆழமான பெருமூச்சு மட்டுமே வெளிப்பட்டது.

கொல்லையில் பாட்டி பூஜைக்காக நந்தியாவட்டையும்செம்பருத்தியும்பறித்துக் கொண்டிருந்தாள். மெல்ல, பாட்டியின் அருகில் போனாள் இவள். அவளைப் பார்த்ததும் பாட்டி இதமாய்ப் புன்னகை செய்தாள். காலையில் எழுந்ததும் காதில் விழுந்த அம்மாவின் அழுகையும், பாட்டியின் புன்னகையும் எத்தனை எதிர்மறையானவிஷயங்கள் என்று நினைத்துக்கொண்டாள். அருகில் வந்து, "எழுந்துட்டியா, வா... காப்பி கலந்து தர்றேன்..." என்றாள் பாட்டி.

"இன்னும் பல்லே தேய்க்கலை பாட்டி..."



"ஒருவேளை சதிவேலைதான் காரணமா இருக்குமோன்னு சந்தேகிச்சு விசாரணைக் கமிஷன் போட்டிருக்கோம்!"

— கடுவை. கோபால்சாமி.

"தேய்ச்சுண்டு வாயேன்..."

அவள் தயங்கி நிற்பதை உணர்ந்த பாட்டி அருகில் போய், "என்ன...? ஏன் இப்படி நிக்கறே...?" என்று கேட்டாள்.

"இல்லை பாட்டி... இன்னிக்கு என்ன காலங்கார்த்தாலயே ஆரம்பிச்சுட்டா அம்மா...?"

"ப்சு... விடு... இது என்ன புது விஷயமா...?"

"இல்லே பாட்டி..." என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"இன்னிக்குப் புது வேலைல சேரப் போறேன். இந்த மூணு வருஷமா ஒவ்வொரு இடமா மாறி, மாறி, நிலையில்லாத வேலையாப் பார்த்து, நாய் அலைச்சல் அலைஞ்சதெல்லாம் போறும்னு, கோடி வீட்டு மாமா தெய்வம் மாதிரி இந்த வேலையை வாங்கித் தந்திருக்கார். பெரிய கம்பெனி, ஆபீஸ் அரண்மனை மாதிரி இருக்கு. லிஃப்ட், டெலிபோன் ஆபரேட்டர், ஏர்கண்டிஷன்னு அமர்க்களமா இருக்கு. கோடிக் கணக்கில டர்ன் ஓவர் பண்ற கம்பெனி. சேர்மெனுக்குப் பர்ஸனல் செகரெட்டரியா இருக்கிற நிரந்தரமான வேலை பாட்டி! இன்னிக்கு நான் நன்னா இருக்குன்னு பத்து மணிக்கு ஜாய்ன் பண்றதாச் சொல்லிட்டு வந்திருக்கேன். கார்த்தால எடுத்த உடனே அபசகுனம் மாதிரி அம்மா இப்படி அழறாளேன்னு மனசுக்குக் கஷ்டமா இருக்கு. புதுசா வேலைக்குப் போற பொண்ணுக்கு ஒரு சந்தோஷம், உற்சாகம் எதுவுமில்லாம இது என்ன பாட்டி...?"

பேசின போதே அழுகை துறுத்திக் கொண்டு வந்தது. கடைசியில் கன்னங்களில் கண்ணீராக வழிந்ததைப் பார்த்துப் பாட்டி பதறிப் போய் அருகில் வந்தாள். அவள் கண்களைத் தன் கையால் துடைத்து வருடிக் கொடுக்கிற மாதிரி பேசினாள்.

"அட அசடே... இதுக்குப்போய் இப்படிக் கஷ்டப்படலாமா...? ம்...? உங்கம்மா எந்த நல்ல நாள்ல அழாம இருந்திருக்கா சொல்லு...? புது வேலை, புது இடம், புது மனுஷாளைச் சந்திக்கப் போறே... சந்தோஷமா, சிரிச்ச மூஞ்சியோட போக வேணாம்? அசடாட்டம் இது என்ன கலக்கம்...? மடமடன்னு பல் தேய்ச்சு காப்பி குடிச்சுட்டு, குளிச்சு அழகா டிரஸ் பண்ணிண்டு வா. அதுக்குள்ள சமையல் பண்ணி முடிச்சுடறேன். இனிமேலயாவது இந்தக் குடும்பத்துக்கு ஒரு நல்ல வழிபிறக்கட்டும்ப்பான்னு வேண்டிண்டு ஒரு கை பால் பாயசம் வச்சு ஸ்வாமிக்கு நைவேத்யம் பண்றேன். நமஸ்காரம் பண்ணிட்டு, சாப்பிட்டுட்டுக் கிளம்பற வழியைப் பாரு... உங்கம்மா இல்லைன்னா நானில்லை...? ஆசீர்வாதம் பண்ணி அனுப்ப மாட்டேன்...?"

பாட்டியின் உற்சாகமும், சுறுசுறுப்பும் அவளையும் தொற்றிக் கொண்டன. மடமடவென்று பல் தேய்த்து, காப்பி குடித்து, குளித்து விட்டு வந்தாள். தன்னிடமிருந்த புடைவைகளில் மிக நன்றாக இருந்த நீல பிரிண்டட் பட்டுப் புடைவையைக் கட்டிக் கொண்டாள். அந்தக் கறுத்த நீலத்தில் அவளது தென்னம்பூ நிறம் இன்னும் பளிச்சிட்டது. வழக்கத்தை விட அன்று மிக மிக அழகாகத் தெரிந்தாள். பாட்டியை நிற்க வைத்து நமஸ்கரித்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாள். அம்மா இருந்த அறைக்குள் எட்டிப் பார்த்த போது அழுது ஓய்ந்து அறை மூலையில் சுருட்டிக் கொண்டு கிடப்பது தெரிந்தது. அதனால் அவளை எழுப்ப மனமில்லாமல் பாட்டியிடமே அம்மா எழுந்ததும் சொல்லிவிடச் சொல்லி, விடைபெற்றுக் கொண்டாள். நடையில் செருப்பைப் போட்டுக் கொண்ட போது தம்பிகள் இருவரும் ஓடிவந்து, 'ஆல் தி பெஸ்ட்' சொல்ல, அவர்களிடமிருந்தும் விடைபெற்று வெளியில் வந்தாள். முகத்தைத் தாக்கிய குளிர்ச்சியான காற்று சட்டென்று புதிதாய் உணர வைக்க —

ஓரளவு தெளிவோடும், நம்பிக்கையோடும் அந்தப் புதிய ஆபீஸ் பற்றின சிந்தனையில் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்கலானாள்...

(தொடரும்)

கண்ணீர் வரவழைத்த சோகக்கதை!

வட்டமேஜை



• வாழ்வது உச்சியில், வாழ்க்கை பாதாளத்தில். ஒரு சோகக் கவிதையாக இருந்தது. இக் கட்டுரையின் கடைசிப் பகுதியில் வருகின்ற குருட்டுப் பெண் மற்றும் அவள் குழந்தைகளைப் பற்றிப் படித்து நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீர் விட்டேன்!

கொளப்பாடு, இரா. சேகர்.

• அட்டையில் இருக்கும் குழந்தைக்குக் குடம் கனக்கிறதோ இல்லையோ, பார்த்த கணத்தில் எங்கள் நெஞ்சு கனத்தது!

குத்தாலம், எஸ். ராஜா.

• மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக அரசு பல திட்டங்களைச் செயல்படுத்துவது பற்றிய செய்திகளைக் கேட்டு மட்டுமே பழக்கப்பட்ட நமக்கு, பீஞ்சமந்தை கிராம மக்களின் அல்லல்கள் பற்றிப் படித்த போது, வெறுப்பும் சோகமும் மேலோங்கின.

நரேந்திரதேவ் நகர், பொற்கொல்லன்.

• ஏனய்யா! அரசின் 'இரண்டே போதும்' என்ற கு.க. கொள்கையை நீர் ஜோக்குகள் விஷயத்திலா கடைபிடிக்க வேண்டும்? ஒருவேளை பின்னாளில் இடம் பிடிக்கப் பார்க்கிறீரோ?!

வேலூர், பொ. பொற்செல்வன்.

• டாக்டர் பூவண்ணனின் 'கல்வியின் வரலாற்று நாவல்கள்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைப் படிக்கையில், ஏற்கெனவே அந்நாவல்களைப் படித்திருந்தும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உடனே ஏற்பட்டதுடன் பூவண்ணன் அவர்களின் இவ்வாராய்ச்சி நூலையும் வாங்கி, முழுவதையும் படிக்க வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்குகிறது.

விருத்தாசலம், இராம. துரையப்பன்.

• மெட்ராஸ் ரவுண்ட்—அப் பகுதியில் இடம் பெற்றிருந்த ஐந்து செய்திகளும் சுவையாகவும் புதிய தகவல்களாகவும் இருந்தன.

தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

• கட்சித் தலைவர்களுடைய தேர்தல் பிரசார ரதங்களைப் பார்த்து விட்டு வந்து பல சுவையான சம்பவங்களை அளித்ததன் மூலம் செம்பியன் அவர்கள் வாசகர்களின் 'மனோரதத்தில்' உலா வருகிறார். பாராட்டுக்கள் அவரது சேவை தொடர நல்வாழ்த்துக்கள்.

கண்டவராயன்பட்டி, வ. ராமசாமி.

• சாராயம் குடித்து விட்டுச் சாவுக்கூத்து ஆடுபவன் சவமாகி விட்டான்; ஆனால் சாவுக் கூத்து ஆட அடுத்த தலைமுறை பொறுப்பேற்று விட்டது! இந்தச் சாராயம் ஆடுகிற சாவுக் கூத்து எப்போது நிற்கும்.... என்ற வினாவைக் கேட்கும் சாவுக் கூத்து சிறுகதை அருமை... அருமை.

சென்னை — 75, அ. இராமானுசம்.

• அவதூறு மசோதாவை எதிர்த்த தலையங்கம் கூனையும் நிமிர வைக்கும் — அந்த அளவுக்கு உணர்ச்சி பொங்க எழுதப்பட்டிருந்தது. ஜனநாயகம், விருப்பு வெறுப்புக்கு இடமளிக்கக் கூடாது. மக்களுக்காக, மக்களுடைய, மக்களின் ஆட்சி என்பதெல்லாம் வாய்ச் சவடால் தானா? மக்களின் குரலைப் பிரதிபலிக்கும் பத்திரிகைகளின் சுதந்திரம் காக்கப்பட வேண்டும். எனவே அவதூறு மசோதாவைத் திரும்பப் பெற்றால்தான் ஜனநாயகம் பிழைக்கும்!

சென்னை — 56, திருநின்றரக.

• மைய அரசின் 'அவதூறு மசோதா 88'ஐ எதிர்த்துத் தாங்கள் காட்டி வரும் வேகம் பாராட்டுக்குரியது. மசோதா வாபஸ் ஆகும் வரை தொடர்கின்ற உங்களது தார்மீகப் போராட்டங்களுக்கு வாசகர் உலகம் என்றும் துணை நிற்கும். ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!

குடியாத்தம், கே. வி. எஸ். மணியன்.

• பெற்ற தாயாகவே இருந்தாலுங்கூட அவளை இரண்டாம் பட்சமாகக் கருதி, தவறான தன் பக்கத்து எண்ணங்களுக்கு மட்டுமே முதலிடம் தந்து அவற்றை நியாயமெனக் கருதும் மனித மனத்தின் பலவீனமான உணர்வுகளை 'மாறுபடும் நியாயங்கள்' சிறுகதையில் அற்புதமாகச் சித்திரித்திருந்தார், ஆசிரியர்.

அருர், மு. மதிவாணன்.

• குழலமுது சிறுகதை படித்தேன். பிச்சைக்காரன் தன் இதயத்தைத் தடவி "என்னமோ இங்கே பாருங்க, இந்த இடத்துல பொங்குதுங்க, வாயால சொல்லத் தெரியலீங்க," என்று நரஹரியிடம் சொன்னதைக் கதையில் படித்ததும் அதே போன்ற உணர்வுதான் கதையைக் குறித்து எனக்கும் ஏற்பட்டது.

கடலூர், டி. ஆர். வேலுமணி.

• 'குழலமுது' சிறுகதை கனியமுதாக இனித்தது. கலையையும், கலாரசனையையும் மனிதாபிமானத்தையும் நுணுக்கமாகச் சித்திரித்த அபூர்வமான எழுத்தோவியம்.

பம்பாய், அமான்.


புதிய ஃப்ளாட் ஒன்று கட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டும் என்கிற உங்கள் கனவு விரைவில் நனவாகப்போகிறது... எல் ஐ சி யின் பீமா நிவாஸ் யோஜனா மூலம்.

பீமா நிவாஸ் யோஜனா — ஓர் இணையற்ற வீட்டுக் கடனுதவி திட்டம்

- குறிப்பிட்ட எல் ஐ சி பாலிசிதாரர்களுக்கு மட்டுமே உண்டு.
- ஃப்ளாட்டின் மதிப்பில் 55% முதல் 75% வரை பலவாறாக கடன்தொகை அளிக்கப்படும்.
- அதிகபட்ச கடன்தொகை ரூ. 2,00,000/- (விசேஷ விண்ணப்பங்களுக்கு ரூ. 3,00,000/-)
- பம்பாய், கல்கத்தா, தில்லி மற்றும் சென்னையில் திட்டம் செயல்படும்.

- சலுகையான வட்டி விகிதங்கள்:
  - — ரூ. 50,000/- வரையிலான கடன் தொகைக்கு: ஆண்டொன்றுக்கு 12%
  - — ரூ. 50,000/-க்கு மேற்பட்ட மற்றும் ரூ. 1,00,000/- வரையிலான கடன்தொகைக்கு: ஆண்டொன்றுக்கு 13%
  - — ரூ. 1,00,000/-க்கு மேற்பட்ட மற்றும் ரூ. 2,00,000/- வரையிலான கடன்தொகைக்கு: ஆண்டொன்றுக்கு 14%
  - — ரூ. 2,00,000/-க்கு மேற்பட்ட மற்றும் ரூ. 3,00,000/- வரையிலான கடன்தொகைக்கு: ஆண்டொன்றுக்கு 15%
- தொகையை திரும்பக்கொடுக்க நீடிக்க காலவரையறை — 20 வருடங்கள்

லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா



இப்போது!

எல் ஐ சி யின் வீட்டுக் கடனுதவி திட்டம் மூலம் ஃப்ளாட்டுகளும் வாங்கலாம்.



மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
• **பம்பாய்**: பீமா நிவாஸ் யோஜனா யூனிட், எல் ஐ சி ஆஃப் இந்தியா, ஜீவன் விஹார், 5 வது மாடி, அப்போலோ ஸ்ட்ரீட், பம்பாய்-400 023. ஃபோன்: 2861517, 2861518, 2861375 • **கல்கத்தா**: பீமா நிவாஸ் யோஜனா யூனிட், எல் ஐ சி ஆஃப் இந்தியா, ஜீவன் பிரகாஷ், 16, சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா-700 072 • **தில்லி**: பீமா நிவாஸ் யோஜனா யூனிட், எல் ஐ சி ஆஃப் இந்தியா, லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், அஸஃப் அலி ரோடு, புது தில்லி-110 002. • **சென்னை**: பீமா நிவாஸ் யோஜனா யூனிட், எல் ஐ சி ஆஃப் இந்தியா, சவுத் இந்தியா கோ - ஆப். பில்டிங், அண்ணா சாலை, சென்னை-600 002.

இது திமிங்கில ஆண்டு!



ஸ்வீடனில் ஐந்து அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இவை வேறு எந்த விஷயத்தில் கருத்து ஒற்றுமை கொண்டுள்ளனவோ இல்லையோ, ஒரு திமிங்கிலத்தைத் தத்து எடுத்துக் கொள்வதில் ஒன்று சேர்ந்துள்ளன!

'திமிங்கிலத்தைத் தத்து எடுத்துக் கொள்வதாவது?' என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

உண்மைதான்! மனிதர்களைப் போல் திமிங்கிலங்களும் தனிப்பட்ட முக லட்சணங்களும் உடற்கூறு லட்சணங்களும் உடையவை. எனவே அவற்றை எளிதில் வேறுபடுத்தி அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஸ்வீடனில், நாம் விரும்பும் ஒரு திமிங்கிலத்தை அடையாளம் காட்டி, ஐயாயிரம் கிரோனர் பணம் செலுத்தித் தத்து எடுத்துக் கொள்ளலாம். இத்தொகை ஆராய்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வருடமும், தத்துத் திமிங்கிலத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை மற்றும் அதன் பல்வேறு அங்க அடையாளங்களைக் காட்டும் புகைப்படங்கள் ஆகியவை 'பெற்றோர்க்கு' அனுப்பி வைக்கப்படும்.

சில இன திமிங்கிலங்கள் அடியோடு அழிந்து போகும் இக்கட்டான நிலையில் உள்ளன என்பதால் வனவிலங்குப் பிரியர்கள் அறிமுகப்படுத்தியுள்ள திட்டம் இது. ஸ்வீடன் கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் திமிங்கிலங்களைக் கண்டு களிப்பதற்கு வசதியாக ஏற்பாடுகளும் செய்து தரப்படுகின்றன. இவற்றை உலக வனவிலங்கு பேணும் நிறுவனமும் (World Wild Life Fund) திமிங்கிலங்கள் ஆய்வுக் கேந்திரமும் (Centre for Studies of

Whales and Dolphins) இணைந்து செய்து வருகின்றன.

ஐம்பது மில்லியன் ஆண்டுகளாக உலகின் கடல் பகுதிகளில் வாழ்ந்து வரும் விலங்கு திமிங்கிலம். இவ்வளவு பழமை வாய்ந்த உயிரினத்தை அழிவிலிருந்து காக்க வேண்டிய நெருக்கடி ஏன் உருவாயிற்று? மனிதனின் சூறையாடல்தான் இதற்குக்காரணம். இறைச்சிக்காகவும், கொழுப்புச் சத்துக்காகவும், எண்ணெய்க்காகவும் அவற்றைக் கொன்று குவித்து வந்துள்ளான். இந்த வேட்டை கி. பி. முதல்நூற்றாண்டு முதலே நடந்துவருவதால், புலியைக் காப்பாற்ற Project Tiger என்று இந்தியாவில் திட்டம் வகுத்தது போல், திமிங்கிலத்தைக் காக்க இப்போது திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டைத் 'திமிங்கிலங்கள் ஆண்டா'க அறிவித்துள்ளது உலக வனவிலங்குகள் பேணும் நிறுவனம். திமிங்கிலங்களை வேட்டையாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை ஆராய்ச்சிக்காகக் கொல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திமிங்கில வேட்டை ஜப்பானில் பாரம்பரியத் தொழிலாக ஆதி காலந்தொட்டு இருந்து வருகிறது. யமாகூசி என்ற இடத்திலுள்ள கோயில்ஒன்றில் அந்தவட்டாரத்தில் கொல்லப்பட்ட திமிங்கிலங்களுக்கெல்லாம் சமாதி கட்டி வைத்திருக்கிறார்கள். இதனால் ஜப்பானியர்களின் கலாசாரத்தோடு இழைந்த செயலாகத் திமிங்கில வேட்டை கருதப்படுகிறது. எனவே, வேட்டை தடை செய்யப்பட்டதை எதிர்த்து ஜப்பானில் குரல்கள் எழுந்துள்ளன. 'எங்கள் பாரம்பரியம் போய்விடும்; எங்கள் பிழைப்பு போய்விடும்;' என்று சிலர் எதிர்க்கிறார்கள்.

ஆனால், ஜப்பான் வேறு பல துறைகளில் முன்னேறி, பொருளாதார ரீதியாக ஸ்திரத்தன்மை பெற்றுள்ளதால் இந்த வாதங்களைத் திமிங்கில நண்பர்கள் ஏற்பதில்லை.

கடலிலேயே வாழ்ந்தாலும் திமிங்கிலங்கள் மீனினத்தைச் சேர்ந்தவையல்ல. அவை பாலூட்டிகள். அவற்றுள் இரு பிரதான பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று — பற்களையுடைய திமிங்கிலங்கள். இரண்டு — பற்களுக்குப் பதிலாகப் பாலீன் என்ற நூற்றுக்கணக்கான, மெலிதான, ப்ளாஸ்டிக் குச்சி போன்ற அமைப்புக்களை உடையவை. திமிங்கிலங்கள் ஒருவித ஓசையை எழுப்புவதன் மூலம் பிற சிறிய நீர்வாழ் உயிரினங்களை ஸ்தம்பித்துப் போகச் செய்து, அவற்றை இரையாக்கிக் கொள்கின்றன என்று கூறுகிறார்கள். இந்த ஒலியின் தன்மை குறித்த ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

சக திமிங்கிலங்கள் நோய்வாய்ப்பட்டால் அவற்றை நீண்ட நாட்களுக்குப் பராமரித்துக் காப்பாற்றும் குணம் இந்த ஜீவராசிக்கு உண்டு. இறந்து போன குட்டியை ஈன்ற ஒரு தாய்த் திமிங்கிலம், அதன் உடல் அழுகி, வீணாகும்வரை அதனை நீண்ட நாட்கள் பராமரித்ததைக் கவனித்து ஆராய்ச்சிக் குறிப்புக்களில் விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர்.

திமிங்கிலங்களைப் பற்றி நாம் கண்டறிய வேண்டியது இன்னும் ஏராளமாக உள்ளது. எனவே திமிங்கில வேட்டையைத் தடை செய்வது மட்டுமின்றி, அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியையும் ஊக்குவித்தால்தான் அந்த இனத்தை நாம் புரிந்து கொண்டு அதன் அழிவைத் தடுக்க முடியும் என்று உயிரியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

நன்றி: **இன்டர்செக்ட், ஸ்கானோராமா.**



"நடிகையையெல்லாம் நம்ம கட்சிக்கு இழுக்காதீங்கன்னு, சொன்னேனே, கேட்டீங்களா ...?"

— கடுவை. கோபால்சாமி.

ஒருவர்: என்ன ஒவ்வொரு பாட நூலுடன் ஓர் இலவச இணைப்பும் கொடுக்கிறார்களே... புதுசா இருக்கு...?

கடைக்காரர்: பாட நூலில் இருக்கிற பிழைகளின் திருத்தத்தை... இலவச வெளியீடாத் தனியாத் தாறாங்க சார்... அதுதான்!

— திருத்துறைப்பூண்டி. எஸ். கந்தசாமி.



போட்டிக் கதை — 4

நோயாளிகள்

நான் இருந்த அறையில் மொத்தம் இருபது படுக்கைகள் இருந்தன. எல்லார் முகத்திலும் காரணம் புரியாத சோகம். ஒவ்வொருவருக்கும் காரணம் புரியாத நோயின் அறிகுறிகள். எங்கள் அறை கொஞ்சம் விசாலமானது. என் படுக்கை ஜன்னல் பக்கத்திலிருந்தது. வெளியே, பூத்துக் குலுங்கும் மரங்களை ஜன்னல் வழியாகப் பார்த்த வண்ணம் இருக்கலாம். அங்கு சூழ்ந்திருக்கும் மரங்களைப் பற்றிய அறிவு எனக்கில்லை. தினமும் வினோதமான பூக்கள், கோலம் போடுவது போல் மரங்களைச் சுற்றி உதிர்ந்திருக்கும். பல பறவைகளின் சப்தங்கள், நாங்கள் நோய்களின் உபாதைகளுடன் தூங்கிக் கொண்டிருந்தாலும், விழித்திருக்கச் சொல்லும். ஆரோக்கியமான இந்த மரங்களின் சூழலில், ஆரோக்கியமற்ற மனிதர்கள்! இங்கே படுத்துக் கொண்டிருக்கும் மனிதர்கள் யாராவது இப்படியெல்லாம் என்னைப் போல் யோசித்துக் கொண்டிருப்பார்களாவென்பதும் எனக்குத் தெரியாது.

ஒரு வாரத்திற்கு முன் எனக்கு சுரம் நிற்காமலிருந்தது. அப்பா கவலைப்பட ஆரம்பித்தார். அம்மா முதலில் லீவு போட்டுப் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினாள். அவ்வாறே அவள் ஒரு வாரம் லீவு போட்டுப் பார்த்துக் கொண்டாள். இருந்தாலும் சுர வேகம் குறையவில்லை. அம்மாவிற்கும், அப்பாவிற்கும் பெரிய கவலையை உண்டு பண்ணிற்று. அப்பா வேறு வழி இல்லாமல் பெரியப்பாவைப் பார்க்கச் சென்றார். பெரியப்பா இந்த அரசாங்க மருத்துவ மனையில் செவிலியர்களைக் கண்காணிக்கும் தலைமை அதிகாரியாக இருந்தார். அவர்தான் என்னை உடனடியாக இங்கு சேர்த்து விட்டார். ஒவ்வொரு நாளும் இரவு நேரத்தில், அப்பா மருத்துவ மனையில் படுத்துக் கொள்வார்.

நான் இந்த மருத்துவ மனையில் சேர்ந்த இரண்டாவது நாளே ஓர் அனுபவம் ஏற்பட்டது! நான் படுத்திருந்த வரிசையில் கடைசிப் படுக்கையில் நோயாளியாக இருந்தவர், ஆபத்தான நிலையில் இருந்தார். அவருக்குப் பிராண வாயு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். சுயநினைவு இல்லாமல் படுத்துக் கிடந்தார். எல்லோருக்கும் அவர் முடிவு தெரிந்து இருந்தது. பல மணி நேரங்கள் எந்தவித மாற்றமுமின்றிப் படுத்துக் கிடந்த அவரை, அப்படியே விட்டு வைப்பதில் ஒன்றுமில்லை என்று தோன்றியதால், அவருடைய உறவினர்களிடம் அவரை எடுத்துக் கொண்டு போகச் சொல்லி விட்டார்கள். அவர் உறவினர்கள் அவரை எடுத்துக் கொண்டு போக வந்த போது, அவர் செத்து விட்டார். அவரது படுக்கையைச் சூழ்ந்து கொண்டு, எல்லோரும் போட்ட கூச்சலில், எனக்கு உடம்பெல்லாம் உதறலெடுத்தது.

கொஞ்ச நேரத்தில் அந்தப் படுக்கை வெறுமையாகக் காட்சி அளித்தது. எனக்கு அவர் என்ன வியாதியால் இறந்து போனார் என்பதெல்லாம் தெரியாது. ஆனால், சில சமயங்களில் வெறுமையான அந்தப் படுக்கை, கோரமாய்க் காட்சி அளிப்பது போல் தோன்றியது. லேசாகக் கண்களை மூடிக் கொண்டு, படுத்துக் கொண்டிருக்கும் போதெல்லாம், இறந்து போன மனிதர், திரும்பவும் அந்தப் படுக்கையில் படுத்திருந்து இறந்து போவது போல் தோன்றியது. அந்தச் சமயங்களில் பயத்தைப் பற்றி நான் புத்தகம் எழுதி இருந்தால், நூறு பக்கங்களுக்கு மேல் எழுதியிருப்பேன். என் உள் நடுக்கத்தை வெளிக் காட்ட விரும்பாமல், சுரம் இல்லாமல் நான் தெளிவாக இருப்பது போல், பாவனை செய்து கொண்டேன். படுக்கையில் படுத்திருப்பது நோயின் அறிகுறி என்பதால் மெதுவாகப் படுக்கையிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தேன். இந்த அறையைக் கண்காணித்துக் கொண்டிருந்த செவிலிப் பெண்மணி என்னை வினோதமாகப் பார்த்தாள்.

''என்ன ஹரி; படுக்கையில் படுக்காம எங்கே கிளம்பிட்டே?''

''சும்மா நடக்கறேன்.''

''உடம்பை அலட்டிக்காதே...! போய்ப் படு....''

அவள் கண்டிப்பு நிறைந்த சொற்களைக் கேட்டு, ஒன்றும் தோன்றாமல் அவள் எதிரில் போய் அமர்ந்தேன்.

''எனக்குக் கொஞ்சம் பயமாக இருக்கிறது.''

அவள் என்னை வினோதமாகப் பார்த்தாள்.

அழகிய சிங்கர்

"எதுக்கு நீ பயப்படறே?"

"அந்தக் கோடியில இருந்தவர், செத்துப் போயிட்டார்!"

"அவர் செத்துப் போனா, என்ன?"

"அதான் பயம்."

"அவர் இங்கே வந்து சேரும் போதே, அவர் பிழைக்க மாட்டார்னு தெரியும்."

"இங்கே எவ்வளவு பேர் செத்துப் போவா?"

"எத்தனையோ பேர்... ஒரே சமயத்தில ரெண்டு, மூணு பேரு... நீ அலட்டிக்காமப் போய்ப் படு...."

நான் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தேன்.

"நீ எத்தனாவது படிக்கிறே?"

"பத்தாவது."

"பத்தாவது படிக்கிற பையனா இப்படிப் பயப்படறது!"

"பயமும் உண்மை; நான் பத்தாவது படிக்கிறதும் உண்மை."

— அவள் சிரித்தாள்.

நான் திரும்பவும் என் படுக்கையில் போய் அமர்ந்தேன். ஜன்னல் வழியாக மரங்கள் கண்ணைச் சிமிட்டிச் சிரிப்பது போல் தோன்றின. மரங்களுக்குப் பயத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. தெரிந்தாலும் யாரிடம் சொல்லும்?என் பக்கத்தில் இருந்த நோயாளிகளைக் கூர்ந்து கவனித்தேன். எல்லோரும் அரைத் தூக்கத்தில் இருந்தார்கள். ஒருவர் எதையோ சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர்களுடன் எந்த விதமான உறவும் என்னால் வைத்துக் கொள்ள முடியாது போல் தோன்றியது. எல்லோரும் வியாதிக்காரர்கள்....!

கொஞ்ச நேரத்தில் இந்த அறையைக் கவனிக்கும் கண்காணிப்பாளன் என் கண்களுக்குத் தென்பட்டான். செவிலிப் பெண்மணி அவனைக் கூப்பிட்டு, இறந்து போனவரின் படுக்கையைச் சுத்தம் செய்யச் சொன்னாள்.

கண்காணிப்பாளன் அந்தப் படுக்கையிலிருந்த ரப்பர் விரிப்பை என்ன செய்வது என்று கேட்டான். அந்தச் செவிலிப் பெண்மணி, என் படுக்கையைச் சுட்டிக் காட்டி, அங்கே போடச் சொன்னாள். நான் என் படுக்கையிலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தேன்.



அவன் ரப்பர் விரிப்பை எடுத்துக் கொண்டு வந்தான். அதைப் பார்த்தவுடன், எனக்கு ஏதோ விதமான அருவெறுப்பு உணர்ச்சி உண்டாகியது. இறந்து போனவர் பயன்படுத்திய, ரப்பர் விரிப்பை இங்கே கொண்டு வந்து போடுவதா? கொஞ்ச நேரத்திற்கு முன் இறந்து போனவரின் உடலைத் தாங்கிக் கொண்டிருந்த இந்த ரப்பர் விரிப்பு, என்னையும் தாங்குவதா? முடியாது...! நான் பெரிதாகச் சத்தம் போட்டு அழுதேன். செவிலிப் பெண் ஓடி வந்தாள். என்ன என்று விசாரித்தாள்.

''எனக்கு இந்த ரப்பர் விரிப்பு வேண்டாம்!''

''ஏன்?''

''செத்துப் போனவர் உபயோகித்தது.''


அவள் கண்காணிப்பாளனைப் பார்த்து, ''இதை எடுத்துக் கொண்டு போய் விடு. இங்கே போடாதே!'' என்றாள்.

அவன் எடுத்துக் கொண்டு போய் விட்டான். அப்பா இரவு படுக்க வரும் வரைக்கும் எனக்குத் தூக்கம் வராது போலிருந்தது. அப்பாவைக் கண்டவுடன், என் பயமெல்லாம் குறைய ஆரம்பித்தது. அப்பாவை என் பக்கத்தில் வந்து அமரச் சொன்னேன்.

''என்ன ஆச்சு, ஹரி ஒனக்கு?''

''அந்தக் கோடியில் இருந்தவர், செத்துப் போயிட்டார்.''





"நான் காதலிக்கும் பெண், என்னைத் திரும்பக்காதலிப்பதற்குநிபந்தனைவிதிக்கிறா!"

"என்னடா அது?"

"தாலுகா ஆபீஸிலிருந்து என்னுடைய வருமானச் சான்றிதழ் வாங்கிட்டு வரணுமாம்!"

— மணியன் தர்மலிங்கம்.

"அதனால் என்ன?"

"நான் வீட்டுக்கு வந்துடட்டுமா...! எனக்கு இங்கே பிடிக்கலே."

"ஒடம்பு சரியான பிறகுதான் வரணும்"

"பயமா இருக்கு!"

"பயப்படறதுக்கு ஒண்ணுமில்லே."

"ஏதாவது ஆயிடுத்துன்னா?"

"ஒனக்கு ஒண்ணுமாகாது. இப்பவே சுரம் குறைஞ்சு போயிடுத்து. பேசாமத் தூங்கு."

காலையில் அப்பா கிளம்புவதற்கு ஆயத்தமாய் இருந்தார். அவருக்கு ஏழு ஏழரை மணிக்கெல்லாம் இந்த இடத்தை விட்டுக் கிளம்பி விட வேண்டும். அப்போது தான் குளித்து விட்டு அலுவலகம் செல்லச் சௌகரியமாக இருக்கும். நான் சேர்ந்த பிறகு, அம்மா ஒருமுறை கூட இங்கே பார்க்க வரவில்லை. அவளுக்கு மருத்துவ மனை என்றால் பிடிக்காது. மற்ற நோயாளி களின் உற்றார் உறவினர் மாலைப் பொழு தில் வருவார்கள். அப்போது என்னைப் பார்க்க யாரும் வரமாட்டார்கள். வேறு வார்டில் பணிபுரியும் பெரியப்பா வீட் டிற்குச் செல்லும் போது, என்னைப் பார்த்து விட்டுப் போவார். போகும் போது, இங்கு பணிபுரியும் செவிலிப் பெண்களிடம் என்னை நன்றாகக் கவனிக்கும்படி சொல் லாமல் போக மாட்டார்.

அப்படித்தான் செவிலி லீலா எனக்கு அறிமுகமானாள். என்னிடத்தில் காரணம் புரியாத அன்பு. என் படுக்கையை ஒட்டி னாற் போலிருந்த ஸ்டூலில் அமர்ந்து கொள் வாள். பல மணி நேரங்கள் எதாவது பேசிக் கொண்டிருப்பாள். எனக்கு அவளுடன் பேசத் தொடங்கிய பிறகு நேரம் போவதே தெரியாது. சில சமயங்களில் கலைந்திருக் கும் என் தலைமயிரைக் கோதி விடுவாள். என் படுக்கையைச் சரி செய்து போடுவாள்.

"ஒன்னைப் பார்க்கும் போது ஊர்ல இருக்கிற தம்பி ஞாபகம் வருது" என்றாள் ஒருநாள்.

"அப்படியா!" என்றேன் ஆச்சரியத்து டன்.

"நான் எல்லாரையும் தனியா விட்டுட்டு இங்கே வந்திருக்கேன். நான் தனியா இருக்க, இருக்க எனக்கு வீட்டு ஞாபகமா இருக்கு.

"ஒங்க தம்பி என்னை மாதிரித்தான் இருப்பானா?"

"ஒன்னை மாதிரித்தான் இருப்பான்.... அதான் ஒங்கிட்டப் பேசணும் போல இருக்கு."

"அவன் என்ன பண்ணிண்டிருக்கான்?"

"அவனும் ஒன்னைப் போலத்தான், ஸ்கூல்ல படிக்கிறான்."

"ஏன் இப்படி தனியாய் அவங்களை யெல்லாம் விட்டுட்டு வந்துட்டீங்க....?"

"எல்லாம் கொஞ்ச நாள்தான். நான் திரும்பவும் எங்க ஊருக்குப் போயிடுவேன்.. இல்லாட்டி என் குடும்பமே இங்கே வந்தா லும் வந்துடும்."

அவளைப் பொறுத்தவரை இது பாசம் தான். ஆனால் எனக்கு லீலாவைப் பார்க் கும் போது, ஒரு சகோதரியைப் பார்ப்பது போல் தோன்றவில்லை. உண்மையில் எனக் குச் சகோதரி என்று யாருமில்லை. அத னால் லீலாவைப் பார்க்கும் போது, ஒரு பெண்ணைப் பார்ப்பது போல்தான் தோன் றியது. ஒரு பெண்ணுடன் அறிமுகம் ஆகும் போது தோன்றும் சகல கூச்சங்களும் லீலா வுடன் பழகும் போது எனக்கும் ஏற்பட்டன. எனக்கு அவள் கன்னத்தை முத்தமிடத் தோன்றியது. அவள் என்னுடன் இருக்க வேண்டுமென்றெல்லாம் தோன்றியது. லீலா யாரிடமாவது குறிப்பாக இளம் டாக் டர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக் கும்போதெல்லாம், எனக்குக் காரணம் புரி யாத பொறாமை உணர்ச்சி ஏற்படுவதுண்டு. அவள் திரும்பவும் என்னுடன் பேசத் துவங் கினால் எல்லாம் மறந்து விடும்.

என் உடல் சாதாரண நிலைக்குத் திரும்பியது. அன்று வெள்ளிக் கிழமை.

"நாளைக்கு நீ வீட்டுக்குப் போயிடுவே" என்றாள் லீலா.

அதைக் கேட்கும் போது, என் மனம் உற் சாகத்தால் துள்ளியது. அவளுக்குத்தான் இதைச் சொல்லும் போது வருத்தம் ஏற்பட் டது போல் தோன்றியது.

என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "என்னைப் பார்க்க வருவியா?" என்று கேட்டாள்.

நான் பதில் பேச முடியாமல் திகைத்தேன். நான் வெறுமனே அவள் முகத்தைப் பார்த்தபடி இருந்தேன்.

"நீ ரொம்ப ஒல்லியா இருக்கே....? நிறைய டானிக்கெல்லாம் சாப்பிட்டு, உடம் பைத் தேத்திக்கணும். நீ என்னைப் பார்க்க வந்தா உனக்கு மாத்திரை, டானிக்கெல்

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

லாம் தரேன், நீ வருவியா...?''

'வருவேன்' என்று தலை அசைத்தேன்.

''உன்னைப் பார்க்கும்போதெல்லாம் ஊர்ல இருக்கிற தம்பியைப் பாக்கிற மாதிரி இருக்கு.''

''உண்மையைச் சொல்லுங்க... நான் ஊர்ல இருக்கிற ஒங்க தம்பி மாதிரித்தான் இருக்கேனா...?''

''அப்படித்தான் இருக்கே! நீ கொஞ்சம் இளைச்சுப் போயிருக்கே! அவன் நல்லா இருப்பான்... எல்லோரையும் விட்டுட்டு இங்கே ஏன் வந்தோம்னு தோணுது...''

நாங்கள் பேசிக் கொண்டிருந்த சமயத்தில், லீலாவைப் பார்க்க இன்னொரு செவிலிப் பெண் அங்கு வந்தாள்.

''என்ன இங்கேயே நின்னுண்டுருக்கே?''

''ஹரி நாளைக்கு வீட்டுக்குப் போயிடும்.''

அவள் என்னைப் பார்த்தாள்.

''எப்படியாவது இந்த நரகத்திலிருந்து விடுதலை கிடைச்சாப் போதும்னு தோணுது'' என்றேன்.

''எங்களைப் பார்த்தா ஒனக்கு என்ன தோணுது.'' என்று கேட்டாள் லீலா.

''பாவமாத்தான் இருக்கு... ஆனால், இந்தத் தொழில் புனிதமானது.''

''சில சமயங்களில் இங்கே இருக்க ரொம்ப எரிச்சலாக இருக்கும்.... காரணமில்லாமல் சிலர் கூப்பிட்டுண்டு இருப்பாங்க.''

''அடுத்த வாரம் ஒனக்கு நைட்டா?'' என்றாள் பக்கத்திலிருந்த செவிலி.

''ஆமாம்'' என்றாள் லீலா.

''கருணாகரன் கூட நைட்தான்!''

''ஐய்யய்யோ!'' என்று கத்தி விட்டாள் லீலா.

''கருணாகரன் யாரு?''

''ஒனக்குத் தெரியாது. இங்கே புதுசா ஒரு டாக்டர் சேர்ந்திருக்காரு. என் பின்னாடியே சுத்திண்டிருப்பார். அதை நினைச்சுத்தான் பயப்படறேன்.''

அவர்கள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அந்த இடத்தை விட்டகன்றார்கள்.

அடுத்த நாள் காலையில், நான் அன்று சாயந்திரம் வீட்டிற்குப் போய் விடலாம் என்று கூறிவிட்டார்கள். அந்தச் சமயத்தில் அப்பாவும் இருந்ததால், அவர் சாயந்திரம் என்னை அழைத்துப் போவதாகக் கூறி விட்டார்.

மாலை நான்கு மணியிலிருந்து வீட்டிற்குச் செல்வதற்குத் தயாரான நிலையிலிருந்தேன். லீலா என்னைப் பார்க்க வந்தாள். அவளுக்கு அன்று இரவு நேரத்தில் பணி துவங்குவதால், வெள்ளை உடுப்பிலிருந்து விடுபட்டுப் புடைவையுடன் தென்பட்டாள். என்னைப் பார்க்கும் போது, அவளுக்குக் கண்கள் கலங்கி விட்டன. என் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''என்னை மறக்க மாட்டியே, ஹரி?'' என்ற போது அவள் தொண்டை அடைத்துக் கொண்டது.

''மாட்டேன்.''

''உன் ஸ்கூல் விடுமுறை போதெல்லாம் இங்கே வந்து பார்த்துட்டுப் போ.''

''நீங்க எங்கே இருப்பீங்க?''

''இங்கேவார்டில இருப்பேன். இல்லாட்டி விடுதியிலே இருப்பேன். விடுதியும் இங்கேயே இருக்கு.. உனக்கு விவரமா எழுதித் தரேன்.''

அவள் தங்கியிருந்த விடுதியின் முகவரியை எழுதிக் கொடுத்தாள்.

''யார் வருவாங்க உன்னை அழைச்சிட்டுப் போக....?''

''அப்பா.''

''நீ உடம்பை நல்லா கவனிச்சுக்கணும். முட்டையெல்லாம் சாப்பிடு... இப்படி ஒல்லியா இருக்கக் கூடாது... உடம்பிலே சதையே இல்லே! எலும்புதான் இருக்கு.''

நான் அவள் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தேன். அவளுக்கு என்ன தோன்றியதோ என்னமோ....! என்னை இழுத்து அணைத்து முத்தமிட்டாள். அவள் அணைப்பில் என் உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. காரணம் புரியாமல் அழத்தான் தோன்றியது. அவளும் அழுதபடி என்னைத் தேற்றினாள்.

அப்பா என்னை அழைத்துக் கொண்டு போக வந்து விட்டார். நான் அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன். மருத்துவ மனையை விட்டு வெளியே வந்த போது, வாகனங்களின் இரைச்சல் என் காதை என்னவோ செய்தது. நகரத்துச் சுவர்கள் புதுப்புது சினிமாக்கள் தியேட்டர்களில் ஓடுவதை வண்ணக் காகித போஸ்டர்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. வியாதியிலிருந்து மீண்டு விட்ட உற்சாகத்தில் நானிருந்தேன். திரும்பவும் நான் அந்த மருத்துவ மனைக்குப் போகவில்லை. லீலா ஞாபகத்திலிருந்தாள்!

''பெரிய கம்பெனி முதலாளியைக் காதலிச்சது தப்பாப் போச்சுடி...''

''ஏன்?''

''முதல் ஆறு மாதம் புரொபேஷன் பீரியடாம். அப்போ, வெறும் 'கண்டல்' மட்டும்தானாம். கன்பர்மேஷன் ஆன பிறகுதான்,மல்லிகைப்பூஎட்ஸட்ராவெல்லாமாம்...''

— ஆர். வசந்தகுமார்.



வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுவீர்.
பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தைப் பெற்றிடுவீர் !

வாய் துர்நாற்றம் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. சுவாசம் சுத்தமாக, புத்துணர்ச்சியுடன் திகழவும், பற்கள் உறுதியாக, ஆரோக்கியமாக விளங்கவும் முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்யுங்கள். அதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.



பற்களுக்கிடையே சிக்கிக் கொள்ளும் உணவுத் துணுக்குகளில் பாக்டீரியா வளர்ந்து, வாய் துர்நாற்றத்திற்கும் பற்சிதைவுக்கும் காரணமாகிறது.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயலாற்றல் மிக்க நுரை ஆழமாகச் சென்று, துர்நாற்றம் உண்டாக்கும் உணவுத் துணுக்குகளையும், பற்சிதைவை ஏற்படுத்தும் பாக்டீரியாவையும் நீக்குகிறது.




முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்வதனால், சுத்தமான, புத்துணர்ச்சிமிகு சுவாசத்தையும், உறுதிமிகு, ஆரோக்கியமான பற்களையும் பெற்றிடுவீர்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !

Rediffusion/CP/5707 f TM

நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டி மற்றவரை விரட்டி விடுகிறதா?





நீங்கள் உபயோகிக்கும் கொசுவிரட்டியின் பாதிப்பை நினைத்துப் பாருங்கள்.

கொசுவர்த்திச் சுருள்கள் அறை முழுதும் புகை கிளப்பி, தொண்டையிலும், கண்களிலும் எரிச்சலூட்டுகின்றன.

க்ரீம்களோ, பிசுபிசுப்பாக தோலில் ஒட்டிக் கொண்டு, துணிகளை கறைபடுத்தும். மேலும் தாங்க முடியாத நெடி வேறு!

இத் தொல்லைகளையெல்லாம் விரட்ட வருகிறது மைலால் கொசுவிரட்டி.



மைலால்—மேனிமேல் இருப்பதை உணரமாட்டீர்கள். நெடியேதுமில்லை.

அது தடவியதே தெரியாது! ஆம், மைலால் நிறமற்றது. மணமற்றது. பிசுபிசுப்பே இல்லாதது.

பயன்படுத்த எளிது

சில துளிகள் மைலால் மேனியிலே லேசாக தடவினால் போதும், கொசுக்களிலிருந்து, கண்ணுக்கு தெரியாமல் பாதுகாக்கும்.

மைலால்

திரவ வடிவ கொசுவிரட்டி.

கொசுக்களை விரட்டும். உங்களை அல்ல.

HTA 2355



துப்பறியும்
சூர்யா—கிரண்
நவின் பிரதாப் முல்லிக்.
வீட்டின் பின்பக்கமாகக் கிரண் அழைத்துப் போகப் பட்டாள். ஒரு காருக்குள் அவளைத் தள்ளினர்.
எங்கே, எதற்கு என்று சொல்லாமல் அழைத்துப் போனார்கள்.
கடற்கரையோரம் ஒரு பெரிய மாளிகை முன் கார் நின்றது.
வருக! வருக! உங்கள் புதிய இல்லம் உங்களை வரவேற்கிறது!
உங்கள் அறை மாடியில் இருக்கிறது. உங்கள் தேவைகளையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்.
அறைக்குள் கிரண் நுழைந்ததும் கதவு மூடி தாளிடப்பட்டது.
எல்லா ஜன்னல்களுக்கும் கம்பி போட்டிருக்கிறது. நான் சிறைப்பட்டிருக்கிறேன்.
என்னிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்? புரியலையே!
(தொடரும்) 8

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 37
வேஷம் வெளிப்பட்டது!

பயங்கரத் தோற்றங் கொண்டிருந்த அந்தக் காளாமுக சைவரை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பார்த்ததும் வந்தியத்தேவன் ஒரு கணம் திகில் அடைந்தான். பிறகு அவனுக்கு இயற்கையான துணிச்சல் திகிலை விரட்டியடித்தது. ''இவனை எங்கேயோ பார்த்திருக்கிறேனே? எங்கே?'' என்று சிந்தித்தான். ஆம், ஆம்; அரிச்சந்திர நதிக்கரையில் மரத்தடியில் படுத்திருந்த போது இரண்டு பேர் வந்து உற்றுப் பார்த்து விட்டுப் போகவில்லையா? அவர்களில் ஒருவன் இவன்! அவ்வளவுதானா? ஒரு தடவை மட்டும் பார்த்த முகமா இது? அந்தக் கூரிய பார்வையுள்ள கண்களை வேறு எங்கேயும் பார்த்ததில்லையா?''

இதற்குள், காளாமுக சைவன் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, ''ஹா! ஹா! ஹா!'' என்று சிரித்தான். அந்தக் குரல்! — அடிக்கடி கேட்ட குரல் போல இருக்கிறதே?

''அட சே! நீதானா? உனக்காகவா இந்த நள்ளிரவில் இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தேன்?'' என்று காளாமுக சைவன் கூறியபோது, அவன் வேண்டுமென்று சிறிது குரலை மாற்றிக் கொண்டு பேசியதாகத் தோன்றியது.

''பின்னே, யாருக்காக வந்தாய்?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''இளவரசரைத் தேடிக் கொண்டு வந்தேன்!'' என்றான் காளாமுகன்.

''எந்த இளவரசரை?''

''உனக்கென்ன அதைப் பற்றி? நீ ஏன் கேட்கிறாய்?''

''நானும் ஓர் இளவரசன்தான்; அதனால்தான் கேட்டேன்.''

''இளவரசனுடைய முக லட்சணத்தைப் பார்!....''

''என் முக லட்சணத்துக்கு என்ன ஐயா, குறைவு? உம்மைப் போல் தாடி மீசையும் சடை முடியும் எலும்பு மாலையும் அணிந்தால் என் முகம் இலட்சணமாகி விடுமா?''

''அணிந்து பாரேன்! அப்போது தெரியும்.''

''தாடி மீசையும் ஜடை முடியும் எத்தனை நாளில் வளரும்?''

''அது என்ன பிரமாதம்? ஒரு நாளில் வளர்ந்து விடும். வேண்டுமென்றால் ஒரு நாழிகையில் கூட......''

''அப்படித்தான் இருக்குமென்று நானும் நினைத்தேன்......''

''என்ன நினைத்தாய்?''

''ஒன்றுமில்லை. என்னைக் கட்டியிருக்கும் கட்டுக்களை அவிழ்த்துவிடு. நானும் உங்கள் கோஷ்டியில் சேர்ந்து விடுகிறேன்.''

அமரர் கல்கி

"போதும் போதும்! உன்னைப் போன்ற ஒற்றர்கள் இன்னும் யாரோ எங்கள் கூட்டத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் எங்கள் மகாசங்கம் இன்று அப்படி முடிந்தது."

"எப்படி முடிந்தது?"

"மகாசங்கத்துக்கு இளவரசர் வரப் போகிறார், அவர் சிம்மாசனம் ஏறியதும் எங்கள் மகா குருவை இராஜ குருவாக ஏற்றுக் கொள்வ தாய் வாக்களிக்கப் போகிறார் என்று காத்திருந்தோம்; இளவரசர் வரவேயில்லை."

"என்னைக் கட்டு அவிழ்த்து விடு; இளவரசர் ஏன் வரவில்லை யென்று நான் தெரியப்படுத்துகி றேன்."

"எந்த இளவரசர்?"

"வேறு யார்? கண்டராதித்தரின் குமாரர் மதுராந்தகர்தான்!"

"நான் ஊகித்தது சரி!"

"என்ன ஊகித்தாய்?"

"நீ ஒற்றன் என்று ஊகித்ததைத் தான் சொல்கிறேன்."

"எதைக் கொண்டு ஊகித்தாய்?"

"இளவரசரைத் தேடிக் கொண்டு வந்த போது, இந்தக் காட்டுக்குள்ளி ருந்து சிலர் வெளியேறுவதைப் பார்த்தேன். அவர்கள் இன்னார் என்று எனக்குத் தெரியும். நீ ஒற்றன் என்று சந்தேகித்துத்தான் அவர்கள் உன்னைக் கட்டிப் போட்டிருக்க வேண்டும். ஆனால் உன்னை உயி ரோடு ஏன் விட்டு விட்டுப் போனார் கள் என்றுதான் தெரியவில்லை."

"அதை நான் சொல்கிறேன்; என் னைக் கட்டு அவிழ்த்து விடு!"

"நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். உன்னைக் கட்டு அவிழ்த்து விடவும் முடியாது. நான் சொல்லுகிறபடி செய்கிறதாக ஒப்புக் கொண்டால்..."

"நீ சொல்லுகிறபடி என்ன செய்ய வேண்டும்?"

"உனக்குச் சம்பந்தமில்லாத விஷ யங்களில் தலையிடுவதில்லையென்று ஒப்புக் கொண்டு நூற்றெட்டு தோப் புக்கரணம் போட வேண்டும்!"

"அப்படியா சமாசாரம்?" என் றான் வந்தியத்தேவன்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதெல்லாம் அவனுடைய கைகள் சும்மா இருக்கவில்லை. மெள்ள மெள்ளக் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டேயிருந்தன. "நூற்றெட்டு தோப்புக்கரணம் போட வேண்டும்" என்று காளாமுகன் கூறிய போது, எல்லாக் கட்டுக்களும் அவிழ்ந்து விட்டன. அவ்வளவுதான்; ஒரே பாய்ச்சலாகக் காளாமுகன் மீது பாய்ந்தான் வந்தியத்தேவன். அவ னைக் கீழே தள்ளினான். காளாமுகன் கையில் ஏந்தியிருந்த சுளுந்து பக்கத் தில் விழுந்தது; ஆனால் அடியோடு அணைந்து விடாமல் சிறிது வெளிச் சம் கொடுத்துக் கொண்டிருந்தது.

கீழே விழுந்த காளாமுகன் மார் பின் மீது வந்தியத்தேவன் ஏறி உட் கார்ந்து கொண்டு அவன் முக தாடி யைப் பிடித்துக் குலுக்கினான். தாடி வந்தியத்தேவனுடைய கையோடு வந்து விட்டது. அதே சமயத்தில் காளாமுகன் வந்தியத்தேவனை உத றித் தள்ளிவிட்டு எழுந்து நின்றான்.

தரையில் கிடந்து அணைந்து போகும் தறுவாயிலிருந்த சுளுந்தை வந்தியத்தேவன் எடுத்துத் தூக்கிப் பிடித்தான்.

தாடியும் சடையும் இழந்த காளா முகனுடைய முகம் சாக்ஷாத் வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியானுடைய முகமாகக் காட்சி அளித்தது.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சிறிது நேரம் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"வைஷ்ணவரே! சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடக் கூடாது என்று எனக்குச் சொன்னீரே? நீர் மட்டும் என்ன செய்தீராம்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"உன்னைப் போல் நான் அபாயத் தில் அகப்பட்டுக் கொள்ளவில்லையே, அப்பனே! நான் மட்டும் இப்போது வந்திரா விட்டால்....."

"நீர்தான் என் கட்டுக்களை அவிழ்த்து விட்டதாக எண்ணமா?"

"நீயே கட்டு அவிழ்த்துக் கொண் டிருந்தாலும் இந்தக் காட்டிலிருந்து

என் உதவியில்லாமல் வெளியே போக முடியாது. நரிகளுக்கு இரையாக வேண்டியதுதான்.''

''நரிகள் கிடக்கட்டும். இங்கே சற்று முன் வந்து கூடியிருந்த மந்திரவாதி நரிகளை நீர் பார்த்திருந்தால்.... அந்த நரிகளிடமிருந்து நான் தப்பியதுதான் பெரிய காரியம்!''

''அந்த மந்திரவாதிகளை எனக்கும் தெரியும். மந்திரவாதிகள் மட்டுந்தான் வந்திருந்தார்களா? இன்னும் யாராவது வந்திருந்தார்களா?''

''சிறிய மீன் ஒன்று வந்திருந்தது. புலியை விழுங்க ஆசைப்படும் அதிசயமான மீன் அது!''

''ஆகா! சொல்! சொல்! யார் யார் வந்திருந்தார்கள், என்னென்ன நடந்தது. விவரமாகச் சொல்!''

''நீர் எதற்காக இந்த வேஷம் தரித்தீர்? சாயங்காலம் எங்கே போயிருந்தீர்? போயிருந்த இடத்தில் என்ன நடந்தது? — அதையெல்லாம் சொன்னால் இங்கே நடந்ததை நான் சொல்கிறேன்!''

''நான் சொல்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லை. இன்று முன்னிரவில் கொள்ளிடக் கரையில் காளாமுகர் மகாசங்கம் கூடும் என்று தெரிந்தது. அங்கே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகத்தான் இந்த வேஷம் போட்டுக் கொண்டு போனேன். பார்த்து விட்டுக் கொள்ளிடக்கரைத் தோணித் துறையில் உன்னை வந்து சந்திக்கலாம் என்று எண்ணினேன். மகா சங்கம் கூடிற்று. பெரிய பழுவேட்டரையர் வந்திருந்தார். காளாமுகர்களின் பெரிய குருவும் வந்திருந்தார். ஆனால் முக்கியமாக யார் வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அவர் வரவேயில்லை!''

''இளவரசர் மதுராந்தகரைத்தானே எதிர்பார்த்தார்கள்?''

''ஆம்; அது எப்படி உனக்குத் தெரிந்தது?''

''மதுராந்தகர் தஞ்சைச் சிம்மாசனத்தில் ஏறினால் இராஜ்ய பாரம் அழகாய்த்தான் நடைபெறும்!''

''ஏன் அவ்விதம் சொல்கிறாய்?''

''ஒரு முரட்டுக் குதிரையை அடக்கி ஆள அவரால் முடியவில்லையே? பழுவேட்டரையர் போன்ற சிற்றரசர்களையும், கலகமூட்டும் காளாமுக சைவர்களையும், சண்டைக்கார வீர வைஷ்ணவர்களையும் அவரால் எப்படி அடக்கி ஆள முடியும்?''

ஆழ்வார்க்கடியான் நகைத்து விட்டு ''நீ வரும் வழியில் மதுராந்தகரைப் பார்த்தாயா? அவருக்கு என்ன நேர்ந்தது. தெரியும்மா?'' என்று கேட்டான்

வந்தியத்தேவன்தான் மதுராந்தகரைத் தொடர்ந்து வந்ததையும், திடீரென்று தீவர்த்தியைக் கண்டு அவருடைய குதிரை தெறிகெட்டு ஓடியதையும், தான் அவரைச் சிறிது தூரம் தேடிப் போனதையும், கடைசியில் களத்து மேட்டில் குதிரையை மட்டும் பார்த்ததையும் கூறினான்.

''ஐயோ! பாவம்! குதிரை அவரை எங்கே தள்ளிற்றோ, என்னமோ? அவருடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நேர்ந்திருக்கலாம். அதனால்தான் அவர் உங்கள் மகா சங்கத்துக்கு வரவில்லை. நாம் மறுபடியும் போய் அவரைத் தேடிப் பார்க்கலாமா?''

''அழகுதான்! அதைப் பற்றி நமக்கு என்ன? நம்முடைய வேலையை நாம் பார்க்கலாம் வா! புறப்படு உடனே! பொழுது விடிவதற்குள் நாம் கொள்ளிட நதியின் தோணித் துறையில் இருக்க வேண்டும்.''

''மதுராந்தகர் வாய்க்காலிலோ, வயல் வரப்பிலோ விழுந்து செத்துக் கிடந்தாரானால்?.... அப்போதுகூட நமக்கு என்ன கவலை என்று சொல்வீரா?''

''அப்படியெல்லாம் நேர்ந்திராது. அநிருத்தர் அதற்கு முன் ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்திருப்பார்.''

''முதன் மந்திரி அநிருத்தரா? அவருக்கு என்ன இதைப் பற்றித் தெரியும்?''

''ஆகா! அது என்ன அப்படிக் கேட்கிறாய்? அன்பில் அநிருத்தருக்குத் தெரியாமல் இந்த ராஜ்யத்தில் எந்த இடத்திலும் எதுவுமே நடக்க முடியாது.''

''ஓகோ! கடம்பூர் மாளிகையில்

நடந்த சதிக் கூட்டத்தைப் பற்றிய விஷயமும் அவருக்குத் தெரியுமா?''

''ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்திக் கொள். வீர நாராயணபுரத்துத் திருவிழாவின் போது பழுவூர் ராணியின் பல்லக்குப் போனதை நாம் இருவர் ஒரு மரத்தடியில் நின்று பார்த்தோம் அல்லவா?''

''ஆம்; பல்லக்கின் திரை விலகியதும் நீ அடைந்த பரபரப்பு இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. பழுவூர் ராணியிடம் ஒரு ஓலை கொடுக்க முடியுமா என்று நீ என்னைக் கேட்டாய்!''

''நீ அதற்குச் 'சிச்சி! அது என்ன வேலை?' என்றாய். நான் ஏதோ காதல் ஓலை கொடுக்க விரும்பியதாகவே நீ என்ண



ணினாய். சதிகாரர்களின் பேச்சை நம்பி மோசம் போக வேண்டாம் என்று மதுராந்தகருக்கு எச்சரிக்கை செய்யவே நான் விரும்பினேன்; முதன் மந்திரியின் கட்டளைப்படி!''

''பல்லக்கில் இருந்தது மதுராந்தகர் என்று உனக்குத் தெரியுமா?''

''முதலில் சந்தேகித்தேன். திரை விலகியதும் அந்த இரகசியம் தெரிந்தது. நீ நல்ல அழுத்தக்காரன். நான் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும், நீ பல்லக்கில் இருந்தது பழுவூர் ராணி அல்ல, மதுராந்தகர் என்று சொல்ல மறுத்து விட்டாய் அல்லவா?''

''நீ மாத்திரம் அழுத்தக்காரன் இல்லையா? இன்று சாயங்காலம் நீ எங்கே போகப் போகிறாய் என்று கூடச் சொல்ல மறுத்து விட்டாயே?''

''சொன்னால் நீ அதிலும் தலையிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருப்பாய்! இப்போதே எவ்வளவு சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டாய், பார்! இனிமேலாவது....''

''காளாமுகர் கூட்டத்தைப் பற்றியும் மதுராந்தகர் அங்கே போக உத்தேசித்திருப்பது பற்றியும் முதன் மந்திரிக்குத் தெரியுமா?''

''தெரியாமலா என்னை அனுப்பினார்? அதே சமயத்தில் மதுராந்தகர் அங்கே போய்ச் சேராதிருப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். யாரோ தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான் என்று சொன்னாயே? அவனும் அநிருத்தரின் ஆளாகத்தான் இருந்திருப்பான். வேண்டுமென்றே குதிரையை மிரட்டித் தெறி கெட்டு ஓடும்படி செய்திருப்பான். தரையில் விழுந்த இளவரசரை யாராவது எடுத்துக் காப்பாற்றியிருப்பார்கள்.

"இத்தனை நேரம் அநேகமாக அவர் ரதத்திலோ, பல்லக்கிலோ ஏறித் தஞ்சையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பார். வா! நாமும் நம் வழியே போகலாம்.''

''வைஷ்ணவரே! நான் வர முடியாது.''

''இது என்ன? நீ ஒப்புக் கொண்ட காரியம் என்ன ஆயிற்று? காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலர் புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறேன். நாம் உடனே வாயு வேக மனோ வேகமாகப் போனால்தான்......''

''ஆதித்த கரிகாலரிடம் கொடுக்க வேண்டிய ஓலையை நீரே கொடுத்து விடலாமே? அவர் மதுராந்தகனைப் போல் ஸ்திரீ வேஷத்திலும் வர மாட்டார்; இரவில்







ஒளிந்தும் பிரயாணம் செய்ய மாட்டார்....''

''நீ என்ன செய்யப் போகிறாய்?''

''உண்மையில் நான் மதுராந்தகரைப் பின்தொடர்ந்து இன்று சாயங்காலம் புறப்படவில்லை. வேறொருவரைத் தொடர்ந்து போக ஆரம்பித்ததில் மதுராந்தகரை வழியில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது.''

''நான் ஒரு ஜோசியம் சொல்லுகிறேன். நீ தொடர்ந்து போக ஆரம்பித்தது ஒரு பெண்மணியாக இருக்கும்.''

''நீர் பொல்லாத வைஷ்ணவர்! ஒருநாள் உம்முடைய மண்டையை உடைத்து விட்டு மறுகாரியம் பார்க்கப் போகிறேன்.''

''அது உன்னால் முடியாத காரியம். ஏற்கெனவே என் மண்டையை ஒரு காளாமுகனுக்கு அடகு வைத்திருக்கிறேன். அது போனால் போகட்டும். நீ குடந்தையிலிருந்து யாரைத் தொடர்ந்து புறப்பட்டாய்? அந்தப் பெண் யார்?''

''கொடும்பாளூர் இளவரசி குடந்தை சோதிடர் வீட்டுக்கு வந்திருந்தாள். பல்லக்கில் ஏறிக் கொண்டு தனியாகப் புறப்பட்டுப் போனாள். உண்மையில் அந்தச் சித்தப் பிரமை கொண்ட பெண்ணைத் தொடர்ந்து நான் கிளம்பவில்லை. அவளுடைய பல்லக்கு நான் போக வேண்டிய பாதையில் கொஞ்ச தூரம் போயிற்று. திடீரென்று அந்தப் பல்லக்கைச் சில மனிதர்கள் வந்து தாக்கினார்கள். கூடப் போன தாதிப் பெண்ணை மரத்தில் கட்டிப் போட்டு விட்டு வானதியை மட்டும் கொண்டு போனார்கள். வைஷ்ணவரே! அந்தப் பெண்ணின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளாமல் உம்மோடு வர எனக்கு இஷ்டமில்லை.''

''அந்தப் பெண்ணைப் பற்றி உனக்கு என்ன அவ்வளவு கவலை?''

''அது என்ன அப்படிச் சொல்கிறீர்? ஈழத்துப்பட்ட மகாவீரர் சிறிய வேளாரின் புதல்வியல்லவா? பழையாறை இளைய பிராட்டியின் மனத்திற்குகந்த தோழியல்லவா? இன்னும், பொன்னியின் செல்வருக்கு வானதி தேவியை மணம் செய்விக்கப் போவதாகவும் ஒரு பிரஸ்தாபம் இருந்ததல்லவா?''

''அப்பனே! பொன்னியின் செல்வர்தான் கடலில் முழுகி இறந்து விட்டாரே? அவருடைய திருமணத்தைப் பற்றி இப்போது என்ன கவலை?''

''அவர் இறந்து விட்டார் என்பது என்ன நிச்சயம்! ஊகந்தானே?''

''அப்படியானால் அவர் உயிரோடிருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா?''

''வைஷ்ணவரே! என்னுடைய வாயைப் பிடுங்கி ஏதேனும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்பது உங்கள் உத்தேசமாயிருந்தால், அதை மறந்து விடும்!''

''சரி! சரி! நீ பெரிய அழுத்தக்காரன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் வானதி தேவியைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இளைய பிராட்டிக்கு அவள் பேரில் உயிர் என்பதுதான் உனக்கு நன்றாகத் தெரியுமே?''

''அதனாலேதான் நானும் கவலைப்படுகிறேன். வானதி தேவிக்கு இந்த ஆபத்து வந்தது இளைய பிராட்டிக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லவா?''

''இன்றைக்குத் தெரியா விட்டால் நாளைக்குத் தெரிந்து விடுகிறது.''

''நாளைக்குத் தெரிந்து என்ன பயன்? காளாமுகர்கள் அந்தக் கன்னிப் பெண்ணை இன்றிரவு பலி கொடுத்து விட்டால்?.....''

''வானதியைக் காளாமுகர்கள் தாக்கிப் பிடித்துக் கொண்டு போனதாகவா சொல்லுகிறாய்?''

''அப்படித்தான் எனக்குத் தோன்றியது. வானதியின் தோழியும் அப்படித்தான் என்னிடம் கூறினாள்.''

''அது உண்மையானால், நீ கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டியதில்லை. கொடும்பாளூர் வம்சத்தார் காளாமுகத்தைச் சேர்ந்தவர்கள். வானதி தேவி கொடும்பாளூர்ப் பெண் என்று தெரிந்தால், அவளுக்குக் காளாமுகர்கள் இராஜோபசாரம் செய்வார்கள்!''

''ஓகோ! இது எனக்குத் தெரியாமல் போயிற்றே?''

"ஆகையினால்தான் காளாமுகர்கள் மதுராந்தகத் தேவருக்கு எதிராக இருக்கிறார்கள்...."

"இந்த மண்டை ஓட்டுச் சாமியார்கள் எதிராக இருந்தால் என்ன வந்து விடப் போகிறது?"

"உனக்குத் தெரியாது. இந்த நாட்டில் மிகப் பெரிய குடும்பங்கள் காளாமுகத்தைச் சேர்ந்தவை. சைன்யத்திலும் அத்தகைய பலர் இருக்கிறார்கள். அதனாலேயே பழுவேட்டரையர் இன்றைக்கு இந்த ஏற்பாடு செய்திருந்தார். மதுராந்தகருக்குக் காளாமுகர்களின் ஆதரவைத் தேட முயன்றார். அது ஒரு குதிரை செய்த கோளாறினால் பலிக்காமற் போயிற்று. நீ புறப்படு, போகலாம். வருகிறாயா? அல்லது நான் கிளம்பட்டுமா?"

வந்தியத்தேவன் வேண்டா வெறுப்பாக எழுந்து குதிரையையும் கையில் பிடித்துக் கொண்டான். அடர்ந்த காடுகளின் ஊடே ஆள் நுழையக் கூடிய வழியைக் கண்டு பிடித்து அவர்கள் வெளியே வந்தார்கள்.

"அதோ பார்!" என்று ஆழ்வார்க்கடியான் வானத்தைச் சுட்டிக் காட்டினான்.

முன் எப்போதையும் விடத் தூமகேதுவின் வால் நீண்டு, வானத்தின் ஒரு பாதி முழுவதிலும் வியாபித்திருப்பதை வந்தியத்தேவன் பார்த்தான்.

குளிர்ந்த வாடைக்காற்று வீசிற்று. வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது.

தூரத்தில் கிராமத்து நாய் ஒன்று தீனமான சோகக் குரலில் அழுதது.

அத்தியாயம் 38
வானதிக்கு நேர்ந்தது!

சூரியன் மறைந்து நாலு திக்கிலும் இருள் சூழ்ந்து வந்த நேரத்தில் வானதி குடந்தை திருவாரூர் சாலையில் பல்லக்கில் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குழம்பியிருந்தது. நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் போக வேண்டும் என்றும், அங்கே காய்ச்சல் வந்து படுத்திருக்கும் இளவரசருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும் அவள் மனம் துடித்தது. ஆனால் அது எப்படிச் சாத்தியமாகும்? புத்த பிக்ஷுக்களின் விஹாரத்துக்குள் தன்னை அனுமதிப்பார்களா, அங்கே இளவரசரைத்தான் பார்க்க இயலுமா, பார்த்தாலும் பணிவிடை செய்ய முடியுமா, — என்பதையெல்லாம் எண்ணிய போது ஒரே மலைப்பாயிருந்தது. நாகைப் பட்டினத்துக்குத் தனிமையாகப் பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதை எண்ணிய போது அதைரியம் உண்டாயிற்று. அதைரியத்தைப் போக்கி மனத்தில் உறுதி உண்டு பண்ணிக் கொள்ள முயன்றாள். உலகில் பெரிய காரியம் எதுதான் எளிதில் சாத்தியமாகும்? ஒவ்வொருவர் எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்? அந்த ஓடக்காரப் பெண் கடலில் தனியாகப் படகு செலுத்திக் கொண்டு போக எவ்வளவு நெஞ்சத் துணிவு உள்ளவளாயிருக்க வேண்டும்? புயலிலும் மழையிலும் மலை போன்ற அலைகளுக்கு மத்தியில் படகு விட்டுக் கொண்டு போய் இளவரசரைக் காப்பாற்றியதற்கு எவ்வளவு நெஞ்சுத் துணிவு அவளுக்கு இருக்க வேண்டும்? தான் இந்தச் சிறிய பிரயாணத்தைக் குறித்துப் பயப்படுவது எவ்வளவு பேதமை? சூடாமணி விஹாரத்துக்குள் உடனே போக முடியாவிட்டால் பாதகமில்லை. அக்கம் பக்கத்தில் இருந்து இளவரசரைப் பற்றிய செய்தி தெரிந்து கொண்டிருந்தாலும் போதும். இளவரசரைப் பார்க்க முடியாவிட்டாலும் பாதகமில்லை; அந்த ஓடக்காரப் பெண்ணையாவது பார்க்க முடிந்தால் போதும். ஆம்,

அதுதான் சரி! அவளை எப்படியாவது தெரிந்து கொண்டால், அவள் மூலமாக இளவரசரைப் பார்க்க முடிந்தாலும் முடியலாம். அவரிடம் தனக்குள்ள அன்பு ஏதோ ஒரு பிரயோஜனத்தை எதிர்பார்த்ததல்ல என்பதை எப்படியாவது நிரூபித்துக் காட்டிவிட வேண்டும். அதற்குப் பிறகு இந்த உயிரை விட்டாலும் விட்டு விடலாம்; அல்லது புத்த சங்கத்தில் சேர்ந்து பிக்ஷுணி ஆனாலும் ஆகி விடலாம்.....

மறுநாள் எந்த நேரத்துக்கு நாகைப் பட்டினம் போய்ச் சேரலாம் என்று பல்லக்குச் சுமப்பவர்களை விசாரிப்பதற்காக வானதி பல்லக்கின் திரையை விலக்கி வெளியில் பார்த்தாள். சாலை ஓரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களுக்குப் பின்னால் சில உருவங்கள் மறைந்து நிற்பது போல் அவளுக்குத் தோன்றியது. இன்னும் சிறிது கவனமாக உற்றுப் பார்த்தாள். மறைந்து நின்றவர்கள் வீர சைவ காளாமுகர்கள் என்று தெரிந்தது. இதைக் குறித்து வானதிக்குச் சிறிதும் கவலை உண்டாகவில்லை. அவள் கொடும்பாளூர் அரண்மனையில் வளர்ந்த காலத்தில் அடிக்கடி காளாமுகர்கள் அங்கே வருவதுண்டு. அவளுடைய பெரிய தந்தையிடம் பேசித் தங்களுக்குவேண்டியபொருள்களைப் பெற்றுப் போவதுண்டு. காளாமுகர்களின் பெரிய குருவே ஒரு சமயம் கொடும்பாளூர் வந்திருக்கிறார். அவருக்கு உபசாரங்கள்—பூஜைகள் எல்லாம் நடந்தன. அவளுடைய பெரிய தகப்பனார் பூதி விக்கிரம கேசரி பல திருக்கோயில்களில் காளா முகர்களுக்கு அன்னம் படைப்பதற்கென்றே நிவந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் காளாமுகர்கள் தனக்குக் கெடுதல் ஒன்றும் செய்ய மாட்டார்கள். ஒரு வேளை உதவி செய்தாலும் செய்வார்கள். இன்றைக்கு அவர்களுடைய மகா சங்கம் கூடுகிறதென்பதும் வானதிக்குத் தெரிந்திருந்தது. ஆகையால் அன்று பழையாறையிலிருந்து குடந்தைக்கு வந்தபோது கூடச் சாலையில் காளாமுகர் கூட்டங்களை அவள் பார்க்கும்படி நேர்ந்தது. ஆனாலும், இவர்கள் எதற்காக மரத்தின் பின்னால் ஒளிந்து நிற்கிறார்கள்? தன்னை ஒருவேளை வேறு யாராவது என்று அவர்கள் எண்ணிக் கொண்டு ஏதாவது தீங்கு செய்யலாம் அல்லவா?.....

இப்படி அவள் எண்ணிக் கொண்டிருந்தபோதே, மறைந்திருந்தவர்கள் திடு திடு வென்று ஓடி வந்தார்கள். பல்லக்கைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போதும் அவள் பயப்படவில்லை. தான் யார் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க எண்ணினாள். எப்படி அதைச் சொல்வது என்று யோசிப்பதற்குள், பல்லக்குடன் வந்த பணிப் பெண்ணை இரண்டு பேர் பிடித்து மரத்தோடு கட்டுவதைப் பார்த்தாள். உடனே அவளை அறியாமல்பீதியுடன் கூடிய கூச்சல் ஒன்று அவள் வாயிலருந்து வந்தது. பல்லக்கைச் சூழ்ந்திருந்த காளாமுகர்களில் ஒருவன் ஒரு திருசூலத்தை எடுத்து அவள் முகத்துக்கு நேரே காட்டி, "பெண்ணே, கூச்சல் போடாதே! கூச்சல் போடாதிருந்தால் உன்னை ஒன்றும் செய்ய மாட்டோம். இல்லாவிட்டால், இந்தச்சூலத்தினால் குத்திக் கொன்று விடுவோம்!" என்றான்.

வானதிக்குச் சிறிது தைரியம்வந்தது. கம்பீரமாகப் பேச எண்ணிக்கொண்டு "நான் யார் தெரியுமா? கொடும்பாளூர் வேளார் மகள். என்னைத் தொட்டீர்களானால் நீங்கள் நிர்மூலமாவீர்கள்" என்றாள். அவளுடைய மனத்தில் தைரியம் இருந்ததே தவிர, பேசும்போது குரல்நடுங்கிற்று. அதைக்கேட்டகாளாமுகன் "எல்லாம் எங்களுக்குத் தெரியும்.தெரிந்துதான் உனக்காகக்காத்திருந்தோம். சற்று நேரம் சத்தமிடாமலிரு! இல்லாவிட்டால்?......." என்று மறுபடியும் திரிசூலத்தை எடுத்து நீட்டினான்.

அதே சமயத்தில் சாட்டையினால் 'சுளீர்' 'சுளீர்' என்று அடிக்கும் சத்தமும், 'ஐயோ' 'ஐயோ' என்ற குரலும் கேட்டது. அப்படி அடிபட்டு அலறியவர்கள் சிவிகைதூக்குவோர் என்பதை வானதி அறிந்தாள். அவர்களைச் சில காளாமுகர்கள் சாட்டையினால் அடித்திருக்க வேண்டும்!

அதைப் பற்றி வானதி ஆத்திரப்பட்டுப் பல்லக்கிலிருந்து கீழே இறங்கி விட எண்ணினாள். அதற்குச்

சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஏனெனில் சிவிகை தூக்கிகள் பல்லக்கைச் சுமந்து கொண்டு ஓடத் தொடங்கினார்கள். காளாமுகர்களும் பல்லக்கைச் சூழ்ந்த வண்ணம் ஓடி வந்தார்கள். ஓடும் போது அவர்கள் பயங்கரமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு ஓடினார்கள். ஆகையால் வானதி, தான் கூச்சல் போடுவதில் பயனில்லை என்பதை உணர்ந்தாள். ஓடும் பல்லக்கிலிருந்து கீழே குதிப்பதும் இயலாத காரியம். அப்படிக் குதித்தாலும், இந்தப் பயங்கர மனிதர்களுக்கு மத்தியில் தானே குதிக்க வேண்டும்? இவர்கள் எங்கேதான் தன்னைக் கொண்டு போகிறார்கள். எதற்காகக் கொண்டு போகிறார்கள், பார்க்கலாம் என்ற எண்ணமும் இடை இடையே தோன்றியது.

சுமார் அரை நாழிகை நேரம் ஓடிய பிறகு, மரங்களின் மறைவிலிருந்த ஒரு பழைய துர்க்கை கோயிலுக்கு அருகில் வந்து நின்றார்கள். இதற்குள் நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. ஒருவன் கோயிலுக்குள் சென்று அங்கே எரிந்து கொண்டிருந்த தீபத்தை எடுத்துக் கொண்டு வந்து வானதியின் முகத்துக்கு எதிரே காட்டினான், காளாமுகர்களில் ஒருவன், வானதியை உற்றுப் பார்த்து, "பெண்ணே! நாங்கள் கேட்கும் விவரத்தைச் சொல்லிவிடு! உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம். அல்லது நீ எங்கே போக விரும்புகிறாயோ, அங்கே கொண்டு போய்ப் பத்திரமாய்ச் சேர்த்து விடுகிறோம்" என்றான்.

வானதியின் மனத்தில் இதுவரை தோன்றாத சந்தேகம் உதித்தது. "எனக்கு என்ன விவரம் தெரியும்? என்னை என்ன கேட்கப் போகிறீர்கள்?" என்றாள்.

"பெண்ணே! நீ யாரோ ஒருவரை அந்தரங்கமாகச் சந்திப்பதற்கே இப்படித் தனியாகப் பிரயாணம் தொடங்கினாய் அல்லவா? அவர் யார்? யாரைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டாய்?"

வானதியின் சந்தேகம் உறுதிப்பட்டது. ஒரு கண நேரத்தில் அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. ஒரு சிறிய சத்தத்தைக் கேட்டாலும் பயந்து மிரண்டு கொண்டிருந்த பெண் மான் உலகில் எதற்கும் அஞ்சாத பெண் சிங்கமாக மாறியது.

"நான் யாரைச் சந்திக்கப் புறப்பட்டால் உங்களுக்கு என்ன? நீங்கள் யார் அதைப் பற்றிக் கேட்பதற்கு? சொல்ல முடியாது!" என்றாள் வானதி.

காளாமுகன் சிரித்தான்.

"அதை நீ சொல்ல வேண்டாம். எங்களுக்கே தெரியும். இளவரசன் அருள்மொழி வர்மனைச் சந்திப்பதற்குத்தான் நீ புறப்பட்டாய். அவன் எங்கே ஒளிந்திருக்கிறான் என்று சொல்லி விடு. உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டு விடுகிறோம்" என்றான்.

"நீங்கள் என்ன வேணுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னிடமிருந்து எந்த விவரமும் நீங்கள் தெரிந்து கொள்ள முடியாது" என்று வானதி அழுத்தம் திருத்தமாய்க் கூறினாள்.

"உன்னை என்ன வேணுமானாலும் செய்து கொள்ளலாம் என்றா சொல்கிறாய்? நாங்கள் செய்யப் போவது என்னவென்று அறிந்தால் இப்படிச் சொல்லத் துணிய மாட்டாய்!"

"என்ன செய்யப் போகிறீர்கள்? அதையும் சொல்லிப் பார்த்து விடுங்கள்!"

"முதலில் உன் அழகான பூப் போன்ற கரங்களில் ஒன்றை இந்தத் தீவர்த்திப் பிழம்பில் வைத்துக் கொளுத்துவோம். பிறகு இன்னொரு கையையும் கொளுத்துவோம். பின்னர், உன் கரிய கூந்தலில் தீவர்த்தியைக் காட்டி எரிப்போம்...."

"நன்றாகச் செய்து கொள்ளுங்கள். இதோ என் கை! தீவர்த்தியை அருகில் கொண்டு வாருங்கள்!" என்றாள் வானதி.

இராஜ்யத்தில் நடந்து வந்த சூழ்ச்சிகள், சதிகள் எல்லாம் ஓரளவு வானதிக்குத் தெரிந்துதானிருந்தது. இந்தத் துஷ்டர்கள் சதிகாரர்களின் ஆட்களாயிருக்க வேண்டும். இளவரசர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். அவருக்குக் கெடுதி செய்யும் நோக்கத்துடனேதான்



அருள்வாக்கு

எந்த ஆபீஸானாலும் ஃபாக்டரியானாலும் வாரத்தில் ஒருநாள் லீவு இருக்கிறதல்லவா? பள்ளிக்கூடம் கோர்ட் முதலியனவற்றில் வாரத்துக்கு இரண்டு நாட்கள் லீவு கூட இருக்கிறது. இந்த லீவு நாட்களெல்லாம் பொதுத் தொண்டுக்கு என்றே பகவான் கொடுத்திருப்பது என்று நினைத்து, கூட்டாகச் சேர்ந்து சேவை செய்ய வேண்டும். மனஸ் மட்டும் இருந்து விட்டால் செய்வதற்கு எத்தனையோ பணிகள் இருக்கின்றன....

சிரத்தையாக உழைக்கக் கூடியவர்கள், பண விஷயத்தில் நாணயமாக இருக்கக் கூடியவர்கள், 'இவர்கள் சுத்தமானவர்கள்' என்று ஸமூஹத்துக்கு நம்பகமாக இருக்கிறவர்கள் ஒரு பத்துப் பேர் அங்கங்கே சேர்ந்து விட்டால் போதும், ஊர் உலகத்தில் ஒரு குறைவில்லாமல் பொது நலக் காரியங்கள் ஜாம் ஜாம் என்று நடந்து விடும்.

பணியில் சேர்கிறவர்கள், பணியில் பயனடைகிறவர்கள் (beneficiaries) இரண்டிலும் 'ஜாதி' என்ற அம்சமே இருக்கக் கூடாது. பணக்காரன் — ஏழை, படித்தவன் — படிக்காதவன் எல்லோரும் இதில் சேர்ந்துழைக்க இடமிருக்க வேண்டும். இது ஒன்றிலாவது நேராகவோ மறைமுகமாகவோ ஜாதிவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் கார்யம் நடக்க வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

இருக்க வேண்டும். இளவரசருக்காக, அவருடைய பாதுகாப்புக்காக, நான் இத்தகைய கொடூரங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தால், அதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் என்ன இருக்கிறது? — இவ்வாறு எண்ணினாள் கொடும்பாளூர் இளவரசி வானதி. அந்த எண்ணந்தான் அவளுக்கு அத்தகைய மனோ தைரியத்தை அளித்தது.

"பெண்ணே! யோசித்துச் சொல்! வீண் பிடிவாதம் வேண்டாம். பிறகு வருத்தப்படுவாய்! உன் ஆயுள் உள்ள வரையில் கண் தெரியாத குருபியாயிருப்பாய்!" என்றான் காளாமுகன்.

"என்னை நீங்கள் அணு அணுவாகக் கொளுத்துங்கள்; என் சதையைத் துண்டு துண்டாக வெட்டுங்கள். ஆனாலும் என்னிடமிருந்து ஒரு விவரமும் அறிய மாட்டீர்கள்!" என்றாள்.

"அப்படியானால், எங்களுடைய காரியத்தைப் பார்க்க வேண்டியது தான்! சீடா! கொண்டு வா அந்த தீவர்த்தியை இங்கே!" என்றான் காளாமுகன்.

அச்சமயம் வானதியின் கவனம் சற்றுத் தூரத்தில் சென்றது. யானைகள், குதிரைகள், பல்லக்குகள், காலாள் வீரர்கள் முதலியவர்கள் அடங்கிய நீண்ட ஊர்வலம் ஒன்று அவர்கள் இருந்த இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள். தெய்வத்தின் அருளால் தனக்கு ஏதோ எதிர்பாராத உதவி வருகிறது என்று எண்ணினாள்.

"ஜாக்கிரதை! அதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினாள்.

காளாமுகன் மறுபடியும் சிரித்தான்.

"வருகிறது யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"முதன் மந்திரி அநிருத்தர் மாதிரி இருக்கிறது. நான் இப்போது கூச்சல் போட்டால் அவர்களுக்குக் காது கேட்கும். ஜாக்கிரதை! என்னை விட்டு விட்டு ஓடிப் போய் விடுங்கள்! இல்லாவிட்டால்....." என்றாள் வானதி.

"ஆம், பெண்ணே! வருகிறவர் முதன் மந்திரி அன்பில் அநிருத்தர் தான். அவருடைய கட்டளையின் பேரில்தான் உன்னை நாங்கள் பிடித்துக் கொண்டு வந்தோம்" என்றான் காளாமுகன்.

இப்போது வானதியை மறுபடியும் திகில் பற்றிக் கொண்டது. அவளை அறியாமல் பீதி நிறைந்த கூச்சல் ஒன்று அவள் தொண்டையிலிருந்து வந்தது. அதை அடக்கிக் கொள்ளுவதற்காகத் தன்னுடைய வாயைத் தானே பொத்திக் கொள்ள முயன்றாள்.

(தொடரும்)

பாரம்

கடிதம் நாலே வரிகளில் இருந்தது. தலைமை அலுவலகத்திலிருந்து வந்திருந்த கடிதம்.... டிவிஷனல் மானேஜர் பாஷையில் 'நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம்' போலிருந்த கடிதம்!

"மாற்றல் உத்தரவு போட்டு மூணாவதும் கடைசித் தடவையுமாக ஜாயினிங்க் தேதியை எக்ஸ்டெண்ட் பண்ணியிருக்கான். ஸைட் ஆபீஸில வேற அக்கவுண்டண்ட் கிடையாது. நீர் இல்லாம வவுச்சர் மொத்தமும் தேங்கியிருக்கு. எப்பய்யா கிளம்பப் போறீர்?" வள்ளென்று விழுந்த மானேஜரை இயலாமையின் தவிப்போடு பார்த்தான்.

"..... ஸார்.... உங்களுக்குத் தெரியாததில்ல.... அம்மாவுக்கு இப்பவோ அப்பவோன்னு க்ரிடிக்கலா இருக்குது..." என்றவனை இடைமறித்தார் அவர்.

".... ஸைட்டிலயும் அப்படித்தான்யா. கிரிடிக்கலாத்தான் இருக்குது. அடுத்த மாசம் ஆடிட்டர் வேறே வந்து உட்காரப் போறான். என்ன பண்ணுவ? வேணா நான் போய் ஸைட்ல உன் வேலையைச் செய்யறேன். நீ இங்கே இருந்து என் வேலை, வீட்டு வேலை எல்லாம் பாக்குறியா?"

என்றதும் நொந்து போய் வெளியில் வந்தான்.

ஹால் நிசப்தமாக அவனை ஏறிட்டது. அறையினுள் மானேஜர் கத்தியது துல்லியமாகக் கேட்டிருக்கும்...

சில பேர் அவனைக் கூப்பிட்டுப் பேச முயன்றார்கள். புத்திமதி சொல்வார்கள், ஏதாவது அர்த்தமில்லாமல்... அவனுக்கு எதையும் கேட்க வேண்டும் போல் இல்லை.

அவனுக்குள் ஒரு வெறுப்பு விஸ்வரூபம் எடுத்து நின்றது. தன் நிலை பற்றிய வெறுப்பு, தன் குடும்பம் பற்றிய வெறுப்பு, வேலை மாற்றம் குறித்த வெறுப்பு...

வீட்டில் சிறிது நேரம் உட்கார்ந்து கிறுக்கி விட்டு ஏதோ உந்துதலில் ஸெக்ஷன் ஆபீசரிடம் சொல்லி விட்டு நர்ஸிங் ஹோம் போனான்.

ஆர். கே. பத்மா

அவன் அம்மா இருந்த பதினான்காம் எண் அறையில் வித்தியாசம் எதுவுமில்லாதது தெரிந்தது. அவனுக்குள் சட்டென்று ஓர் ஏமாற்றம் பரவியது. டியூப் வழியாகத் திரவ ஆகாரம் ஏறிக் கொண்டிருக்க, சலனமின்றி இருந்தது அம்மாவின் முகம்.

இன்னும் ஒன்றும் ஆகவில்லை!

முகம், கை, கழுத்து என்று சுருங்கி இடுங்கியிருந்த அவளுடைய தோலைப் பார்த்த போது இன்னமும் எப்படி உயிர் இந்தக் கூட்டில் ஒட்டிக் கொண்டிருக்கிறது என்று வியப்பு ஏற்பட்டது.

'மூன்றரை மாசமாக இந்தக் கோமா நிலையில்... இதையே பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை.... சீக்கிரம் எனக்கு நிம்மதியைக் கொடும்மா' என்று அரற்ற வேண்டும் போலிருந்தது.

வாசற்படியில் கோலமிடப் போனவள் வழுக்கி விழுந்து மயங்கிய நிமிஷத்திலிருந்து இந்த நிமிஷம் வரை, ஒவ்வொரு முறை டாக்டர் கூப்பிடும் போதும், இரவில் எழுந்து அந்த நிச்சலன முகத்தைப் பார்க்கும் போதும், ஆபீஸில் வேலையிலிருக்கும் போது டெலிபோன் ஒலிக்கும் ஒவ்வொரு தடவையும்... அந்தச் செய்தியாய் இருக்குமோ, ஏதாவது ஆகியிருக்குமோ என்று முதலில் பயந்து.... கொஞ்சம் தவித்து, பேச்சோரும் மயக்கமுமாய்க் கிடப்பவளை நினைத்து மருகி,.... கொஞ்சம் கொஞ்சமாய் "இன்னும் போகவில்லையா" என்ற எதிர்பார்ப்புக்கு வந்து விட்ட அவன், ஒருவித ஏமாற்றத்தோடு நர்ஸிங் ஹோம் வாசலில் வந்து நின்று கொண்டான்.

அறுநூற்றி ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருந்த ஸைட் ஆபீசுக்கு அவனை மாற்றியிருந்தார்கள்.

மாற்றல் உத்தரவு வந்த அடுத்த நாள்தான் அம்மா படுக்கையில் விழுந்தாள். ஒரு மாதம் ஓடியது. அவன் கோரிக்கையை ஏற்று முதல் தடவை எக்ஸ்டென்ஷன் அனுதாபத்தோடு வழங்கப்பட்டது. நாட்கள் நகர்ந்ததே தவிர அம்மா அப்படியே இருந்தாள்.

அவனுக்குள் ஒருவிதத் தவிப்பு கூடிக் கொண்டே வந்தது.

"எப்போ டாக்டர்....?" என்று கூச்சப்பட்டுக் கொண்டே கேட்டபடி இரண்டாவது தடவையாக ஜாயினிங்க் டைம் எக்ஸ்டென்

ஷனை வாங்கிக் கொண்டான்.

டாக்டர் எப்போதும் போல்,

''மூணு நாளிலும் முடியலாம். முப்பது நாளிலும் முடியலாம்... மூணு மாசம் கூட ஆகலாம்'' என்ற போது வயிற்றைக் கலக்கியது.

''கடவுளே! அதிகம் கஷ்டப்படாமல், கஷ்டப்படுத்தாமல் அவளை அழைத்துக் கொண்டு விடேன்'' என்று பிரார்த்திப்பான்....

''பேசாமல் மெர்ஸி கில்லிங் மாதிரி ஏதாவது செய்து விடலாம்.'' ஜானகி சொன்னதும் பத்து நாட்களுக்கு முன் எப்படி சுள்ளென்று எரிந்து விழுந்தான்...

மனம் பழைய நினைவுகளை அசை போட்டபடி இருக்க, திரும்பவும் ஆபீசுக்கு வந்து ஸீட்டில் உட்கார்ந்து கொண்டான்.

நண்பர்கள் உணவு இடைவேளைக்கு வெளியே கிளம்பிக் கொண்டிருந்தனர்.

''ஜானகி அரை மணிக்கு முன்னே அவங்க ஆபீஸிலிருந்து போன் பண்ணாங்க. இப்ப கண்டிஷன் எப்படி இருக்குன்னு கேட்டாங்க. நீ வந்ததும் ஃபோன் பண்ணு வேன்னு சொன்னேன்''—ரவி அவனிடத்தில் திகதிகப்பாய்ச் சொல்லி விட்டுப் போனான்.

அவனுக்கு இருந்த மனநிலையில் ஜானகியின் பேரிலும் எரிச்சலாய் வந்தது. மனைவியாம் மனைவி! ஊர் உலகத்தில் மாமியார் மருமகள் சண்டை இல்லையா என்ன?

தன்னை மாதிரி இரண்டு துருவமாய் அம்மாவும் மனைவியும் யாருக்குமே வாய்க்காது என்று கழிவிரக்கப்பட்டுக் கொண்டான்.

இரண்டு பெண்களுக்குமே வாய் அதிகம். ஜானகி வேலைக்குப் போவது பெரிய பிரச்னையைக் கிளப்பியது.

''கண்ட ஆபீஸ் தடியனோட அவ வீட்டுக்கு ஸ்கூட்டர்ல வரா, போறா. நீ ஒண்ணும் காதில் போட்டுக்கிறதில்லை'' என்று ஒரு பக்கம் அம்மாவும், ''நான் எல்லாருடனும் சரிநிகராப் பழகுவேன். ஆனா நெருப்பு மாதிரி. உங்கம்மா மாதிரி இன்டீஸண்டா பேசற ஆளோட இந்த ஜென்மத்தில் ஒத்து வராது'' என்று ஜானகியும் மறுபக்கம் அவனை மத்தளமாய் இடிக்க.

சம்சாரத்தில் அபஸ்வரம் தட்டி ஜானகி பிரிந்து போய்த் தன் அப்பா வீட்டில் இருக்க ஆரம்பித்தாள்.

அவன் மென்மையாகச் சொல்லிப் பார்த்தான்.

''அம்மா வயசானவ. கொஞ்ச நாள் நீ பொறுத்துக்கக் கூடாதா? அவ பழைய காலத்து மனுஷியே தவிர கெட்டவ இல்லை தெரியுமா?''

''பொம்பளையா உங்கம்மா? ராட்சசி.... என் வழிக்கே வரதில்லைன்னு உங்கம்மா சொல்ற வரையில நான் இங்கேதான் இருப்பேன்'' என்றாள்.

நீங்களாவது சொல்லக் கூடாதா என்று இறைஞ்சலோடு அவன் அவள் வீட்டினரைப் பார்த்தான். ஆனால் அவர்களோ,

''ஏன் கஷ்டப்படறீங்க? பேசாம மாசா மாசம் இத்தனை ரூபான்னு உங்கம்மாவுக்





"எங்க வீடு காங்கிரஸ் கட்சி மாதிரி—எவ்வளவு தப்புப் பண்ணினாலும் கடைசி வரைக்கும் இல்லவே இல்லைன்னு சாதிச்சிடுவாங்க!"

"அது பரவாயில்லையே; எங்க வீடு ஜனதா கட்சி மாதிரி! சின்னத் தப்புன்னாலும் பெரிசு பண்ணி ஊரைக் கூட்டிடுவாங்க!"

— சேத்தூர் அன்பழகன்.

குக் கொடுத்திட்டு நீங்க தனியா வந்துருங்க... வேலைக்குள்ள ஒத்துப் போகலைன்னா ரொம்பக் கஷ்டம்" என்றனர்.

"வீடுன்னா ஆயிரம் இருக்கும். குடும்பத்துக்கு அடங்கின பொண்ணா அவ வர்ற போது வரட்டும்... பொம்பளைக்கு அவ்வளவு திமிரா?" என்று அம்மாவும் வீம்பாக விட்டுக் கொடுக்காமல் பேசிய போது அவன் மனம் சிதைந்து போனது. மொத்தத்தில் திருமணமான இரண்டாம் ஆண்டே வாழ்க்கை கசக்க ஆரம்பித்து விட்டது.

"லஞ்ச் சாப்பிடலையா?" தோள் மீது கை படர்ந்ததும் நிமிர்ந்தான். ரவி பாக்கை மென்றபடி நின்றிருந்தான்.

"ப்ச."

"ஜானகிக்கு ஃபோன் பண்ணியா?" என்றான் விடாமல். மௌனமாக இருக்க, "நீ எழுந்திரு சொல்றேன். இப்படி வா." வலிய உள்ளங்கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஆபீசிலிருந்து இறங்கி ரோட்டைக் கடந்து கிருஷ்ணா பவன் நோக்கி நடந்தான்.

".... ப்ச... வேண்டாம் ரவி... எனக்குப் பசிக்கலை" என்றான்.

"டேய்... என்னடா இது. சின்னப் பையன் மாதிரி. சொல்றதைக் கேளு." கையை இறுகப் பற்றிக் கொண்டு ஹோட்டலில் நுழைந்தான் ரவி. தோசை, காப்பி என்று ஆர்டர் கொடுத்து விட்டு,

"இங்கே பாரு. திங்கட் கிழமை அங்கே ரிப்போர்ட் பண்ணணும். வர்ற சனிக்கிழமை ராத்திரி கிளம்பு. திங்கள் டியூட்டில சேர்ந்ததும் அங்கே இருக்கிற மானேஜர் கிட்ட சொல்லிட்டுக் கைய காலப் புடிச்சு லீவு போட்டுட்டு இங்கே வந்து சேரு. நாலு நாள் உங்கம்மாவை நான் பாத்துக்கறேன்." ரவி நம்பிக்கையோடு சொன்னான்.

".... அதுக்கில்ல ரவி. அந்த நாலு நாள்ல ஏதாவது ஆயிருச்சன்னா நர்ஸிங் ஹோம்ல உடனே ரிமூவ் பண்ணச் சொல்லுவாங்க இல்ல."

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன். ஆபீஸ்ல இதுக்கு மேல சமாளிக்க முடியாது. நான் சொல்றதைக் கேளு" என்று ரவி வற்புறுத்தினான்.

சனிக்கிழமை வண்டியில் ஏறும் போது ரவியின் கையைப் பற்றிக் கொண்டான். நண்பனைக் கஷ்டப்படுத்தும் சோகம் தவிர வேறு ஏதும் பெரிதாக அழுத்தவில்லை....

"உன்னைத்தான்டா நம்பியிருக்கேன்."

"டோண்ட் ஒர்ரி... நான் பாத்துக்கறேன். ஒண்ணும் ஆயிடாது. ஜானகிக்கு போன் பண்ணியா இல்லையா?" — ரவி கேட்டதும் இவன் தலையைக் குனிந்து கொண்டான்.

"அம்மாவை சப்போர்ட் பண்ண வேண்டியதுதான். ஆனா ஒய்ஃப்ங்கிற பந்தம் இன்னும் ரொம்ப நாள் கூட வரப் போகுது. ஏண்டா புரிஞ்சுக்க மாட்டேங்கறே?" ரயில் நகர, கை ஆட்டினான்.

ரவி விளக்கொளியில் தேய்ந்தான்.

திங்கட் கிழமை ஆபீசில் கையெழுத்திட்டு நிமிர்ந்த போது மெட்ராஸ் டிரங்க்கால் அவனுக்கு வந்தது.

"முடிஞ்சிருச்சி..... எல்லாம் முடிஞ்சிருச்சி... ஸாரிடா." ரவி கரகரப்பான குரலில் சொல்ல, அதிர்ந்தான். "உன்னை அனுப்பிட்டு ராத்திரி நர்ஸிங் ஹோம் போறேன், ஸீரியஸ்! ஞாயிறு விடியற் காலையில் ஆச்சு. உனக்குத் தகவல் தெரிஞ்சு நீ வர திங்கள் கிழமை சாயந்திரம் ஆயிரும்னுட்டு..... நானே, நீ சொன்ன மாதிரி எல்லாத்தையும் முடிச்சுட்டேன்...."

அவன் இமைக்காமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஜானகிக்குத் தகவல் தெரிஞ்சதும் வந்துட்டாங்க. ஃபீல் பண்ணி ரொம்ப அழுதாங்க... லீவு போட்டுட்டு இன்னைக்குக் கிளம்பி உன் ஊருக்கு வராங்க. நாளைக்கு ஸ்டேஷனுக்குப் போய் அவங்களை அழைச்சிட்டுப் போ என்ன?"

ரவி பேசி ஓய்ந்த போது அவன் மனசு கனத்துப் போயிற்று. முடிந்து விட்டது! அம்மாவின் வாழ்க்கை முடிந்து விட்டது... ஒரு பெரிய யுத்தம் ஓய்ந்து விட்டது. இனி மேல் வீட்டில் சண்டைகள் இல்லை. வெள்ளைக் கொடியைப் பறக்க விட்டாகி விட்டது....

ஆபீசில் பர்மிஷன் சொல்லி விட்டு அவன் தன் அறையை நோக்கி நடந்தான். காலை வேளையில் குழந்தைகள் ஸ்கூல் போய்க் கொண்டிருந்தார்கள், அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு....

ரோடு ஓரம் ஓர் அம்மா தன் குழந்தைக்குக் குருவிகளைக் காட்டிச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள்...

அம்மாவின் மடியில் உட்கார்ந்து தான் பால் சாதம் உண்ட நாட்கள் ஞாபகம் வர ஆரம்பிக்க, அவன் மனத்தில் பளிச்சென்று வலி ஏற்பட்டது....

அம்மா! என்னை மன்னிச்சுடும்மா... ஜானகியோட வாழ முடியலையேங்கற ஆற்றாமையில சில சமயங்கள்ல மயங்கிக் கிடந்த உன் மேல கூடக் கோபம் வந்திடுச்சி.. என்னை மன்னிச்சுடும்மா...

அறையில் சூட்கேஸைத் திறந்து துணிகளைக் களைந்து அடியில் பழந்துணியாய் விரித்திருந்த அந்தப் புடைவையை எடுத்தான். அந்துருண்டை வாசனை அடித்தது. ஏதோ தீபாவளிக்கோ எதற்கோ அப்பா வாங்கித் தந்தார் என்று சொல்லுவாள். அது தான் அப்பாவின் கடைசி தீபாவளியாம்...

புடைவை மெத்தென்று இருந்தது. கன்னத்தில் பதித்துக் கொள்ள, அதிலிருந்து அம்மாவுக்கே உரித்தான அவளுடைய மிச்சமிருந்த வாசனை அடிக்க, அவன், "...ம்மா... ஆ....ஆ....ம்மா" என்று விம்மி அழ ஆரம்பித்தான்.



இப்போது ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும் குழந்தைகளுக்கு கூடுதல் கால்ஷியம் தேவைப்படுகிறது."
ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது— வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்.
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA-6037 TAM

சுபா

நீரில் மிதக்கும் நிலா

ஷில்பா கழற்றிய பாட்டில் மூடியை வாஷ்பேஸினில் போட்டாள். கக்கூஸ் கழுவுவதற்காக வைத்திருந்த அந்த ஆசிட் பாட்டில் மெலிதான அழுக்கோடு, பார்ப்பதற்குப் பரம சாதுவாகத் தெரிந்தது.

ஷில்பா துடிக்கும் உதடுகளைப் பற்களால் கவ்விக் கொண்டாள். நடுங்கும் விரல்களால் பாட்டிலை முகத்துக்கு நேரே எடுத்துச் சென்று.....

சிலுங் என்று கண்ணாடி உடைந்த சப்தம் கேட்டது-பாத் ரூமுக்கு வெளியே.

"ஒன்னைக் கிழிக்காம நான் வெளியே போக மாட்டேன்யா... வா... வா... கிட்ட வா...." அஸ்வின் குமாரின் ஆவேசமான அடங்காத குரல் எழும்பியது. மேஜையோ, டீப்பாயோ உருளும் கடகடகட சத்தம் வந்தது.

அப்பா! அப்பாவை அந்த அஸ்வின் குமார் என்னவோ செய்யப் போகிறான். ஷில்பாவுக்கு உடம்பு பதறியது. கையிலிருந்த ஆசிட் பாட்டிலை அவசரமாக வாஷ்பேஸினில் வைத்தாள். அது புரண்டு, கவிழ்ந்து, அமிலம் குபுக் குபுக் என்று வெளியேறிப் புகைந்து கொண்டு வீணாவதைக் கவனிக்க அவளுக்கு நேரமில்லை. பாத்ரூம் கதவைத் திறந்து வெளியே பாய்ந்தாள்.

அறையில் ஜூபிடர் ரத்தினத்திற்கு...

ஒன்றும் ஆகியிருக்கவில்லை. நிதானமாக நின்று கொண்டிருந்தார். அஸ்வின் குமார் டீப்பாயின் மீது குப்புற விழுந்திருந்தான். இரு கைகளும் ஊஞ்சலாட, அவனுடைய வாய் மட்டும் எதையோ மெலிதாகப் புலம்பிக் கொண்டிருந்தது.

"அப்பா!"

"பயந்துட்டியா பாப்பா?" ஜூபிடர் ரத்தினம் குனிந்து அஸ்வின் குமாரின் தோள்களுக்கு அடியில் கை கொடுத்து நிமிர்த்தினார்.

"பாப்பா, ஒரு கை கொடு... அஸ்வினை அவரோட ரூம்ல கொண்டு விட்டிர்லாம்."

ஷில்பாவிற்குக் கண்கள் பளபளப்பாயின. இயலாமையின் வெடிப்பாக, நீர் திரண்டு கண்ணோரங்களில் சேர்ந்தது.

"கண்ட கண்ட குடிகாரனையெல்லாம் கூப்புட்டு வச்சுக் கொஞ்சுங்கப்பா... என்னையும் சேர்த்து அவன் கூடவே அவன் ரூம்ல தள்ளுங்க... ஹ்ஹ்...." ஷில்பாவின் அழுகை திமிறிக் கொண்டு புறப்பட்டது. அவள் மறுபடி பாத்ரூமிற்குள் ஓடி... ஆசிட் பாட்டிலைத் தேடி.... அது முற்றிலும் வாஷ்பேஸினில் தீர்ந்து போயிருக்க, சுவரில் சாய்ந்து நின்றாள். அழுகை கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் கூடுதலானது.

வாஷ்பேஸின் கண்ணாடியில் தெரிந்த ஷில்பாவைப் பார்த்த போது, அழுகை சட்டென்று குறைந்தது. கண்ணாடியில் பிருத்விராஜ் தெரிந்தான். வெளியே ரூம் கதவருகே நின்றிருந்தான். பாத்ரூமிற்குள் பார்க்காமல் ஜூபிடர் ரத்தினத்தை நோக்கி நின்றான்.

"நான் ஏதாவது உதவி பண்ணலாமா?"

அவசரமாகச் சூழ்நிலையைப் புரிந்து கொண்ட கவனத்தோடு அவனுடைய குரல் வந்தது. ஜூபிடர் ரத்தினத்தின் பதிலுக்காகக் காத்திருக்காமல் உள்ளே நுழைந்து, அஸ்வின் குமாரை நிமிர்த்தி எழுப்பி, தன் மீது சாய்த்துக் கொண்டான். "கதவை அகலமாத் தெறந்து பிடிங்க..." என்றான். அஸ்வின் குமார், மூடி திறந்து மேஜையில் காத்திருந்த சோடா பாட்டில் போல் அடங்கியிருந்தான். கண்கள் இமைகளுக்குள் செருகியிருக்க, யாரால் சுமக்கப்படுகிறோம் என்ற பிரக்ஞை கூட இல்லாமல் கால்கள் பின்னப் பின்ன நகர்ந்து வெளியேற்றப்பட்டான்.

ஜூபிடர் ரத்தினம் அவசரமாக அஸ்வின் குமாரின் பின்னே போய் அவனுடைய பக்கத்து ரூம் கதவைத் திறந்தார். கட்டிலில் அஸ்வின் குமார் கிடத்தப்பட்டதும், தன் உடைகளைச் சரிசெய்து கொண்டு பிருத்விராஜ் நிமிர்ந்தான்.

"தம்பி" ஜூபிடர் ரத்தினம் பிருத்விராஜின் கைகளைப் பிடித்துக் கொண்டார். "நடந்த விஷயம் இந்த ரூமோடு போகட்டும். நாளைக்கு இதைப்பத்தி யார்கிட்டயும் பேசிட்டிருக்காதீங்க... நீங்க இந்த லைனுக்குப் புதுசு... அதனாலதான் சொல்றேன்."

"தூங்கிட்டிருந்தவன், அஸ்வின் குமார் லோலோன்னு கத்தின சத்தம் கேட்டு முழிச்சிட்டு வந்திருக்கேன்.. என்னைப் போல இன்னும் எத்தனை பேருக்கு இவரு கத்தினது கேட்டுச்சோ?"


"சொன்னேனே தம்பி — நீ லைனுக்குப்

புதுசு... அவுட்டோர் வர்றப்ப இதெல்லாம் சகஜம்... இதே மாடில அதோ கோடில நின்னுட்டிருக்காங்களே ரூம்பாய்ங்க். சத்தம் கேட்டு யாராச்சும் ஓடி வந்தாங்களா? வர மாட்டாங்க... அஸ்வின் குமார் யாரு? நம்பர் ஒன் ஸ்டாரு... அவரைப் பத்தி நல்ல பத்திரிகை எதிலாச்சும் தப்பான நியூஸ் வந்திருக்குதா? நடந்ததையும், நடக்காததையும் சேர்த்து எழுதற மஞ்சள் பத்திரிகையை யாரும் மதிக்கிறதில்ல... அப்புறம் தம்பி...'' ஜூபிடர் ரத்தினம் பிருத்விராஜையும், கட்டிலையும் மாறி மாறிப் பார்த்தார்.

"மொதல்ல வெளியே போயிடுவோம், வாங்க...'' பிருத்விராஜ் அஸ்வின் குமாரின் நெஞ்சு வரை போர்வையை இழுத்து மூடினான். ரூமை விட்டு வெளிப்பட்டான். காரிடாரின் மூலையில் ஸ்டூலில் உட்கார்ந்திருந்த ரூம்பாய் அவசரமாக முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டான்.

ஜூபிடர் ரத்தினம் மெலிந்த குரலில் பேசினார். "உன்னைப் போலவே என் பொண்ணும் சினிமாத் தொழிலுக்குப் புதுசு. அஸ்வினைப் பார்த்து பயப்படுது. அஸ்வினைப் பகைச்சுக்கிட்டா ஒரே அழுத்து — பூமிக்குள்ளேயே அழுத்திடுவாங்க.... எனக்குப் புரியுது. பாப்பாக்குப் புரியலை.. ஆரம்பத்துலேர்ந்து நான் கவனிச்சிட்டிருக்கேன். அது நீ சொன்னாத்தான் கேக்குது...''

நேரடியாக, சொந்த மகளிடம் பேசவே சிபாரிசு தேவை என்று வெளிப்படையாகப் பேசும் ஜூபிடர் ரத்தினத்தைப் பிருத்விராஜ் விநோதமாகப் பார்த்தான். சினிமா சான்ஸ் என்பது எப்படிப்பட்ட விலாங்கு மீன் என்று அவர் சர்வீஸில் அழுத்தந்திருத்தமாகப் புரிந்து கொண்டிருப்பார். ஷில்பா அவசர புத்தியில் கிடைப்பதைக் கெடுத்து விடப் போகிறாளே என்ற பயமும், கவலையும் அவர் குரலில் தெரிந்தன. சினிமா பற்றிய கனவுகள் ஷில்பாவின் கண்களில்



இல்லை. இவர் கண்களில் இருந்தது.


"ஷில்பா நடிக்கணும்னுதாங்க என்னோட ஆசையும்.. நான் பேசிப் பாக்க றேன்."

'ஷில்பா நீ சொன்னாத்தான் கேக்குது'— பிருத்விராஜ் மனத்திற்குள் ஒரு பெருமித ஊற்று கிளம்புவதை உணர்ந்தான். பக்கத்து ரூம் கதவை நாசூக்காகத் தட்டினான்.

"ஷில்பா...."

சட்டென்று கதவு திறந்தது. ஷில்பா நின்றிருந்தாள். அவனை எதிர்பார்த்தவள் போல அவசரமாக முகம் கழுவியிருந்தாள். அஸ்வின் குமார் வந்து போன அதிர்ச்சி, முகத்து நிறம் காய்ந்திருந்ததில் தெரிந்தது. ஸ்டிக்கர் பொட்டைச் சரி செய்து கொண்டே, "வாங்க பிருத்வி" என்றாள். சிரிக்க முயன்ற போது, சோகம்தான் பிரதிபலித்தது.

"ஸ்வெட்டரைப் போட்டுக்க ஷில்பா...



"ஏற்கெனவே உங்களுக்கு இதே மாதிரி வியாதி வந்து குணமாகியிருக்கா?"

"ஏன் டாக்டர் கேட்கிறீங்க?"

"குணமாக்கிய மருந்து என்னன்னு சொன்னீங்கன்னா எழுதிக் கொடுத்துடுவேன்!"

— மணியன் தர்மலிங்கம்.

தலைக்கு மஃப்ளரைக் கட்டிக்க...."

"ஏன் பிருத்வி?"

"நாம ஒரு சின்ன வாக் போகப் போறோம்..."

குளிர் இரக்கமில்லாமல் எலும்புகளைத் தேடியது. மெல்லிய காற்றையே மரங்கள் பெருமூச்சாக்கிக் கொண்டிருந்தன. ஹோட்டலின் முன்புறம் இருந்த பச்சை லானில் அழகுக்காக நிறுத்தியிருந்த அலங்கார மின் விளக்குகள் இதமான ஒளியை அடக்கி உமிழ்ந்தன.

"அனுபவங்கறது நாம ஒண்ணைத் தேடிப் போனா, வேற ஒண்ணு நம்மைத் தேடி வருமே, அதுதான்னு யாரோ சொல்லியிருக்காங்க. எவ்வளவு வாஸ்தவமான பேச்சு, இல்லை பிருத்வி?". ஷில்பா குளிருக்கு அடக்கமாக நெஞ்சுக்குக் குறுக்கே கைகளைக் கட்டியிருந்தாள்.

"ஆச்சரியம் பாரு, நானும் அதையேதான் சொல்ல நெனைச்சேன், மதுமதி."

"ஹ்ம் ஷில்பா!" — ஷில்பா சிரித்தாள்.

பிருத்விராஜ் சட்டென்று விழிப்பிற்கு வந்தவன் போல, அந்த சிரிப்பில் மென்மையாகச் சேர்ந்து கொண்டான்.

"என்னைப் பொறுத்தவரைக்கும் நீ ஷில்பா மட்டுமில்ல, மதுமதியும்தான்... அதனால்தான் நீ முரண்டு பிடிக்கறப்பல்லாம் எங்கே என் மதுமதியை ஸ்க்ரீன்ல பார்க்க முடியாதோன்னு எனக்குப் பயம் வந்திடுது..."

"என்னால எதை வேணாலும் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியும், பிருத்வி. ஆம்பிளைன்ற திமிரோட, தன்னைத் தட்டிக் கேக்க யாருமில்லேன்ற தைரியத்தில் என்கிட்ட வரம்பு மீற நெனைக்கறவங்களைப் பொறுத்துக்க முடியலை பிருத்வி...."

"ஐ அண்டர்ஸ்டாண்ட்... ஆஸ்பத்திரில அட்மிட் ஆன கேஸ் நாம. டாக்டர் அக்கறையோட கவனிக்கற அதே நேரத்துல, ஆயா தகாத வார்த்தைல ஏசிட்டும் போகலாம். வார்டு பாய் உடம்பு எப்படியிருக்குன்னு பாசமா கேக்கற இடத்துல, நர்ஸ் நேரத்துல மருந்து கொடுக்காம இருந்தாலும் பொறுத்துக்கணும். நம்ம எண்ணம் ஆஸ்பத்திரிலேர்ந்து சொஸ்தமாயி திரும்பணும்கறது தான்... இளங்குமரன், அஸ்வின் குமார், உங்க அப்பா எல்லாரையும் நீ அட்ஜஸ்ட் பண்ணிட்டுத்தான் போகணும்... நானும் ஸ்க்ரீன்ல என் கதை வரணும்கறதுக்காக அவமானங்களைத் தாங்கிக்கிட்டுத்தான் ஆகணும்..."

"அழகாப் பேசறீங்க..."

"என் மதுவும் இதையேதான் சொல்வா..."

"உங்க மதுவா?" ஷில்பாவின் முகத்தில் ஆர்வம் விளக்கேற்றியது.

"என் மது. அவளைப் பத்தி நான் உன்கிட்ட சொல்லத்தான் போறேன். பட் நாட் நௌ." பிருத்விராஜ் நிலாவில் கண்களைப் பதித்து, கனவுகள் மிதக்கும் பார்வையால் மேகங்களை ஆராய்ந்தான்.

"சிவராமனைக் காதலிச்ச மதுமதியைப் பத்தித்தான் நீங்க சொன்னீங்க பிருத்வி. அதுவும் சிவாவோட அப்பா அம்மா அவ வீட்டுக்கே வந்து நிக்கறாங்க... பிக்னிக் போன இடத்துல சிவாவுக்கு ஆக்ஸிடண்ட் ஆகி..... ஷில்பா கதையை நிறுத்தி விட்டுப் பிருத்விராஜைப் பார்த்தாள்.

பிருத்விராஜ் நிலாவைப் பார்த்துக் கொண்டே, அவன் நெஞ்சில் உருவாக்கி, வளர்த்திருந்த கதையைத் தொடர ஆரம்பித்தான்......

"சிவா.... சிவா...."

மதுமதி அழுது கொண்டிருந்தாள்.

வெகு நேரமாய் அந்த அறையில் இறுக்கம். எல்லோர் கண்களிலும் சிவப்பு வரி. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்ற தயக்கம்.

சிவராமனின் அப்பா நடராஜன் எழுந்து மதுமதியின் அருகே சென்றார். மெல்ல ஆதரவாய் அவளுடைய தோளைத் தொட்டார். நிமிர்ந்து பார்த்த அவள் முகத்தைக் கையில் ஏந்தி, கண்ணீர்க் கோடுகளைத் துடைத்தார்.

"ப்ளீஸ். அழாதேம்மா... சிவராமுக்கு நீ அழுதா பிடிக்காது. 'புதன் கிழமை வர்றதா சொல்லியிருக்கேன். அவ காத்திட்டிருப்பா, போயிடுங்கன்னு' சொன்னதால்தான் நாங்க அத்தனை துக்கத்தையும் ஒதுக்கி வச்சுட்டு உன்னைப் பாக்க வந்தோம். பெங்களூர்ல இருக்கற துவாரகா மாளிகையை நீ எப்ப பார்க்கப் போறே, எப்ப எடுத்துக்கப் போறேன்னு கேட்டுட்டுப் போகலாம்னு தான் வந்தோம்..."

"அங்கிள்" மதுமதியின் அழுகை பீறிட்டது. "சிவா என்னை இவ்வளவு சீக்கிரம் பிரியப் போறார்னு எனக்குத் தெரியாது... எனக்கு ஏற்கெனவே எத்தனையோ கொடுத்திருக்கார்... அவரோட இருந்த நாளையெல்லாம் நினைச்சிட்டிருக்கற சந்தோஷம் ஒண்ணே எனக்குப் போறும்... கடைசி நிமிஷம் வரைக்கும் என்னையே நெனைச்சிட்டிருந்தார்னு சொன்னீங்களே... அந்த பெருமை போறும்..."

"சிவராமோட கடைசி ஆசைம்மா அது.. ஆனா உன்னை நாங்க கட்டாயப்படுத்தலை. அவசரப்படுத்தலை. நிதானமா உக்காந்து யோசி. சிவா சொன்னதை நிறைவேத்தணும்னு உனக்கு எப்ப மனசு வருதோ, அப்ப நீ வரலாம். அது வரைக்கும் அந்த துவாரகா மாளிகை உனக்காகக் காத்திருக்கும்..."

அவர்கள் மெல்ல எழுந்து கொண்டார்கள்.

"அங்கிள்... உங்க ரெண்டு பேரையும் பார்த்தா எனக்கு நெஞ்சை அடைக்கிற மாதிரி இருக்கு... சொந்த பிள்ளையை இழந்த துக்கம் கூட ஆறலை... அதுக்குள்ள என்னைப் பார்க்கக் கிளம்பி வரதுக்கு உங்களுக்கு எவ்வளவு பெரிய மனசு இருக்கணும்?"

"பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே மது..." சிவராமனின் அம்மா மதுமதியை நெஞ்சில் அணைத்துக்கொண்டாள். "எங்க பொண்ணு விஜி எங்களுக்கு எப்படியோ அப்படித்தான் நீயும்... உனக்காக எதிர்பார்த்துக் காத்திட்டிருப்போம்... சீக்கிரமே வந்திடு..."

"**ம**துமதி என்ன பண்ணினா?" ஷில்பா ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்டாள். "பிருத்வி, நீங்க கதை சொல்றப்ப அந்த மதுமதியோட எடத்துல என்னை வச்சுப் பாத்து நான் பரிதாபப்பட ஆரம்பிச்சுட்டேன்... ப்ளீஸ் சொல்லுங்க... மதுமதி என்ன பண்ணினா?"

(தொடரும்)



இலவச இணைப்பு
அமரர் கல்கியின் குறுநாவல்
காதறாக்
கள்ளன்

+

அடுத்த
இதழில்...
இரா.செழியன்
சிறப்புப் பேட்டி



இயற்கையோடு இயைந்த வாழ்விற்கு மில்டன் காட்டுகிறது ஒரு புதிய வழியை.



மில்டன் வழங்கும் ப்ளாஸமேட்ஸ். "வழக்கமான மட்பாண்டங்களுக்கு 20-ஆம் நூற்றாண்டின் விடை" என்கிறார் திருமதி பத்மா சார், தோட்டக்கலைஞர் மற்றும் காக்டஸ் மற்றும் ஸக்குலண்ட் சொஸைட்டி, இந்தியாவின் ப்ரஸிடெண்ட்.



Padma char.

Blossommates
FROM MILTON

இயற்கையின் எழிலை உங்கள் இல்லத்திற்கே கொணர்கிறது.



MILTON

எங்கும் கிடைக்கிறது.

MAKHIJA 1955 TL

கூட்டணி தர்பார்!

— அசம்பியன்

பேரணி நடத்தி முடித்த கையோடு களைத்துப் போய் ஆனால் உற்சாகமாக அமர்ந்திருந்தார் கலைஞர்.

''பெரிய வெற்றி போலிருக்கே'' என்றேன்.

''காங்கிரஸ் போட முயன்ற முட்டுக்கட்டைகளையும் மீறிப் பெற்ற மாபெரும்





வெற்றி'' என்றார்.

''அது சரி, எம். ஜி. ஆராவது 'அனைத்திந்திய' என்று கட்சிப் பெயருடன் சேர்த்துக் கொண்டார். உங்க கட்சி, 'திராவிட முன்னேற்றக் கட்சி' மட்டும்தானே — பிராந்தியக் கட்சிதானே, இப்படிச் சில அனைத்திந்தியக் கட்சிகளுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொள்ள அவசியம் என்ன நேர்ந்தது?''

''இப்படி நீ ஏதாவது உளறுவாய் என்று எதிர்பார்த்துத்தான் அண்ணா அந்த நாளிலேயே கோஷம் தயாரித்துத் தந்தார்!''

''உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம் — அதுதானே?''

''அதைவிட முக்கியம், 'மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்தில் சுயஆட்சி.' அந்தக் கனவு இப்போது நிறைவேறப் போகிறது!''

''பேஷாக நிறைவேறட்டும்; நிழல் மந்திரி சபை கூட அமைப்பதாகக் கேள்வி. மத்திய அமைச்சரவையில் உங்களுக்கு இடமில்லாமலா? எந்தத் துறை?''

''மத்திய அமைச்சரவையில் நானா? சீச்சீ! என்ன பேச்சுப் பேசுகிறாய்'' என்று சீறினார் கலைஞர். ''மன்னன் மாதிரி தமிழக முதல்வர் பதவியை விட்டு விட்டுத் தில்லியில் போய்ச் சேவகன் போல் கைகட்டி நிற்கச் சொல்றியா, அசடு!''

''அப்படியானால் கூட்டணி தத்துவம் என்ன ஆகிறது?''

''அதற்கு ஒன்றும் ஆபத்து வந்து விடாது. எம். பிக்கள் எதற்கு இருக்கிறார்கள். மாறன், கோபாலசாமி, கலாநிதி...''

''அது சரி, ஆட்சி அனுபவம் இவர்களுக்கு உண்டா? முக்கியமான மந்திரி பதவி கிடைக்குமா? விளையாட்டுத் துறையில் உதவி அமைச்சர் பதவி தருகிறேன் என்றால்...?''

''அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் பேராசிரியரை தில்லிக்கு அனுப்பி விடுவேன்! அவருக்கு முக்கிய துறை தராமல் இருக்க முடியாதல்லவா?''

''ஓ! புரிகிறது, புரிகிறது!'' என்றேன்.

''என்ன புரிந்து கொண்டாய்?''

''நீங்கள் உறவுக்குக் கைகொடுக்க; கூட்டணி தர்பார், உட்கட்சிப் பூசல்களைச் சமாளிக்க உங்களுக்குக் கைகொடுக்கும் என்று புரிந்து கொண்டேன்'' என்று கூறி விட்டுக் கோபாலபுரம் வீட்டின் மாடிப்படிகளில் கிடுகிடுவென்று இறங்கினேன்.



நல்லவேளை, கருணாநிதி கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததால் அவர் கண்களின் கோபம் என்னைப் பாதிக்கவில்லை.

என்னுடைய அதிர்ஷ்டம், இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் சரியான நேரத்தில் புறப்பட்டு, விபத்து ஒன்றும் நேராமல் ஹைதராபாத் போய்ச் சேர்ந்தது. சுகமாக இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கும் அதிகாலை நேரக் குறட்டைகளைக் கல்கி வாசகர்களுக்காகத் தியாகம் பண்ணிவிட்டு, என். டி. ஆரைப் பார்க்க நான் போனபோது மணி நாலு! என். டி. ஆர். யோகாசனங்களை அப்போதுதான் முடித்துக் கொண்டு வந்து உட்கார்ந்தார். ''பத்து நிமிஷம் டைம்; நேரடியாக விஷயத்துக்கு வா'' என்றார்.

''தெலுங்கு கங்கை பற்றிப் பேச மூன்று கட்சிகளைச் சேர்ந்த மூன்று முதல்வர்களை அழைக்கிறார் மத்திய அமைச்சர். நீங்க உடனே அழைப்பை நிராகரிக்கிறீங்க. இந்த லட்சணத்தில் ஏழு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள்சேர்ந்துகூட்டணி ஆட்சி அமைத்தால் அது உருப்படுமா?''

''இதென்ன கேள்வி? நான் ஏன் அழைப்பை நிராகரித்தேன்? ஏற்கெனவே ஒரு பிரதமர் முன்னிலையில் மூன்று முதல்வர்கள் சேர்ந்து ஒப்புக் கொண்ட, முடிந்து போன ஒரு விஷயத்தை மறுபடி கிளறுகிறாங்க. அதனாலதான், 'பேசுவதற்கு ஒன்றுமில்லை' என்றேன். மத்திய அமைச்சர் என்ன புதுசாச் சொல்றது, நான் என்ன கேட்கிறது? ஆனால் கூட்டணி அமைச்சரவை ஏற்பட்டால் இதுபோன்ற பிரச்னைகளுக்கு இடமிராது. தெலுங்கு கங்கா உடனே நிறைவேறிடும்!''

''அதெப்படி? அப்பவும் ஜனதா அமைச்சர் ஒருவர் மந்திரிசபையில் இருக்க மாட்டாரா? அவர் கர்நாடகா சார்பில் முட்டுக்கட்டை போட மாட்டாரா?''

''போடட்டுமே! பிரதமர் என்ற முறையில் அந்த ஆட்சேபணைகளை நான் நிராகரிப்பேன். பிரதமரை எதிர்த்துக் கொள்ளத் துணிவு இருந்தால் ராஜினாமா செய்துட்டுப் போகட்டும்!''

''அப்ப நீங்க பிரதமர் ஆவது உறுதி தானா? கூட்டணியில் மற்றவங்க ஒப்புக் கொண்டு விட்டார்களா?'' என்று ஆச்சர்யமாகக் கேட்டேன்.

''ஒப்புக் கொள்ள வைப்பேன்'' என்றார் என். டி. ஆர்.

''எப்படி?'' என்றேன் அடங்கா வியப்புடன்.

''அதற்கான பல உபாயங்களை இப்பவே மேற்கொள்ள ஆரம்பித்து விட்டேன். அவற்றில் ஒன்றுதான் இது'' என்று கூறியபடி ஜிப்பாவை உயர்த்திக் காட்டினார் என்.டி.ஆர்.

பஞ்சக்கச்ச வேஷ்டியை இடுப்புடன் இறுக்கி வைக்கப் பயன்படும் பெல்ட்டுக்குப் பதில் சிவப்புக் கற்கள் சில பதித்த தங்க ஒட்டியாணம் அணிந்திருந்தார்!

''நாளை முதல் காலில் கொலுசும் தோளில் வங்கியும் அணிவதாகவும் உத்தேசம்'' என்றார்.

''கழுதைமேத யாகத்தையும் சுடுகாடு பூஜையையும் மறந்து விடாதீர்கள்'' என்று கூறிவிட்டு அவருடைய (வசை) மந்திரங்கள் பின்தொடர எடுத்தேன் ஓட்டம்!

''**ரா**ஜீவ் ஆட்சியின் அதர்மப் போக்குக் கடவுளுக்கே பிடிக்கவில்லை! அதனால்தான் இயற்கை அன்னை வெடித்தெழுந்தாள்! பூகம்பம், வெள்ளம் எல்லாம் ஏற்படுகின்றன. பிரளயமே ஏற்படுமுன் கூட்டணிக்கு வோட்டுப் போட்டு விடுங்கள்'' என்று இடி முழக்கம் செய்து விட்டு மேடையிலிருந்து இறங்கினார் வி. பி. சிங். நான், என் வாடகை மோட்டார் சைக்கிளைக் கொண்டு போய் நிறுத்த, ஏறிக் கொண்டார். ''அடுத்த கூட்டம் ஹோஷியார்பூரில். நேரமாகி விட்டது, புறப்படு!'' என்றார்.

டீ சாப்பிடப் போய்த் தாமதம் பண்ணின அவருடைய மோட்டார் சைக்கிள் சாரதியை மனத்துக்குள் வாழ்த்தியபடியே நான் 'விர்' ரென்று செலுத்தினேன்.

''கூட்டணி ஆட்சியில் பூகம்பமே வராதா? வெள்ளமே உருவாகாதா?'' என்று தலையைத் திருப்பிக் கேட்டேன்.

''எதிரே பார்த்து ஓட்டு; எனக்குக் காது நன்றாய்க் கேட்கும்'' என்ற வி. பி. சிங், என் கேள்விக்குப் பதில் தரும் விதமாக, ''வரும், வரும்! ஆனால் நாட்டிலே பூகம்பம் வருமுன்னர் கூட்டணி ஆட்சிக்குள்ளே வந்து விடும்! அஸ்ஸாமிலே வெள்ளம் வருவதற்குள் அமைச்சரவைக்குள் கருத்து மாறுபாடுகள் வெள்ளமாகப் பெருகும்'' என்றார்.


''அப்படியானால் எதற்கு இந்தக் கூட்டணி? வீண் முயற்சிதானே?'' என்றேன்.

''அதெப்படி வீணாகும்? 'கிடைத்த தடியைக் கொண்டு பாம்பை அடி' என்று சொல்லிக் கொடுத்ததே உங்க ராஜாஜி தான். இன்று காங்கிரஸ் என்ற விஷப் பாம்பைத் தடி கொண்டு அடித்தாக வேண்டும். பல தடிகளைக் கொண்டு அடித்தாலும் தப்பில்லை'' என்றார் சிங்.

''ராஜாஜி அப்படிச் சொன்னது உண்மை தான். ஆனால் 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' போல் கூட்டணி நடந்து கொண்டால் அதற்கு அவர் என்ன செய்வார்?'' என்றேன், சிங் பேச வேண்டிய மேடைக்கருகே வாகனத்தை நிறுத்தி.

வி. பி. சிங் கீழே இறங்கி, ''இந்தாப்பா, ஒரு தடி கொண்டு வா'' என்றார் ஒரு தொண்டனைப் பார்த்து.

அது வரும்வரை காத்திருப்பேனா என்ன?



போயே போச்சு!



வலியும் வேதனையும் மாயமாய் மறைகின்றன!

பத்து இயற்கை மூலப்பொருட்களின் இதம் தரும் கலவை- இதுவே அமிர்தாஞ்சன். 90 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

தலைவலி, உடல்வலி, சுளுக்கு — எதுவாக இருந்தாலும் லேசாகத் தேய்த்தாலே போதும். நீங்கள் உணரும் முன்னரே உங்கள் வலியும் வேதனையும் மறைந்தே போய்விடும்!

அமிர்தாஞ்சன்

மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது
— விரைவாக!

அமிர்தாஞ்சன் லிமிடெட்

OBM 824 TM

ப்ருந்தா சுந்தர்ராமன்

டவுன் ஹால் ரோடு முனையில் இருக்கும் பழைய புத்தகக் கடையில் அந்தப் புத்தகம் கிடைத்தது. பொதுவாக எங்குமே கிடைக்காத இலக்கியப் பத்திரிகைகளை நான் அங்கே தான் பொறுக்குவது வழக்கம். புத்தகக் கடை நாயுடுவும் என் முகம் தெரிந்தால் விரித்த சாக்கின் அடியிலிருந்து நிறைய எடுத்துப் போடுவார்.

இந்தப் புத்தகம் பிருந்தா ரங்கராஜன் எழுதியது. ஆ ர ம் ப த் தி ல் சின்ன சின்னப் பிரச்னைகளைக் கூடத் தொலை நோக்கோடு எழுதிக் கொண்டிருந்த மிகச் சிலரில் பிருந்தா ரங்கராஜனும் ஒருத்தி. சேமியா பாயசத்திற்கு முதலில் சேமியாவை வேகவைத்து பாலில் கலப்பதா, அல்லது பாலைக் காய்ச்சி அதில் வேக வைப்பதா என்று முக்கிய பிரச்னைகளை அலசிக் கொண்டிருந்த பெண் எழுத்தாளர்கள் நடுவில் அவள் தனித்துத் தெரிந்தாள். எல்லா பிரச்னைகளின் மூல காரணம் அன்பின்மை என்றாள். சங்கீத லயிப்பு அவசியம் என்றாள். அவளுடைய ஒவ்வொரு சிறுகதையும் ஒரு கவிதை மாதிரி இருக்கும். எண்ணி இருபது சிறுகதைகள் எழுதியிருந்தால் அதிகம். அதன் பிறகு பத்து ஆண்டுகளாக அவளைப் பற்றி எந்தவிதச் செய்தியுமில்லை. இலக்கியப் பத்திரிகை, வியாபாரப் பத்திரிகை எதிலும் அவள் பெயர் வருவதாகத் தெரியவில்லை.

"பிருந்தா ரங்கராஜனைத் தெரியுமா?" என் மனைவியைக் கேட்டேன்.

"டான்ஸரா?"

"ரைட்டர்."

"டீவியில் ஸீரியல் வந்தப்புறம்தான் எனக்கு ஜெயகாந்தன் யாரு, பிரேம்சந்த் யாரு, அகிலன் யாருன்னு தெரியும்."


"உன்னை என் பெண்டாட்டின்னு சொல்லிக்கவே வெக்கமா இருக்கு."

"தங்கைன்னு சொல்லுங்கோ. அது இன்னும் கேவலம்... ஆங்! வேலைக்காரின்னு சொல்லுங்கோ...."


அவள் தலையில் குட்டினேன்.

"மக்கு! மக்கு" என்று வைதேன்.

"நீங்க பெரிய எழுத்தாளராவே இருங்கோ. நான் மக்காவே இருக்கேன். ரெண்டு பேரும் புத்திசாலியா இருந்துட்டா குடித்தனத்தில் சண்டைதான் மிஞ்சும்."



சத்யப்ரியன்



கணவர்: போன வாரம் பெண் பார்த்துவிட்டுப் போன பத்திரிகை ஆசிரியர் லெட்டர் போட்டிருக்கார்.

மனைவி: என்ன எழுதியிருக்கார்...?

கணவர்: 'என் திருமணப் பத்திரிகையில் உங்கள் பெண்ணின் பெயரைப் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறேன்' என்று எழுதியிருக்கார்!

— திருத்துறைப்பூண்டி எஸ். சந்தசாமி.

"நான் எழுத வர்றதுக்கு முன்னாலிருந்தே பிருந்தா ரங்கராஜன் எழுதினாங்க. சிந்தனைகள் கூட ஆண் பெண் வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டதுன்னு சொன்னவங்க. திமிர்னு எழுதறதை விட்டுட்டாங்க. சொல்லப் போனா என்ன ஆனாங்கன்னே தெரியலை."

"நான் யாரைக் கண்டேன்? பொழுது போகலைன்னு ஏதோ பத்திரிகை பொரட்டறதோட சரி. தூக்கம் கண்ணைச் சுத்தித்துனா அதுகூடக் கிடையாது. பிருந்தா ரங்கராஜனுக்கு என்ன இப்போ?"

"ஒண்ணுமில்லை. அவங்க எழுதின புத்தகம் ஒண்ணு வாங்கினேன் இன்னிக்கு."

"நாயுடு கிட்டயா?"

"ஆமாம்"

"உங்களுக்கும் நாயுடுவுக்கும்தான் சரி" — என் காதைத் திருகியபடி சொன்னாள். வாரிக் கொண்டேன். இறுக்கத்தில் மூச்சு முட்டியது.

சகலத்தையும் எனக்கு என்று பகிர்ந்து தரும் மனைவி அற்புதம்.

என்னை விலக்கி விட்டு "சொல்ல மறந்துட்டேன். மாடிப் போர்ஷனுக்கு ஆள் வந்தாச்சு" என்றாள்.

"அதான் மேல டீவி சத்தமா? யாராம்?"

"ஏதோ கம்பெனியில் என்ஜினியராம். அழகா ஒரு பெண்டாட்டி. அவனுக்கு முப்பத்தஞ்சுலருந்து நாப்பதுக்குள்ளே இருக்கும். ஒரு பொண்ணு, ஒரு பையன். அந்தப் பொண்ணைப் பார்க்கணுமே. அம்மா மாதிரி அழகுன்னா அப்படி ஒரு அழகு. எஸ்.எஸ்.எல்.ஸி.யில் முதல் பத்து பேர்ல ஒருத்தி. பேப்பர்ல ஃபோட்டோல்லாம் வந்ததாம். பையன் ஜூனியர் லெவலில் ஸ்டேட் கிரிக்கெட்டில் இருக்கானாம்."

"அப்படியா?" என்றேன்.

புது மனிதர்களைச் சந்திப்பது சந்தோஷமான விஷயம்தான். நீ யார், நான் யார் என்று தெரிந்து கொள்வதில் ஒரு குஷி கிளம்பும்.

அடுத்த இரண்டு நாட்கள் மேல் போர்ஷன் புது மனிதர்களைச் சந்திக்க முடியவில்லை. காவேரி பதிப்பகம் ராமசுந்தரத்துடன் என் கதைகளை வைத்துக் கொண்டு போராட வேண்டி வந்தது. "என்னை விட்டுடு ப்ரூஃபைக் கூட நீயே திருத்து" என்று எழுந்து கொண்டு விட்டான் அவன். ஒரு நல்ல பதார்த்தம் சமைப்பது மாதிரி, மொட்டுக்களை நெருக்கி ஒரு மலர்ச்சரத்தைத் தொடுப்பது மாதிரி, சிரத்தையுடன் லைன் ட்ராயிங் வரைவது மாதிரி, ஒரு புத்தகத்தை அழகாக அச்சில் கொண்டு வருவது கூட ஒரு கலைதான். அதனால்தான் ராமசுந்தரம் பத்து வருஷங்களாகக் காவேரி பதிப்பகத்தில் கொடிகட்டிப் பறக்கிறான்.

தினம் இரவு எட்டு மணிக்கு மேல் திரும்பியதால் எனக்கும் மாடிப் போர்ஷனுக்கும் தொடர்பே இல்லை. ஜன்னலில் அறிமுகமில்லாத முகங்கள் தெரியும். அவ்வளவுதான்.

உமா தினம் மாடிப் போர்ஷன் பற்றி ஒரு நிகழ்ச்சி நிரல் வாசித்து விடுவாள்.

"பசங்கன்னா அதுங்க பசங்க. நானும் பாரதியை விளையாடறதை விட்டுட்டு வீட்டுப் பாடம் செய்ய வைக்கறதுக்குள்ள என்ன பாடுபட வேண்டியிருக்கு. அந்த ஸ்ரீநாத் என்னடான்னா....."

"யாரு ஸ்ரீநாத்?"

"மாடிப் போர்ஷன் பையன்."

"உம்?"

"நாலு மணிலேந்து ஆறு மணி வரைக்கும் கிரிக்கெட் ப்ராக்டீஸ்; ஆறுக்கப்புறம் சந்தி; ஆறரையிலிருந்து எட்டரை வரைக்கும் படிப்பு.... எட்டு நாப்பதுக்குச் செய்தி போடறப்போ டீவியை ஆன் பண்ற வீடு மாடி வீடாத்தான் இருக்கும். அவங்களும் என்ன பொறுமையா பசங்களுக்குச் சொல்லித் தராங்க தெரியுமா?"

"அவங்கன்னா?"

"பசங்களோட அம்மா."

"அப்பா சொல்லித் தர்றதில்லையா?"

"கம்பெனிதான் அவருக்கு வீடாம். சேர்ந்து ரெண்டு மணி நேரம் அவர் வீட்டிலிருந்தால் அதிகமாம். அந்தம்மா எவ்வளோ அழகா பேசறாங்க தெரியுமா? பட்டுக் கத்தரிச்ச மாதிரி, அளவா, அழகா பேசறாங்க. நாச்சியார் திருக்கோவை, கம்பராமாயணம் — இதெல்லாம் புரண்டு வருதுங்க பேச்சுல. ஜெம் ஆஃப் எ லேடி!"

"என்னைப் பத்திச் சொல்லிட்டியா?"

"என்னடா இந்தக் கேள்வி வரக்காணுமே இந்தக் கர்வம் பிடிச்ச ஆம்பளைக்குன்னு நெனைச்சேன்!" — செல்லமாக என் கன்னத்தில் தட்டி விட்டு "அவங்களா கேட்டப்பறம்தான் சொல்றதுன்னு இருக்கேன்" என்றாள்.

மறுநாள் முகப்பு அட்டைக்கு ஓவியரைச் சந்தித்துச் சித்திரம் வரைந்து வாங்கி வருவதற்குத்தான் நேரம் சரியாக இருந்தது.


நரசுஸ் அளிக்கும்
விழாக்கால வெகுமதிகள்!
கேட்டீங்களா சேதியை? நரசுஸ் காபி வெகுமதி கொடுக்கறாங்களாமே!
பேஷ், பேஷ்! ரொம்ப நல்ல செய்தி!
வெகுமதிகள்:
• 35 கிலோவிற்கு எவர்சில்வர் ஜக்.
• 10 கிலோவிற்கு எவர்சில்வர் டபரா செட்.
• 6 கிலோவிற்கு எவர்சில்வர் டம்ளர்.
• 1½ கிலோவிற்கு துணிப்பை.
• ½ கிலோவிற்கு எவர்சில்வர் ஸ்பூன்.
நரசுஸ்
மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள். 1.10.88 முதல் 7.11.88-ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.
அப்படியா! இதோ போறேன்! நரசுஸ் காபி வாங்க!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ் காபி
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.
ADWAVE/NCC/3621

வழக்கம் போல இரவு ஒன்பது மணி ஆனது திரும்புவதற்கு. மாடியில் டீவியின் வண்ண ஒளிமாற்றம் மட்டும் தெரிந்தது. முகங்கள் தெரியவில்லை.

சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது உமா சொன்னாள்.

''உங்களைப் பத்திச் சொல்லிட்டேன்.''

''என்ன சொன்னாங்க?''

''மொதல்லயே சந்தேகப்பட்டாங்களாம். கன்ஃபர்ம் ஆனதில் அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம். உங்க கதை எல்லாத்தையும் படிச்சிருக்காங்களாம். சொல்லப் போனா அவங்களே கதை எழுதியிருக்காங்களாம். ரெண்டு நாளைக்கு முன்னால நீங்க யாரோ பிருந்தா ரங்கராஜன்னீங்களே அது இவங்க தானாம்.''

''என்னது?'' அதிர்ந்தேன்.

''அவங்களை அவசியம் பார்க்கணும் உமா.''

''கார்த்தால ஒன்பது மணிக்கு மேல அவங்க ஃப்ரீயா இருப்பாங்க. நாளைக்கும் ப்ரெஸ் வேலை உண்டா?''

''இல்லை.''

நான் தூங்காமல் விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தேவையில்லாமல் மனம் சலனப்படுகிறது.

''கஷ்டமா இருக்கு உமா.''

''என்ன ஆச்சு உங்களுக்கு?''

''அவங்க ட்ரை பண்ணி இருந்தா பெரிய ஆளா வந்திருக்கலாம் உமா. பாரேன் குடும்பம், கல்யாணம் இதெல்லாம் பெண்களுக்குத் தனி ஆண்களுக்குத் தனின்னு ஆயிடுச்சு இல்லை?''

''அடுத்த கதைக்குக் கரு கிடைச்சாச்சா?''

''டோன்ட் பி ஸில்லி. கருவுக்காக நான் பிரச்னைகளைப் பார்க்கறதில்லை. பிரச்னைகள்தான் எனக்குக் கருவா மாறறது.''

மறுநாள் நிதானமாக எட்டு மணிக்கு எழுந்தேன். ப்ரெஸ்ஸில் பைண்டிங் வேலை தான். ராமசுந்தரம் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டான். குளித்து டிஃபன் சாப்பிட்டு விட்டுப் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தேன். உமா வந்து நின்றாள்.

''அவங்க வந்திருக்காங்க!''

''எவங்க?''

''மாடிப் போர்ஷன்.''

''வரச் சொல்லு.''

அவளுக்கு நாற்பது வயதிருக்கும். அறிவின் தீட்சண்யம் வயதைக் குறைத்துக் காண்பித்தது. விசாலமான நெற்றி. கூர்மையான நாசி. மிக எளிமையாக இருந்தாள்.

''வணக்கம்! உட்காருங்க'' என்றேன்.

''நேத்திக்குத்தான் உங்க மிஸஸ் சொன்னாங்க. நீங்கதான் நந்திவர்மன்னு.''

''நந்திவர்மன் என் புனைபெயர்.''

''ரொம்ப சந்தோஷம் உங்களைச் சந்திச்சதில. நல்ல விஷயத்தைச் சொல்ற விதத்துல சொன்னா ஓகோன்னு இருக்கலாங்கறதுக்கு நீங்க ஒரு உதாரணம்.''

''உங்களைப் பத்திக் கூட என் மனைவி சொன்னா. பிருந்தா ரங்கராஜன் நீங்க தானாமே?''

''ஆமாம்.''

''மிக அபூர்வமான எழுத்துக்களில் உங்களுதும் ஒண்ணு.''

''நன்றி.''

''பொதுவா பெண் எழுத்தாளர்கள் பிரபலமான பெண்கள் பிரச்னைகளை மட்டும் சொல்ல எழுத்தைப் பயன்படுத்திப் பாங்க. நீங்க 'மாறுபட்டுத்தான் எழுதினதாச் சொல்லணும்.''

அவள் பதில் சொல்லாமல் என்னை வெறுமையாகப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏன் எழுதறதை விட்டுட்டீங்க?''

''கல்யாணம் ஆறதுக்கு முன்னாடிதான் நான் பிருந்தா ரங்கராஜன். இப்போ நான் பிருந்தா சுந்தர்ராமன்.''

''எது அல்லது யார் உங்களை எழுத விடாமல் பண்ணினது?''

''என் கல்யாணம்.''

● இன்சூரன்ஸ் பாலிசிதாரர் வீட்டு வசதி கடன் திட்டம் அமல் — எல். ஐ. சி.யின் செய்தி.

(பாலிஸிக்குப் பிரீமியம் கட்ட அக்கம்பக்கம் கடன் வாங்கத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்கிறார் திருவாளர் பொதுஜனம்.)



பூகம்பமே வரட்டும் பரவாயில்லை!

● தேர்தல் பற்றிய அறிவிப்பு வருவதற்கு முன் இரட்டை இலைச் சின்னம் பற்றிய வழக்கில் முடிவு வெளிவந்து விடும் — தலைமைத் தேர்தல் கமிஷனர்.

(அது சரிங்க... தேர்தல் எப்ப வரும்?)

"புரியலை."

"எனக்குக் கல்யாணமாகிப் பதினஞ்சு வருஷமாச்சு நந்திவர்மன். கல்யாணம் ஆன புதுசுல கூட எழுதிக்கிட்டிருந்தேன். அவர் கூட ரொம்பப் பாராட்டுவார். ரெண்டு குழந்தைங்க பொறந்தது."

"எழுதறதை விட்டுட்டீங்களா?"

"அவ்ளோ சாதாரணமா அதைச் சொல்ல முடியாது. சிறுகதை எழுதுவது கவிதை எழுதற மாதிரி. ஸ்பான்டேனியஸா வரணும். நானும் கதை எழுதறேன்னு உட்கார்ந்தா அபார்ஷன் பிண்டமாத்தான் கதை வரும். ஆனா கவிதை மாதிரி கதை வர்றது சாதாரண விஷயமில்லை. பயிற்சி வேணும். சிந்தனைக் குவிப்பு வேணும். முன்னே நான் கதை எழுதறதுக்கு முன்னாடி ஒரு வாரமாவது அதைப் பத்தி யோசிச்சிண்டிருப்பது வழக்கம். குளிக்கறச்சே, சாப்பிடறச்சே, கடைல சாமான் வாங்கறச்சே எப்பவும் சரமா கதை இழை ஓடிண்டிருக்கும். குடும்பம்னு ஆனப்பறம் என்னால அப்படி இருக்க முடியலை நந்திவர்மன். கதை எழுதறதுக்காக என் குடும்பத்தை உதற என்னால முடியலை. ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்கறது கூட நல்ல சிறுகதை எழுதறது மாதிரிதான். பெரிய பொண்ணுக்கு நோட்டு புத்தகத்துக்கு அட்டை போட்டுத் தர்றதிலிருந்து மன்த்லி டெஸ்டுக்கு கோச்சிங் கொடுக்கறது வரைக்கும் நான்தான் சகலமும். இன்னிக்கு என்ன டைம் டேபிள் என்பது என் பையனுக்குத் தெரியாது; எனக்குத் தெரியும். பார்த்துப் பார்த்துச் செய்யறதுங்கறது மனசு இழைஞ்சாத்தான் முடியும். ரெண்டு விஷயத்துக்கு என்னால மனசு இழைய முடியாது. நான் என் குடும்பத்துக்கு இழைச்சுக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். ஒரு நல்ல சிறுகதையோட உள் நோக்கம் தனி மனித மேம்பாடு அல்லது தனிக் குடும்ப மேம்பாடுன்னுதானே இருக்கும்? ஒரு நல்ல குடும்பத்தை உருவாக்குவதை ஒரு சிறுகதையா பண்ணிக்கிட்டிருக்கேன். மணிமணியா ரெண்டு பசங்களை வளத்தாச்சு. எனக்கு வேற என்ன வேணும்?"

என் மனம் முழுவதும் திம்மென்றானது. நான் சொல்லாததை, என் சக எழுத்தாளர்கள் சொல்லாததை இவள் சொல்கிறாள்.

எனக்கும் குடும்பம் உண்டு. பெண்களுக்குக் காய்கறி நறுக்கித் தருவதில்; பாத்திரம் கழுவித் தருவதில் தப்பில்லை என்று சொல்லி வருபவன், எழுதி வருபவன் நான். ஆனால் இதற்கு ஒரு எல்லை உண்டு. கதை எழுத என்று உட்கார்ந்து விட்டால் எனக்குச் சகலமும் மறந்து விடும். மனைவி, குழந்தைகள், நான், எல்லாம்.... பாதி நேரம் என் மனைவிதான் என் குடும்பத்தை நடத்திச் செல்கிறாள். இந்தச் சௌகர்யம் பெண்களுக்கு இல்லை. இளமை வேண்டாம்; குடும்பம் வேண்டாம் என்று மூப்பை வரம் வாங்கிய ஔவையார் நினைவுக்கு வந்தாள். மாய மாம்பழத்துக்குப் பதறிய புருஷனைத் துறந்து கிழவியான புனிதவதி நினைவுக்கு வந்தாள். புருஷனோடு சாதித்த பெண் நினைவுக்கு வரவில்லை. 'குழந்தை ஒன்றுக்குப் போய்ட்டானா? இரு! நான் கருணையை எடுத்துத் துடைத்து விடுகிறேன்; நீ எழுது; நீ படி; நீ ஓவியம் தீட்டு' என்று சொல்லும் முதல் ஆணை நாம் இன்னும் சந்திக்கவே இல்லை.

இதை பிருந்தா ரங்கராஜனிடம் — இல்லை — பிருந்தா சுந்தர்ராமனிடம் சொல்லாமல் கிளம்பினேன்.

- பீகாரில் பூகம்பம் பாதித்த பகுதிகளைப் பிரதமர் மீண்டும் பார்வையிடுவார் — புதுதில்லி செய்தி.

(செக்யூரிடி கெடுபிடிகளைப் பார்த்துவிட்டு, இவருக்குப் பதில் 'மறுபடி பூகம்பம் வந்தாலே பரவாயில்லை' என்கிறார் ஒரு பீகார்வாசி.)

- தமிழகத்துக்குக் கூடுதல் அரிசி ஒதுக்க மத்திய அரசு முடிவு — செய்தி.

(மக்கள் காங்கிரஸைத் தேர்தலில் ஒரேயடியாய் ஒதுக்கிவிடக்கூடாது என்றுதானே இந்த முடிவு?)

- புதுத் தேர்வு முறையைக் கொண்டு வரப் பல்கலைக் கழகங்கள் விருப்பம் — துணை வேந்தர் பேச்சு.


(பிட் அடிப்பது தப்பில்லை என்று சொன்னாலே போதுமே! அதுவே புதுமையான தேர்வு முறைதானே என்று ஐடியா கொடுக்கிறார் ஒரு மாணவர்.)

- நாகப்பட்டினம் அருகே எண்ணெய் ஊற்று — செய்தி.

கிண்டல்; சுண்டல்:

(இங்கே நான் ரேஷன் கடையில் 'எண்ணெய் ஊற்று' என்று சொன்னால், 'ஸ்டாக் இல்லை' என்கிறார்களே என அங்கலாய்க்கிறார் ஒரு குடும்பத்தலைவி.)

— மௌஷ்மி.





Bisleri Club is the safe alternative to unsafe water
When safe drinking water is not available, drink Bisleri Club Soda instead.

Bisleri Club makes a good drink great
When you're choosy about your liquor use the right mix too — Bisleri Club Soda is pure.

Bisleri Club makes sherbets fizzical
The next time you mix a soft drink concentrate syrup, use Bisleri Club Soda instead of water.


Bisleri Club keeps your tummy happy
The next time you have a slight stomach disorder and you feel a soda will settle it, choose a pure soda — Bisleri Club.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — V
ராஜ்மோகன் காந்தி.

8 களைத்துப்போன கிழவரின் சுறுசுறுப்பு!

ஆந்திர மாநிலம் அமைவதற்கு முன்னால் தெலுங்கு ஜில்லாக்களைக் கொடிய வெள்ளம் பாழ்படுத்தியது. "கோதாவரி இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாதா?" என்று வருத்தத்துடன் நண்பர் ராமராவுக்கு எழுதினார் ஸி. ஆர். மந்திரிகளும் எம். எல். ஏக்களும் சீரழிந்த பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்வதற்குத் தடை விதித்தார். அதிகாரிகள் தங்கள் சக்திக்கு மீறிய அளவில் நிவாரணப் பணிகளில் இறங்கி இருக்கும்போது, இந்த வி. ஐ. பிக்கள் அங்கே போனால் அவர்களைக் கவனிக்க வேறு அதிகாரிகள் நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும்; இதனால் நிவாரணப் பணிகளுக்குத்தான் குந்தகம் விளையும் என்று கருதிய ராஜாஜி, தில்லி வி. ஐ. பிக்களின் விஜயத்தையும் கட்டுப்படுத்துமாறு நேருவைக் கேட்டுக் கொண்டார்.

ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த சக அமைச்சர் எம். வி. கிருஷ்ணராவ், தாம் இப்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் போகவில்லையென்றால் மக்கள் தப்பர்த்தம் செய்து கொள்வார்கள் என்று வாதாடியபோது ஸி. ஆர். சம்மதித்தார். ஆனால் அவர் விஜயத்தால் அதிகாரிகள் நடத்துகின்ற வெள்ள நிவாரணப் பணிக்கு எந்தவிதமான இடைஞ்சலும் நேரக் கூடாதுஎன்றுகூறியதுடன், அத்தகைய உறுதி மொழியையும் அவரிடம் பெற்றுக் கொண்டார்! முன்கூட்டியே யாருக்கும் அறிவிக்காமல், தாழப் பறக்கும் ஒரு விமானத்தில் ஏறி, வெள்ளப் பிரதேசங்களைப் பார்வையிட்டார் ஸி. ஆர். ஓரளவு ஆபத்து மிகுந்த இந்தக் காரியம், ஆந்திர நண்பர்களுக்கும் மக்களுக்கும் ஆறுதல் அளித்தது. நேரு எழுதினார்: "நீங்கள் திடீரென்று ராஜமந்திரிக்குப் போனதை அறிந்து மகிழ்ந்தேன். இளைஞனைப் போல் திடுமென்று நினைத்துக் கொண்டு ஒரு காரியம் செய்கிறீர்கள்!"



• ஆழ்ந்த யோசனையில்

அமைச்சரவையில் பலருக்கு ராஜாஜியின் வயதில் பாதிகூடப் பூர்த்தியாகவில்லை. அவர்களையெல்லாம் வெட்கத்தில் ஆழ்த்தும் விதமாகக் 'களைத்துப் போன கிழவர்' சுறுசுறுப்புக் காட்டினார். கோட்டையில் கடல் போன்ற கோப்புக்களுடன் போராடினார். இரு அவைகளிலும் கேள்விகளையும் விவாதங்களையும் சந்தித்தார். தவிர, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஜில்லாவில் சுற்றுப் பயணம் செய்வது என்பதைக் கட்டாயமாக்கிக் கொண்டிருந்தார். அன்றாடக் காரியங்களான கடிதங்கள் எழுதுவது, சந்திக்க வருகிறவர்களைப் பார்ப்பது, நிகழ்ச்சிகளில் பங்கேற்பது, சொற்பொழிவாற்றுவது முதலிய எல்லாவற்றையும் சமாளித்தார். ஆனால் இதே நேரத்தில், அவர் தமது வயதையும் பலவீனமான உடலமைப்பையும் பற்றி அடிக்கடி தமக்குத் தாமே நினைவூட்டிக் கொண்டும் இருந்தார். அவர் டயரியில் பின்வருவன போன்ற குறிப்புக்கள் அந்தக் காலகட்டத்தில் அடிக்கடி காணப்படுகின்றன: "கடந்த மூன்று நாட்களாக உடம்பு சரியில்லை"; "ஹெர்னியா* இடது பக்கமும் வெடித்துவிட்டது"... இத்யாதி. உடல் தொடர்பான மனச்சோர்வு அவரது சுறுசுறுப்பைப் பாதிக்கவே இல்லை. அமெரிக்க எழுத்தாளர் லூயி ஃபிஷ்ஷர் ஸி. ஆரைச் சந்தித்த பிறகு அவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"உங்களை அன்புடன் நான் கடிந்து கொள்ளலாமா? நேற்று என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது உங்களை ஒரு சோனிப் பயல் என்று வர்ணித்துக் கொண்டீர்கள்! என்றுமே சோனிப் பயலாக இருந்து வந்திருப்பதாகவும் குறிப்பிட்டீர்கள். ஆனால் சோனியாகவே 73 வயது வாழ்ந்து விட்டீர்கள். எனவே சோனியாகவே தொடர்ந்து இருந்து ஆயுளை மேலும் மேலும் நீடித்துக் கொண்டே போகலாமே..."

* ஹெர்னியா: உடலின் உள் உறுப்பு ஒன்று இயல்பாக இருக்க வேண்டிய நிலையிலிருந்து மாறி, ஜவ்வுகளைக் கிழித்துக் கொண்டு இடம் பெயர்ந்து இருப்பது. மிகுந்த வலி அளிக்கக் கூடிய இந்நிலையை விசேஷ பெல்ட் அணிந்து நீண்ட காலம் சமாளித்து வந்த ராஜாஜி, முதிர்ந்த வயதில் வெற்றிகரமாக ஆபரேஷன் செய்து கொண்டார்.

அவருடைய பலவீனமான உடலைக் காத்தது எது? அவருடைய நேரமும் உடல் சக்தியும் வீணாகாமல் மிச்சம் பிடித்துத் தந்தது எது என்றால், கட்சியின் அடித்தளத்தைப் பலப்படுத்தும் முயற்சியிலும் அவர் இறங்காததுதான். அவருடைய வீட்டிலோ அல்லது காரியாலயத்திலோ அவருடைய அறைக் கதவைத் திறந்து கொண்டு கட்சிக்காரர்கள் யாரும் உள்ளே நுழைந்து விட முடியாது. இப்படிக் கட்சிப் பணிகளிலிருந்து அவர் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டது, உடலுக்கு உதவியது; நிர்வாகத்தைத் தூய்மையாக வைத்திருந்தது; ஆனால் அரசியல் ரீதியாகப் பெரிய குறைபாடாக விளங்கியது. இதன் பாதிப்பை அவர் சீக்கிரமே உணரவிருந்தார்.

எத்தனை வேலைகள் இருந்தாலும் புத்தகங்கள் படிப்பதை அவர் நிறுத்தவில்லை. அவை ஒரு மாறுதலாக அமைந்தன. அந்த வயதிலும் ஆச்சர்யப்படும் விதமாகக் கண்கள் ஒத்துழைத்தன. ஓரிடத்தில் கலவரம் ஏற்படலாம் என்று அனுமானித்துக் கவலை கொண்டு, முதலமைச்சரின் கருத்தறிய விடிவதற்கு முன்பே பங்களாவுக்கு வரும் போலீஸ் அதிகாரிகள், அவர் அந்த நேரத்திலும் அமைதியாகச் சாய்வு நாற்காலியில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருக்கக் கண்டு வியந்திருக்கிறார்கள். ஒரு முதலமைச்சர் செய்யத் தேவையில்லாத காரியங்களைக் கூட அவர் செய்வார்; அதிலே ஆளை மயக்கியும் விடுவார்! இதற்காக மதிப்புமிக்க நிமிஷங்களைச் செலவழிக்கத் தயங்க மாட்டார்! உதாரணமாக, ஆர். கே. நாராயண் எழுதியதைப் படித்து விட்டு அவருக்குப் பின்வருமாறு கடிதம் வரைந்தார்:

"சில சமயம் நமக்கு அதிர்ஷ்டம் இருந்து, அது நேரத்தையும் படிக்கின்ற மனநிலையையும் நமக்கு இணைத்துத் தருகின்றது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் ஹிந்துவில் எழுதியதைப் படித்தேன். அதில் விகசித்த ஆற்றலும் மின்னொளியும் என்னைச் சொக்க வைத்தன. ஒரு சந்தோஷம் என்னை மூழ்கடித்து விட்டது..."



சொக்க வைத்தவர்

தார்ன்டன் ஒய்ல்டர் எழுதிய The Bridge of San Luis Rey என்ற நூலை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படித்துவிட்டு, "அற்புதமாக இருந்தது" என்று வர்ணித்ததோடு, அதில் தாம் கண்ட சில அச்சுப்பிழைகளையும் குறிப்பிட்டு, நூலைப் பிரசுரித்தவர்களுக்குக் கடிதம் எழுதினார்! தமிழ் உயிர் எழுத்துக்களை ஆங்கிலத்தில் எப்படி எழுதலாம் என்று ஹிந்து நாளிதழுக்கு அறிவுரை வழங்கினார்! ஹிந்தி எழுத்துச் சீர்திருத்த மாநாட்டுக்கு ஸி. ஆரின் ஆசியை மட்டுமே உ. பி. முதலமைச்சர் கோவிந்த வல்லப பந்த் கேட்டிருக்க, ஸி. ஆரோ, ஹிந்தி எழுத்துச் சீர்திருத்தத்துக்குத் தமது மதிநுட்பம் மிக்க யோசனைகளையும் தெரிவித்தார்! அரசுப் பணிகளிலும் கவனத்தைச் சிதற விடாமல் அனைத்தையும் கூர்ந்து கவனித்தார். சென்னை நகரில் அப்போது காலரா பரவத் தொடங்கியது. காலராப் பிரதேசமாக அறிவித்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான கவர்னரின் உத்தரவு, 'சென்னையைக் காலராப் பிரதேசமாக அறிவிப்பதில் கவர்னர் "மகிழ்ச்சி அடைகிறார்" என்று ஆரம்பமாயிற்று! ஸி. ஆர்., அரசு உத்தரவில் காணப்பட்ட இந்த அபத்தத்தைச் சட்டென்று கண்டுபிடித்துத் திருத்தினார்.

முதலமைச்சர் ஸி. ஆரைக் காண வந்த பிரமுகர்கள் பட்டியல் மிக நீளமானது. பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பிரமுகர் அனூரின் பெவான்; மவுண்ட்பாட்டன் மனைவி எட்வினா; ஐஸன்ஹோவரை எதிர்த்துப் போட்டியிட்ட அமெரிக்க ஜனநாயகக்கட்சித் தலைவர் அட்லாய் ஸ்டீவன்ஸன்; அமெரிக்கத் துணை ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் முதலியோர் அந்தப் பட்டியலில் காணப்படும் சிலர். இவர்களில் ஸ்டீவன்ஸன் தம்மைக் கவர்ந்ததாக ஸி.ஆர். ஒரு சமயம் குறிப்பிட்டார். நிக்ஸனோ, தாம் தமது இந்த உலகச் சுற்றுப் பயணத்தில் எத்தனையோ ஜனாதிபதிகளையும், பிரதமர்களையும், அரசர்களையும் சந்தித்ததாகவும், நினைவில் நிற்கக் கூடிய சந்திப்புகளில் மிக முக்கியமானது ராஜாஜியுடன் நிகழ்ந்த ஒன்றுதான் எனவும் பின்னால் எழுதினார். அன்றைய அமெரிக்க கான்ஸல் ஜெனரலாகச் சென்னையில் இருந்தவர் ராம்ஸே. இந்தச் சந்திப்பின் போது உடனிருந்த அவர், 'ராஜாஜிக்கு நிக்ஸனிடம் விசேஷ ஈடுபாடு ஒன்றும் ஏற்படவில்லை' என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு புதிய புதிய சுவாரஸ்யமான சந்திப்புக்கள் ஒரு பக்கம் இருந்து வந்தாலும், இன்னொரு புறம் ராஜாஜி தமது நீண்ட நாள் நண்பர்கள் பலரை ஒருவர் பின் ஒருவராக இழந்து துயருற்றும் வந்தார். "நமது வயதில் மைல் கற்கள் என்பன நடுகற்களே!" என்று நண்பர் ராமராவ் ஒருமுறை குறிப்பிட்டது உண்மையாகி வந்தது.

(தொடரும்)




பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 250/- ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2500/- மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ. 250/- அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.

இந்த நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு



உங்கள் திறமையைப் பிரதிபலிக்கச் செய்வது உங்கள் சமையல் பாத்திரங்கள்.



நான் உபயோகிப்பது...

உயர்ந்த தரமான
பாத்திரங்களுக்கான
இந்திய அரசின்
தேசிய விருதினைப் பெற்றது.

காளி

காப்பர்-பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்

38 வருட சிறந்த அனுபவம் பளிச்சிடுவது

kali kali ISI

ISI முத்திரை பெற்றது.

காளி: கவர்ச்சியானது மட்டுமல்ல. சிக்கனமாயும் சீக்கிரமாயும் சமைக்கவல்லது.

விற்பனை ஏஜெண்ட்: ஸ்ரீவித்யா ஏஜன்சீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136.
விற்பனை ஷோரூம்: ஸ்ரீ M.V.M. ஸ்டோர்ஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136.
மண்டல ஏஜெண்டுகள்: சம்மு & கோ., த.பெ.எண். 3622, மகாத்மா காந்தி ரோடு, எர்ணாகுளம், கொச்சின் 682 035. போன்: 361139. ● விக்டரி மெட்டல்ஸ், 101, சேத்வாடி மெயின் ரோடு, பம்பாய் 400 004. போன்: 354507/380075.
● தினேஷ் எண்டர்பிரைசஸ், 41/1942, நயிவாலா, கரோல்பாக், புதுடில்லி 110 005. போன்: 5716923.

ADWAVE/KBS/3428 TAM A R

சின்னச் சின்னச் செய்திகள்:



● நாய்களுக்கான கல்லறை, பூனைகளுக்கான மருத்துவமனை எல்லாம் அமெரிக்காவில் சர்வ சகஜம். ஆனால் ஜப்பானியர் இதையும் மிஞ்சி விட்டார்கள்! பணக்கார ஜப்பானியர்கள், தங்கள் நாய்களுக்கு நீச்சல் உடைகள் அணிவித்து மகிழ்கிறார்கள். தங்கள் 'காதலி'களைச் சந்திக்கும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். யோகா, திருமணம், இறுதிச் சடங்குகள் என்று இந்தச் செல்லப் பிராணிகள், ஜப்பானில் இரண்டு பில்லியன் டாலர் தொழிலுக்குக் காரணமாக இருக்கின்றன!

● குறட்டை விடுவதை அறவே ஒழிக்க, சீனாவில் புதிய மருந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

● பூனாவிலுள்ள ஒரு நிறுவனம், ஒரு மணி நேரத்தில் 4,000 சப்பாத்திகள் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. கான்டீன்கள், மருத்துவமனைகள், கல்விக் கூடங்கள், முதலியன இதற்கு நல்ல ஆதரவு கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறது அந்த நிறுவனம்.

● ஆப்பிரிக்காவில் பயிர்களை அழிக்கும் ராட்சச வெட்டுக்கிளிகளை ஒழிக்கச் சுமார் 240 மில்லியன் டாலர்கள், வரும் பத்து மாதங்களில் தேவைப்படும் என்று ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயத் துறை டைரக்டர் ஜெனரல் சொல்லியிருக்கிறார். சுமார் எழுபது லட்சம் ஹெக்டேர் நிலங்களை இந்த வெட்டுக்கிளிகள் பாழாக்கியிருக்கின்றன.

● மணல் பாங்கான அராபியக் கடற்கரை ஓரங்களில் நீருக்காக வாடி நிற்கும் தாவரங்கள் இருக்கின்றன. இருந்தாலும் மழை வேண்டி அங்கேயுள்ள விவசாயிகள் பிரார்த்தனை செய்வதில்லை. மாறாக, SOS–7 என்னும் அலாதியான செடியைக் கடல்நீர் கொண்டு வளர்க்கிறார்கள். உலகின் பல இடங்களில் உண்டாகும் பஞ்சத்துக்கு, இந்தப் புதுவகைச் செடி உதவும் என்று கருதப்படுகிறது.

● அமெரிக்காவில் சான்டிரா என்ற பெண்மணியிடம் பத்துக்கும் மேற்பட்ட நாய்கள் இருக்கின்றன. அக்கம்பக்கத்துக்காரர்கள் அவை போடும் சத்தம் சகிக்க முடியவில்லை என்று புகார் செய்தார்கள். நாய்களை இழக்க விரும்பாத சான்டிரா, கட்டடக் கலைஞரான தம் கணவரிடம் ஒரு அதி நவீன நாய்கள் காப்பகம் கட்டச் சொன்னார். காப்பகத்தில் என்னென்ன இருக்கின்றன தெரியுமோ? குளிர்காலத்திலும் வெயில் காலத்திலும் மாறி மாறி உஷ்ணப்படுத்தும் அல்லது குளிர்விக்கும் வசதி, கலர் டீ.வி., ஜன்னல்களுக்கு உயர்ரக திரைச்சீலைகள், ஓடி விளையாட விசாலமான தோட்டம், குளிர்காலத்தில் நாய்கள் போர்த்திக் கொள்ள வெள்ளைக் கம்பளிகள்... நாய்கள் பாடு யோகம்தான்!

● இருபத்தேழு வயது சீனிவாசராவும், இருபத்தாறு வயது ஞானசேகரனும் சைக்கிளில் உலகச் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். 50,000 கிலோமீட்டருக்கு மேல் பயணம் செய்து இப்போது தெற்கு ஜெர்மனியை அடைந்திருக்கிறார்கள். நோக்கம்: உலகம் முழுவதையும் அமைதி இணைக்க வேண்டும்!

● பங்களாதேஷில் வெள்ளப் பெருக்கத்தால் ஆயிரம் பேருக்கு மேல் இறந்து போனார்கள். இதில் முந்நூறு பேருக்கு மேல் பாம்பு கடித்தே இறந்து போனார்களாம்! சாலையில் தேங்கியிருக்கும் வெள்ளத்தை வடிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மக்களை, தண்ணீரில் நீந்தி வந்த ஏராளமான, விஷமுள்ள பாம்புகள் கடித்து விட்டனவாம். வெள்ள நீரைத் தவிர்த்துக் கரை ஏற முயன்ற பாம்புகள் இவை.

— எஸ். வி. என்.

ஒரு மணி நேரத்தில் 4000 சப்பாத்தி!





நல்லவன்



விஜய்காந்தும் விஜய்காந்தும் இணைந்து நடித்திருக்கும் படம். ஒருவர் பொறுப்பே இல்லாமல் ஊர் சுற்றி வருகிற விடலைக் காளையாகச் சித்திரிக்கப்படும் நல்லவன். இன்னொருவர் வக்கீலாகக் கொழித்துக் கொண்டிருக்கும் நல்லவன்.

கஸ்டம்ஸ் கலெக்டராக ராதிகா. கப்பலில் வந்து கள்ளத்தனமாக இறங்கும் வைரத்தைப் பிடிக்க, அவர் கஸ்டம்ஸ் ஆஃபீஸில் டாக் டாக் என்று அலைந்து, விக்குக்குள் மறைந்திருக்கும் வைரப் பொட்டலத்தை (பல் பொடி பொட்டலம் மாதிரி இல்லை?) கண்டு பிடித்துவிட, வில்லன் டபக் என்று துப்பாக்கியை நீட்டி கலெக்டரை மடக்கிவிட, விஜய்காந்த் ஆஜர். கப்பல் தளத்தின் மேல், கிரேனால் தூக்கப்படும் காரின் மேல் என்று ஒரு ரீலுக்குச் சண்டை போட்டுக் கடைசியில் காவலர்களைக் கூப்பிட்டு கள்ளக்கடத்தல் ஆசாமிகளை ஒப்படைக்கிறார். அப்புறம் நண்பர்களுடன் ஊட்டி போகும்போது இடையில் கஸ்டம்ஸ் கலெக்டரின் பி. ஏ. வாணி விஸ்வநாத் வந்துவிட அவருடன் டூயட் பாடி காதலிக்கிறார். ஊட்டி ஹோட்டலில் மறுபடி ஒரு சண்டை. மெட்ராஸ் வந்ததும் காஷ்மீர் போகிறார். காஷ்மீரில் ஒரு ரீலுக்கு வாட்டர் ஸ்கீயிங்கில் டூப்புடன் கலந்து கொள்கிறார். அப்புறம் ஒரு பாட்டு பாடுகிறார். அப்புறம் ஒரு சண்டை இடுகிறார். இந்தச் சண்டையின் முடிவில்தான் டைரக்டர் கதையைப் பற்றி யோசிக்கவே யோசித்து, வக்கீல் விஜய்காந்த் காஷ்மீரில் ஒரு டான்ஸரைக் கொலை செய்து விட்டதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டு இடைவேளை விட்டுவிடுகிறார்.

இடைவேளைக்குப் பிறகு?


வழக்கமான கதைதான்! கொலை செய்ததாகச் சொல்லப்படும் அண்ணன் விஜய்காந்த் நிஜமாகவே கொலை செய்யவில்லை. செத்துப் போனதாகச் சொல்லப்படும் டான்ஸர் டிஸ்கோ சாந்தி நிஜமாகவே செத்துப் போகவில்லை. எல்லாம் வில்லன் கிட்டியின் திருவிளையாடல். மறுபடி டிஷ்யூம், டிஷ்யூம், மார்க்கெட்டில் துரத்தல், சோகமாய் ஒரு பாட்டு. சுபம் — நல்லவன்.

'கதையைச் சொல்லிட்டா ஆச்சா? விமர்சனம் என்ன?' என்று கேட்பவர்களுக்கு:

நிறைய செலவு செய்திருக்கிறார்கள் — திருப்தியாக அல்ல. சவசவ.

— ஜெயமன்மதன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



நான் ஸின்த்தால் உபயோகிக்கிறேன். நீங்கள்?
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
வினோதின் உடலுக்கும் உள்ளத்திற்கும் தன்னம்பிக்கை தருவது ஸின்த்தால்.
MADISON-C-001-TAM

REGISTERED No. M. 43[illegible]
Registered as a Newspaper in Sri Lanka